தமிழர்

# குருஷேத்திரக்கீதை



சித்ரா மணாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் குருஷேத்திரக்கீதை

*சித்ரா மணாளன்*

ஈழநாடு பதிப்பகம்
தபாற்பெட்டி இலக்கம் 873 ஸ்டேசன் "கியூ"
றொறன்ரோ - ஒன்ராறியோ M4T 2N7
கனடா
தொலைபேசி இலக்கம் (416) 654 - 9825



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் குருஷேத்திரக்கீதை (களத்தில் கவனிப்பு)

முதற் பதிப்பு: 26 செப்டெம்பர் 1998

நூலாசிரியர்: சித்ரா மணாளன்

பதிப்பாசிரியர்: T.K.பரமேஸ்வரன்

பதிப்புரிமை: சித்ரா மணாளன்

அச்சமைப்பு / வடிவமைப்பு: T.K பரமேஸ்வரன்

அட்டைப்பட அமைப்பு: சசி பத்மநாதன்

வெளியீடு: ஈழநாடு பதிப்பகம் ரொறன்ரோ - கனடா

புத்தக அச்சுப்பதிப்பு: விவேகா அச்சம்

இந்நூலில் உள்ள விடயங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டவை. நூலாசிரியரின் அனுமதியின்றி மீள் பிரசுரம் செய்ய முடியாது.

**Published By: EEZHANANU PATHIPPGAM**
**P.O.BOX 873**
**STATION'Q' - TORONTO**
**ONTARIO - M4T 2N7**
**CANADA**
**Tel/ Fax (416) 654 - 9825 / 652 - 1867**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

என் அன்புத் தமிழ் மக்களே!

கனடா ஈழநாடு பத்திரிகையில் கடந்த ஓராண்டு காலமாக நான் எழுதி வரும் "தமிழர் குருஷேத்திரக்கீதை"யின் முதல் அத்தியாயமான "களத்தில் கவனிப்பு" நூலுருவில் தங்கள் கரங்களை வந்தடைகின்றது.

இந்த உலகியல் வாழ்வில் அறியாமையினுள் சிக்கிச் சிரமப்படும் மக்களை அதிலுருந்து விடுதலை செய்வதுடன் மனிதர்களையே கடவுளாக உயர்த்தும் மின உயர்ந்த தத்துவத்தின் முதற்பாகத்தைத் தங்களிடம் கையளிப்பதில் மிக மகிழ்ச்சியடைக்கின்றேன். இந்துக்களின் அடிப்படைத் தத்துவங்களான வேதாந்தங்கள் சிரத்தையை மட்டுமே போதிக்கின்றன. ஆனால் பகவத்கீதை மட்டுமே பக்தியை மீண்டும் மீண்டும் விளங்கப்படுத்துவதோடு அந்தத் தத்துவத்தின் உச்சத்திற்கே மக்களை அழைத்துச் சென்று அவர்களின் மாயையே உடைத்தெறிந்து முக்தியுடன் இணைத்து விடுகின்றது அந்த வகையில்

கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையில் எழுந்த உரிமைத் தகராறு மாயை வசப்பட்டு சமாதானத்தையே தோல்வி காண வைக்கிறது. போர் என்ற தீர்வுக்கு வருகின்றது. இதுவே மகா பாரதப் போர் நூறு சகோதரர்களான கௌரவர் களிடமிருந்து ஐந்து சகோதரர்களான பாண்டவர்களுக்கு உரிமையைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமே தர்மத்தின் ஒளியில் மக்கள் வழி நடக்க முடியும் என்று தீர்மானித்த கிருஷ்ண பரமாத்மா பாண்டவர்கள் பக்கம் தலைமை தாங்கியதோடு தனது பக்தனான அர்ச்சுனனுக்கு தேர்ச்சாரதியாகவும் அமர்ந்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பொருளோடு களம் புக விருப்புக் கொண்ட அர்ச்சுனன் தனது பெரியப்பாவின் மக்களையும் தனக்குப் போர்க்கலை போதித்த குருமார் களையும் அழித்தே தர்மத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற அவனது நிலைப்பாடு அவனுடைய இதயத்தில் பந்தபாச உணர்வுகளை அஸ்த மிக்கச் செய்து தர்மத்தின் உணர்வையே பிரகாசிக்க வைத்தது. ஆனால் தர்மம் பற்றித் தனக்கிருக்கும் இந்த நிறைவு சாதாரண மக்களிடம் இருக்க முடியாது என்பதை நன்குணர்ந்த அர்ச்சுனன் அவர்களுக்கு எழும் ஐயப்பாடுகளை தனதாக்கிக் கொண்டு பரமாத்மா விடம் கேட்கவே அவர் அளித்த பதில்களே பகவத்கீதை.

அதைப் போலவே இலங்கையில் சிங்களவர் - தமிழர் உரிமைப் போர் அமைந்துள்ளது. இது பற்றித் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் 1984 மார்ச் மாதம் 11,17ம் திகதிகளில் இந்தியாவில் இருந்து வெளிவரும் "சண்டே" என்ற ஆங்கில சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறுகின்றார்.

"இலங்கையின் ஜனநாயகப் பாராளுமன்ற அமைப்பு அல்லது இலங்கையின் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறபான்மையினர் மீது திணித்து வந்துள்ளது. அந்த அரசமைப்பானது எங்கள் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணத் தவறி விட்டது என்பது டன் எமது நிலையை மேலும் மோசமாக்கி விட்டது. காலங்காலமாக அரச ஒடுக்குமுறை ஆட்சியானது எம் மக்களின் வாழ்வு நிலையை சகிக்க முடியாததாகவும் துன்பகரமானதாகவும் மாற்றி விட்டது.

எம் மக்கள் நடத்திய சாத்துவீக ஜனநாயகப் போராட்டங்கள் இராணு வத்தால் நசுக்கப்பட்டன. எமது நியாயமான கோரிக்கைகள் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டதுடன் இந்த அடக்குமுறையானது தமிழ் மக்களின் உயிர் வாழ்வுக்கே ஆபத்தாக அமைந்தது. இத்தகைய சூழ்நிலைகளே ஒரு விடுதலை இயக்கத்தை உருவாக்க என்னைத் தூண்டின. தங்களைப் பாதுகாத்துக் கொள்ள மட்டுமல்ல சிங்கள அடக்குமுறையில் இருந்து இறுதியாகத் தங்களை விடுவித்துக் கொள்ளவும் எம் மக்களுக்கு ஆயுதப் போராட்டமே நடைமுறைச் சாத்தியமான ஒரே வழியென்று நான் உணர்ந்தேன் என்கின்றார்.

தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களதும் போராளிகளதும் இந்த உணர்வின் உண்மை அவர் தலைமைப்படுத்தும் இனத்தவரிடையே இல்லை. இருந்திருப்பின் அவர்கள் சிங்களப் பேரினவாத அரசுகளு டன் இணைந்திருக்கவே மாட்டார்கள். அவர்களின் முரண்பாடுகளை பரம்பொருள் மூலம் தீர்வுக்குக் கொண்டு வந்து முழுத் தமிழ்மக்களும் தங்கள் போரின் நியாயத்தைப் புரிந்து கொண்டு அந்த நியாயமே உலக தர்மம் என்பதை நிலை நாட்டவே தனது நிறைவான உள்ளத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் குறைவானவர்களின் கேள்விகளால் நிறைத்து எல்லாம் வல்ல பரம்பொருளிடம் கேட்கவே அவர் அளித்த பதில்களே "தமிழர் குருஷேத்திரக்கீதை"

பாரதப் போரை முடித்துக் கொண்டு பாண்டவர்களிடம் இராச்சியத்தைக் கொடுத்த பின் கிருஷ்ணர் தனது தேர்ச்சாரதியான உத்தவரிடம் என்ன வேண்டும் என்று கேட்ட போது உத்தவர் தனக்கு ஏற்பட்ட சந்தேகங் களை கிருஷ்ண பரமாத்மாவிடம் கேட்கவே அவர் அளித்த பதில்களே உத்தவக்கீதை.

உரிமைப் போரான குருஷேத்திரப் போர்க்களத்தில் கிருஷ்ண பரமாத்மா உபதேசித்த அந்த இருபெரும் உபதேசங்களும் என் உணர்வோடு கலந்த போது என் தாயகமான தமிழீழப் போர்க்களமும் என் ஆன்மீகப் பார்வையில் குருஷேத்திரமாகக் காட்சி தரவே என் சிந்தனையில் பிறந்தது தான் தமிழர் குருஷேத்திரக்கீதை.

ஆன்மீக உலகங்களின் மூலம் நானே. எல்லாம் என்னிடமிருந்தே தோன்றுகின்றன என்று பகவத்கீதை அத்தியாயம் பத்தில் பதம் எட்டில் பரமாத்மா அருளியதன் பிரகாரம் அவரே என் மூலம் இந்தக் கீதையை உருவாக்கியிருக்கின்றார் என்ற எனது நம்பிக்கை இது ஒரு சமயத்தை மட்டும் பிரதிபலிக்கும் நூலாக அமையாமல் எல்லா சமய நோக்கங் களையும் சங்கமமாக்கும் ஒரு பெரும் சமுத்திரமாக பிரவாகிக்க வேண்டும் என்பதனாலேயே இதற்கு "தமிழர் குருஷேத்திரக்கீதை" என்று பெயரிட்டேன்.

பகவத்கீதை என்பது வைஷ்ணவ சமயத்தின் நூல் என்ற வரைமுறையும் பாரதப் போரை கிருஷ்ணரே முன்னின்று நடத்தினார் என்ற நிலைப்பாடும் என்னுமொரு சமயத்தை இதற்குள் இணைத்துக் கொள்வதற்கு தடை யாகுமோ? சைவ சமயத்தவரான மேதகு பிரபாகரன் அவர்களை கிருஷ்ண பரமாத்மாவுடன் அமர்த்துவதால் சைவசித்தாந்தவாதிகள் தங்கள் சித்தாந்தப் போரைத் தொடுப்பார்களோ? என்ற என் எண்ண ங்களை பகவத்கீதையே உடைத்தெறியக் கண்டேன். எல்லா உருத்திரர் களில் நான் சிவபெருமான் என்று பகவத்கீதை அத்தியாயம் பத்து பதம் இருபத்திமூன்றின் கருத்தும், படைத்தலைவர்களில் நான் போரின் இறைவனான முருகன் என்ற பதம் இருபத்தினான்கின் நிலைப்பாடும் பாரதப் போரை சிவனும் முருகனுமே நடத்தினார்கள் அதை கிருஷ்ணரே வெளிப்படுத்தினார் என்ற முடிவையே எடுக்க வைத்தது. அத்துடன் முருகனே தமிழாகவும் மேதகு பிரபாகரன் அவர்களதும் போராளிகள தும் கழுத்தில் தொங்கும் நஞ்சு அவர்களைச் சிவனாகவும் என் எண்ணத்தில் பதிய வைக்கவே தமிழீழப் போர்க்களம் தர்மத்தை உபதேசிப்பதற்கு ஏற்ற நிறைவான குருஷேத்திரமாக அமைந்ததைக் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே என் பொருளுரை சமய, இலக்கிய, இதிகாச வரலாறுகளுடன் இன்றைய நிகழ்வுகளையும் தாங்கி நீண்ட உரையாக அமைந்ததன் காரணமே புலிகளின் போரையும், தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் சிந்தனைகளையும் அவை நியாயப்படுத்தி அங்கீகரிப்ப தோடு இன்றைய உலகம் இந்தப் போரைத் தர்மத்தின் போராகக் கருதி அங்கீகரிப்பதற்கு அது துணைபுரியும் என்ற நம்பிக்கையே. அதர்மம் தன் ஆதிக்கத்தை ஆளுமைப்படுத்தும் போது அதை அழித்து தர்மத்தைக் காப்பாற்ற நான் மீண்டும் வருவென் என்று உறுதியளிக் கின்றார் பகவத்கீதையிலே கிருஷ்ணர். எப்படியெனில்

இந்த யோக விஞ்ஞானத்தை நான் சூரிய தேவனான விவஷ்வானுக் கும் விவஷ்வான் மனிதகுலத் தந்தையான மனுவுக்கும் மனு இஷ்வாகு மன்னனுக்கும் இதை முறையே உபதேசித்தனர் என்ற பகவத்கீதை அத்தியாயம் நான்கில் பதம் ஒன்றின் பிரகாரம் இந்தச் சங்கிலித் தொடரான வேதவிஞ்ஞானம் கால வெள்ளத்தால் அழிந்து போகவே மீண்டும் மகாபாரதப் போரில் வைத்து அர்ச்சுனன் மூலம் உபதேசிக்கின்றார் பரமாத்மா. இது நடந்து ஐயாயிரம் வருடங்கள் கடந்து விட்டதாக ஞானிகளின் வரலாறு மூலம் அறிய முடிகின்றது. ஆனால் இன்று உலகம் பூராகவும் நடைபெறும் போர்களும் வல்லரசு நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு மக்களின் வரிப்பணத்தில் அணுக்குண்டுகள் செய்வதும் அதர்மம் மீண்டும் உலகைத் தன் ஆளுமைக்குள் வசப்படுத்தியதையே நிதர்ஷிக்கின்றது. எனவே தான் தமிழீழப் போர்க்களத்தில் இதை உபதேசிக்கின்றார் பரம்பொருள்.

பதினெட்டு நாட்கள் நடந்த பாரதப்போரில் அர்ச்சுனனை பல பெயர் களாலே வியந்தழைக்கும் பரமாத்மா பதினெட்டாம் நாள் கடைசிப் போரில்

பாரதர்களில் சிறந்தோனே! இப்போது துறவைப் பற்றி எண்ணிடமிருந்து கேள். மனிதர்களில் புலி போன்றவனே சாஸ்திரங்களில் மூன்று விதமான துறவுகள் விளக்கப்பட்டுள்ளன என்ற பகவத்கீதை அத்தி யாயம் பதினெட்டு பதம் நான்கின்படி இன்று மனிதர்களில் புலிகள் என்று அழைக்கப்படும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உபதேசிப்பதே பொருத்தமானது என்ற எனது முடிவை என் இனிய நண்பர் இராச மைந்தன் அவர்களுக்குச் சொன்ன போது அவர் தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகப் புலவர்கள் குழு தொகுத்தளித்துள்ள கழகத் தமிழ் அகராதி பக்கம் அறுநூற்றி எழுபத்தாறை ஆதாரம் காட்டி சூரியனுக் குப் பிரபாகரன் என்று பெயர் உண்டு. எனவே சூரிய தேவனான பிரபாகரனுக்கே இந்தக் கலியுகத்தில் பரமாத்மா உரைப்பதாக இந்தக் கீதையை அமைக்குமாறு பணித்தார். இந்தப் பணிப்பு என் இதயத்தில் ஒரு தெய்வீக உணர்வினை ஏற்படுத்தக் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு தவறுக்காக அஸ்தினாபுரத்து அரசன் பாண்டு தனது குந்தி, மாந்திரி என்ற இரு மனைவிமாருடன் வனம் புகுந்து அங்கே ஐந்து பாண்டவர் களைப் பெற்று விட்டு மரணிக்கவே அந்த வனத்திலுள்ள ஞானிகளால் பதினொறு வருடங்கள் வளர்க்கப் பட்ட அவர்கள் நாடு வந்து கௌரவர் கொட்டமடக்கி தர்மத்தை ஆட்சி பீடம் ஏற்றினார்கள் என்ற பாரதப் போரின் நிகழ்வின் பார்வையில் பதினாறு வருடங்கள் தம் பெற்றோராலும் உற்றார், உறவினர்கள், ஆசிரியர்களாலும் மிகப் பாசமுடன் வளர்க்கப் பட்ட தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் புலியாகத் தன் சக போராளிகளோடு போர்க்களம் புகுந்து சிங்கள அரசின் அக்கிரமங்களை உடைத்தெறிந்து தர்மத்தின் சிம்மாசனத்தில் தமிழையும், மனித நேயத்தையும் அமர்த்துவார்கள் என்ற நம்பிக்கையே வன்னி வனம் புகுந்த புலி வீரர்களுக்கு முக்காலமும் உணர்ந்த தமிழ்ஞானி உரைப்ப தாக இந்தத் தமிழர் குருஷேத்திரக் கீதை அமைகிறது

பூட்டி வைக்கப்பட்டிருந்த மூவர் தேவாரங்களையும் நம்பியாண்டார் நம்பி யும், இராஜராஜசோழனும் எடுத்த வேளையில் அதைப் பூச்சி அரித்தி ருப்பதைக் கண்டு கவலையுற்ற இராஜராஜசோழனுக்கு தற்காலத் திற்குத் தேவையானது மட்டும் இருக்கிறது. தேவையற்றவை அழிந்து விட்டது என்ற நம்பியின் அருள்வார்த்தையை இன்று தெய்வம் எனக் களித்த அருள்வாக்காக ஏற்றுக் கொண்டு கௌரவர்கள் - பாண்ட வர்கள் சம்பந்தப்பட்டதை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக தமிழீழப் போர்க்கள நிகழ்வுகளை புகுத்தி இக்கீதையை நகர்த்துகின்றேன். இதனால் பகவத்கீதையின் சாரம் எள்ளளவும் பாதிக்கப்படவில்லை என்பதை வாசகர்கள் கவனத் தில் கொள்வது மிகப் பயனுடையதாகும்.

சுவாமி பிரபுபாதா எழதிய பகவத்கீதையை ஒட்டியே பதங்கள் அமைகின்றன. கவிஞர் கண்ணதாசன், மகாகவி பாரதியார் ஆகியோரின் கீதை உரைகளில் இருந்து நயமான சொற்பதங்களையும் புலிகளின் போரியல் தர்மங்களுக்கு ஏற்றவகையில் பதங்களிலும் பொருளுரை யிலும் சில திருத்தங்களைச் செய்து பகவத்கீதையின் ஒழுங்கு நிரையில் இந்தக் களத்தில் கவனிப்பைப் பூரணப்படுத்தியுள்ளேன்.

என் ஆசான் மாமனிதர் எஸ்.கே.மகேந்திரன் அவர்களுடன் இருபத்தி யொரு ஆண்டுகள் நான் வைத்த தூய நட்பு அதனால் அவருடன் அறிவியல் ரீதியாக நான் விவாதித்த பல விடயங்கள் அவர் எனக்கு ஊட்டிய அறிவுரைகள், அவரின் மறைவின் பின் அவருடைய சொந்த நூலகமான சத்தியா நூலகம் எனக்களித்த அரிய நூல்களும் நண்பர் ரீ.கே.பரமேஸ்வரன் தந்துதவிய நூல்களும் மற்றும் இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் படைப்புக்களுமே இப்படியொரு நூலை எழுதும் ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் எனக்குத் தந்துள்ளது.

நல்ல நண்பர்களே மிகச் சிறந்த புத்தகம் என்பதில் மிக நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவன். அநுபவத்தில் அதை உணர்ந்தவன். இக்கீதை உருவாக அவர்களின் பங்களிப்பு பெரும் உதவி புரிந்துள்ளது. எனவே அவர் களை இங்கு நினைவு கூருதல் பொருத்தமுடையதே.

கவிஞர் கண்ணதாசனுக்கு வாய்த்த இராம. கண்ணப்பன் போல் இத்துறையில் என்னுடன் பயணித்துக் கொண்டிருக்கும் என் இனிய நண்பர் இராச.மைந்தன், எமது இந்துசமயச் சடங்குகள், சம்பிரதா யங்கள் மீளமைக்கப்பட்டு ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமுதாயம் உருவாக வேண்டும் என்ற சீரிய எண்ணத்தை தன் வாழ்நாளில் கொண்டியங்கும் என் அண்ணன் கலைஞர் சண்முகநாதன் அவர்கள், சீரிய நோக் கோடும் தெளிந்த நல் அறிவோடும் எம் இனத்திற்கு பணியாற்ற வேண்டும் என தன் பள்ளிக்காலம் முதல் எண்ணி அதற்கேற்பவே வாழ்ந்து வரும் எஸ்.எம்.தனபாலன் ஆசிரியர் அவர்கள், டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம் அவர்கள், சமயப்பெரியார் புலவர் பறுவத ராஜன், கனடா பூவரசு ஆசிரியர் துரை.ரவீந்திரன் உதவி ஆசிரியர்கள் தி.கருணாகரன், இந்திரஜித், கி.சுதாகரன், எஸ்.எம்.மோகன், பத்ம.ரவீந் திரன், க.சண்முகசுந்தரம், நல்லை அருள் பிரபாகரன், சீ.திருச் செல்வன், இ.திருக்கேதீஸ்வரமூர்த்தி, தம்பி குகன், மைத்துனர் மிஸ்டர் பரம், நண்பர் கீதவாணி நடா.ராஜ்குமார், ஆசிரியர் என்.ஆர்.துரை, இன்னும் என் நினைவில் உடன் பெயர் வர மறுக்கும் நண்பர்கள் இவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் உள்ளத்தின் ஒளியாய் விளங்குபவர்கள். நன்றி என்னும் வார்த்தைகளால் இவர்களைப் பிரிக்காமல் இறுக்கமான நட்பினால் அணைத்துக் கொள்ளுகின்றேன்.

கனடாவில் தரமான ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளியிட்டு வரும் ஈழநாடு. இந்தச் சாதனையின் அத்திவாரம் அதன் ஆசிரியர் ரீ.கே.பரமேஸ்வரனின் இலக்கிய ஆர்வத்திலும் தமிழீழத் தாகத்திலுமே கட்டப்பட்டிருக்கிறது என்பதை 1996ம் ஆண்டு கலை-யரங்கம் விஷ்ணு அவர்களால் ஒழுங்கு செய்து நடத்தப்பட்ட மாவீரர் தின விழா உரையின் போது நான் புரிந்து கொண்டேன். அன்று எனது பேச்சைச் செவிமடுத்த அவர் ஈழநாடு பத்திரிகையில் தலைவர் பிரபா கரனை முன்னிலைப்படுத்தி புதியதொரு கீதையை எழுதுங்களேன் என்று கேட்டுக் கொண்டார். அதன் விளைவே ஒரு ஆன்மீகப் பார்வையில் தமிழீழ விடுதலைப் போரை எழுதத் தூண்டியதும் உங்கள் கரங்களில் தவழும் இந்தத் தமிழர் குருஷேத்திரக்கீதையும் ஆகும். அந்த நிலையை உருவாக்கிய என் இனிய நண்பர் ரீ.கே.பரமேஸ் வரனுக்கு என்றும் என் இனிய நன்றிகள் இதயத்தில் உண்டு.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய தமிழ்அறிஞை திருமதி வல்வை கமலா பெரியதம்பி அவர்களுக்கும், தங்கள் பார்வையில் இக்கீதை யைப் பற்றி பின்னுரை எழுதிய திரு திருநீலகண்டன் அவர்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையிலேயே வாழ்த்துரை எழுதிய புதியபாரதி அவர்களுக்கும், அட்டைப்படத்தை திறம்பட வடிவமைத்துத் தந்த சசி.பத்மநாதன் அவர் களுக்கும்,

இந்நூலை சிறப்பான முறையில் வடிவமைத்த ஈழநாடு ஆசிரியர் (கனடா) ரீ.கே.பரமேஸ்வரன் அவர்களுக்கும், அச்சமைப்புச் செய்த விவேகா அச்சகத்தினருக்கும் மற்றும் ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய அனை வருக்கும் என் அன்பு கலந்த நன்றிகள்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஈழநாடு பத்திரிகையில் இத்தொடரை வாசித்தும், வாசித்துக் கொண்டும் உற்சாகமும் உத்வேகமும் தந்த வாசகர்கள் அனைவருக்கும் காலத்தால் அழியாத என் நன்றிகள் உரித்தாகுக.

இறுதியாக என் எழுத்துலகப் பாதையிலும் என்னுடன் ஒன்றாகவே பயணிக்கும் என் துணையாள் சித்ராவுக்கும் அருமை மக்கள் அனு, ஜெயா ஆகியோருக்கும் நன்றியைக் கூறிக் கொண்டு வாசகர்களாகிய என்இனிய தமிழ்மக்களை மீண்டும் விரைவில் சந்திக்க எல்லாம் வல்ல ஆண்டவன் அருள்பாலிக்க வேண்டி விடை பெறுகின்றேன்.

" வேதாந்த சித்தாந்தப் பார்வையில் இது சித்தாந்தம்

சித்தாந்த வேதாந்த விசாரணையில் இது வேதாந்தம்"

வணக்கம்

என்றும் அன்புடன்

*சித்ராமணாளன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

காக்கும் தெய்வம் திருமாலின் திருக்கரத்தில் சுழல்கின்றது சக்கரம். அதே போல் சுழன்று சுழன்று வருகிறது இப்பூவுலகம். விரைந்து விரைந்து செல்கிறது காலம். அதனோடு நகர்ந்து நகர்ந்து செல்கிறது யுகம். யுகம் தோறும் தர்மம் குன்றும் போது அவதாரம் செய்பவன் பரமாத்ம சொரூபனான திருமால் தான். அவனது புனித வரலாறு கூறும் நூல் 'பாகவதம்'. தசாவதாரத் தத்துவம் அந்த நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அந்த அவதாரங்களில்...... 'மகாபாரத' காலத்தில் நிகழ்ந்த 'ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்' மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு மகிமை உடையதாகும்.

குளத்தில் பூப்பது பொங்கு தாமரை. "குருஷேத்திரம்" என்ற போர்க் களத்திலே பூத்தது "பகவத்கீதை" என்னும் ஞானத் தாமரை. ஸ்ரீ கிருஷ்ணனை உண்மையாக அறிந்தவனே பகவத்கீதையின் உட் பொருளை அறிய முடியும். அவ்வாறு அறிந்தவன் ஒருவன் தான் அர்ச் சுனன். அந்தப் பார்த்தனுக்குத் தேர் ஓட்டியவன். அவனைத் தன் முதல் சீடனாக ஏற்றுக் கொண்ட பகவான் ஸ்ரீகிருஷ்ணன் "குருஷேத்திரம்" பந்தபாசம் என்னும் "மாயை"த் திரையை பார்த்தனின் பகுத்தறிவுப் பார்வையை மறைக்கும்படியாக போர்த்தி விடுகிறது. அந்த "மாயை"யைப் போக்கி விடுகிறான் பரமாத்மாவான மாயவன். இந்து சமயத்தவர் பலர் அறிந்த செய்தி தான் இது.

ஆனால் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற நோக்குடன் எம்மதமும் சம்மதம் என்னும் தாரக மந்திர உணர்வோடு.... முடிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை மதம் சம்பந்தமான நூல்களை விரும்பிப் படித்து, என் பொது அறிவை விருத்தி செய்ய அடியேன் சிறுவயது முதல் எவ்வளவோ முயற்சி செய்திருக்கிறேன். ஆயினும் "பகவத்கீதை" என்னும் அரிய, அறியாமை நோய் தீர்க்கும் அருமருந்தை..... ஆடு மேய்ந்தாற் போல் ஒரு சில பதங்களை ஓரளவு படித்தறியத் தான் என்னால் முடிந்தது. அந்த பார்த்தசாரதி திருவாய்மலர்ந் தருளிய "கீதோபதேசத்தை" ஒரு வரி விடாமல் படிக்கிற பக்குவம் எனக்கு இற்றைவரை வாய்க்க வில்லை.

இவ்வாறிருக்க.... "பகவத்கீதையை" ஆதியோடு அந்தமாகப் பல தடவை பாராயணம் செய்து அதையே தன் நூலுக்கு ஒரு அத்தி வாரமாகக் கொண்டு அதனை பதினெட்டுப் பாகம் கொண்ட ஒரு பாரகாவியமாகப் படைப்பதைத் தன் வாழ்வின் இலட்சியமாகக் கருதும் சித்ராமணாளன் அவர்கள் என்னைப் போய்த் தம் தமிழர் குருஷேத்திரக்கீதைக்கு அணிந்துரை வரையும்படி ஏனோ கேட்டு விட்டார். நான் பகவத்கீதையைப் படித்த அரைகுறை லட்சணத் தைப் பற்றிய உண்மையைக் கூறியும், அவர் விடுவதாயில்லை. அவரோ இன்று கனடாவின் எழுத்துலக வானிலே சுடர்விடும் ஒரு பிரபலமான தாரகை. தமது வித்தியாசமான இலக்கிய ஆக்கத் தால் ஒரு புதிய சாதனையைப் படைத்து வரும் நல்ல தரமான எழுத்தாளர்.

அத்தகைய ஒருவரின் நூலுக்கு அறிமுகவுரை ஒன்றை எழுதும் பணி, எனக்கு ஒரு சவாலாக அமைந்து விட்டதில் வியப்பதற் கில்லை அல்லவா? இருந்தாலும் .... ஏற்றுக் கொண்ட வேண்டு கோளை, என்னால் முடிந்தவரையில் நிறைவேற்ற துணிந்து விட்டேன். இதோ இந்த அணிந்துரையையும் எழுத ஆரம்பித்து விட்டேன். என்னிடம் தரப் பட்டது. தமிழர் குருஷேத்திரக்கீதை என்னும் நூலின் முதலாம் பாகமான "களத்தில் கவனிப்பு" என்னும் நூற்பகுதியே.

முதலில் இந்நூலை அதன் ஆசிரியர் எழுதிய நோக்கம், அதனை பகவத் கீதையுடன் இணைத்து எழுத அவர் கீதையை அணுகியமுறை போன்ற சில அம்சங்களைப் பற்றி நாம் அறிந்து கொள்வது அவசியம். இன்றைய உலகில் அறியாமை இருளில் மூழ்கி அல்லல் உறும் மக்களை வழிப்படுத்தி மனிதனைத் தெய்வமாக்க வல்ல உயர்ந்த பல தத்துவங் களை அவர்களுக்கு எடுத்துரைத்து, அவர்களை வாழ்வாங்கு வாழ வைக்க வேண் டும் என்பதே சித்ராமணாளனின் நோக்கமாகும்.

அவரது மனக்கண்ணில் நம் தமிழ் ஈழத்துப் போராட்டக்களம் குருஷேத்திரமாகத் தெரிகிறது. நம் மேதகு "தலைவர் பிரபாகரன்" "அர்ச்சுனனாக"த் தோன்றுகிறார். "புலிவீரர்களின் படையணி" "பாண்டவர் சேனை"வாகத் தென்படுகிறது. பார்த்தனுக்கு ஏற்படும் மனக்கிலேசத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கி போர் தர்மமங்களைப் பற்றிய வியாக்கியானங்கள் அனைத்தையும் தக்க சான்றுகளுடன் ஒரு தத்துவ சாகரமாக பகவத்கீதையை ஓதிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா. தமிழ்முனிவராக உருவெடுத்து விடுகிறார்.

ஆகவே மறுகணம் நாலுக்கு அடித்தளமாக தமிழ்ஈழக் குருஷேத்திரப் போர்க்களம் அமைந்து விடுகிறது. தளபதிக்கும் போராளிகளுக்கும் வாழ்க்கைத் தத்துவங்களை உபதேசிக்கிறார் தமிழ்முனிவர். தம் சீடர்களின் அறியாமையை அகற்ற முனைகிறார். ஐயப்பாடுகள் சரமாரி யாகத் தொடுக்கப்படுகின்றன. பதங்கள் என்னும் உருவிலே. விளக்க மான விடைகள் தரப்படுகின்றன. பொருளுரை எனும் உருவிலே. மூலநூலில் சுவாமி பிரபுபாதா அவர்களின் தமிழ்மொழி ஆக்கத்தை ஒட்டியே இந்த வழி நாலும் எழுதப்பட்டுள்ளது. தமிழ்ஈழத்து போர்ச் சூழலுக்கு பொருந்தும் வண்ணம் சிற்சில திருத்தங்கள் தேவையான இடங் களில் செய்யப்பட்டுள்ளன. ஆயினும் அந்த மாற்றங்கள் பகவத் கீதையின் சாரத்தை எதுவிதத்திலும் பாதிக்காதவாறு இந்த சார்பு நூலை சித்ராமணாளன் அவர்கள் ஆக்கியுள்ளார். முதல் பாகத்தில் 26 பதங்களையே தெரிந்தெடுத்து ஒரு முத்தாரமாகத் தொடுத்துள்ளார்.

எனவே இந்நூல் இந்து சமயத்தை மட்டும் பிரதிபலிக்காமல் சர்வசமய சமரச நோக்குடன் ஒரு மகாபெரிய சாகரமாக பிரவாகமெடுத்து வர வேண்டும் என்பதே ஆசிரியரின் இலட்சியம் என்பதை நிரூபித்து விடுகிறது. அவரது பொருளுரைகள் ஒரு சதுர்வேனி சங்கமமாகி சமயம், இலக்கியம், சரித்திரம் அரசியல் எனும் நாலும் கலந்த ஒரு கதம்பமாலையாகப் பரிணமித்து விடுகின்றன. ஆசிரியர்..... ஒரு ரங்க ராட்டினத்து குதிரைகளைப் போலவே உலகம் பூராவிலும் சுற்றிச் சுழன்று வந்து.... பல்துறை சார்ந்த நாற்றுக்கணக்கான சான்றுகளை யும் வாசகர்களுக்கு வாரி வழங்கி விடுகிறார்.

ஆகவே அவரது நூலை வாசிக்கும் போது... நுங்கும் நுரையுமாக பொங்கிப் பிரவகித்துச் சுழித்து ஓடுகின்ற காட்டாற்று வெள்ளத்தில் சிக்கிக் கொண்ட மாதிரி, சிற்சில இடங்களில் நான் திக்கு முக்காடித் தான் போய் விட்டேன்! அவரது நூலறிவின் மிகுதியே அதற்குக் காரணம்.

இந்நூலை எத்தனை ஆர்வத்துடன் எவ்வளவு சிரமப்பட்டு எழுத்தை ஆளத் தெரிந்த சித்ராமணாளன் அவர்கள் எழுதியிருக் கிறார் என்பதை.... வாசகர்கள் அனைவரும் நிச்சயமாக இதனை வாசித்த வுடன் நன்கு புரிந்து கொள்வார்கள். நம் தாயகத்து தற்கால அரசியல் பிரச்சனைகளை, இந்த தமிழர் குருஷேத்திரக் கீதை யாவருக்கும் தெளிய வைக்கும். ஒரு துணைக்கருவியாக விளங்குவதையும்.... அதே சமயம் உணர்ந்து கொள்வார்கள். வாசகர்களின் ஆய்வுரைகள், ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெருமையை உரைத் துப் பார்ப்பவை. அவர்களின் நல்ஆதரவு நூலிற்கு மெருகேற்ற வல்லவை. அவர்களின் பாராட்டுரைகள் தான். ஒரு எழுத்தாளரை மேன்மேலும் வளர்ச்சி அடைய ஊக்குவிப்பவை.

இறுதியாக ஒரு வார்த்தை பகவத்கீதையை அறியாதவர்களும் அதன் மகிமையை சித்ராமணாளனின் புதுமைப்படைப்பான இந்த தமிழர் குருஷேத்திரக்கீதை மூலமாக அறிய முடியும். தமிழ் ஈழம் மலரவும் உயரவும் அவரது புனிதமான தொண்டாக இந்நூல் என்றும் இலங்கும். அத்தோடு இவ்வணிந்துரையை எழுதும் பெருமையை எனக்கு அளித்த சாதனை வீரரான சித்ரா மணாளனின் இவ்வரிய நூல் அவருக்கு உரிய வெற்றியை ஈட்டித் தர, நான் அந்த பகவான் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியின் திருவடியை வணங்கி வேண்டியவாறு என் அகங்கனித்த நன்றியையும் நல்லாசியையும் கூறி விடை பெறுகிறேன். வணக்கம்

வாழிய செந்தமிழ், வளர்க தமிழ்ஈழம்

*வல்லை கமலா பெரியதம்பி*

சிவசக்தி
சிவபுர வீதி
வல்வெட்டித்துறை
08.07.98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

தமிழினத்திற்கு மட்டுமல்ல தமிழ்கூறும் நல்லுலகிற்குக் கிடைத திருக்கும் ஓர் அற்புதமான காவியம் இந்தத் தமிழர் குருஷேத் திரக்கீதை.

தமிழின வரலாற்றில் ஒரு தனி அத்தியாயத்திற்குரிய தலை வனையே அவதார புருஷனாகச் சிருஷ்டிக்கும் ஓர் உன்னத நூல் இந்தக் கீதை.

ஈழத்தமிழினத்தின் வரலாற்றில் - சரித்திரத்தில் இரண்டறக் கலந்த வரலாறு தான் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களது வரலாறு என்றும் - எம் பழம் வரலாற்றில் சொல்லப்படுகின்ற புறநானூறு, கலிங்கத்துப்பரணி நாயகர்களின் புது எழுச்சி வடிவமே புலி வீரர் காவியம் என்றும் எண்ணி, எழுதிக் கொண்டி ருந்த - எழுதிக் கொண்டிருக்கின்ற தமிழ் எழுத்துலக மேதைகள் மத்தியில்

தன்னுடைய இனத்தின் தலைவன் சாதாரண மனிதர் அல்ல. மகா பாரதப் போர்க்களத்திலே கிருஷ்ண பரமாத்மா உபதேசிக்க அந்த உபதேசத்தினைக் கேட்டுத் தெளிவு பெற்று அதர்மமும் - அட்டூழியங்களும் - ஆணவமும் - அகங்காரமும் பொடி பொடியா கிடக் களம் கண்ட அர்ச்சுனனை ஒத்தவர் எங்கள் தலைவர் என்பதை சமய - வரலாற்று - இலக்கிய - இதிகாச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளோடு அற்புதமாக படைத்திருக்கிறார் இந்தத் தமிழர் குருஷேத்திரக்கீதையை என் இனிய நண்பர் சித்ரா மணாளன் அவர்கள்.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளர்களது படைப்புக்களை இலக்கிய முயற்சிகளை கனேடிய மண்ணிலே நூலுருவாக வெளியிடுவதில் ஈழநாடு பதிப்பகம் ஆர்வமும் அக்கறையும் காட்டி வருவதை வாசகர்கள் அறிவார்கள்.

இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு என்று ஒரு தேசம் வேண்டும். அங்கே தமிழனைத் தமிழனே ஆளவேண்டும் அந்த நிலையை உருவாக்க தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களாலேயே முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் நான்.

நான் நம்பிக்கை வைத்திருக்கின்ற - ஏன் உலகத்தமிழினமே நம்பிக்கையும் பற்றும் வைத்துள்ள காலமகளின் காவியத் தலைவனை அவதார புருஷனாகப் படைத்திருக்கும், காலத்தால் அழியாது வாழும் இலக்கியமாக வாழப் போகும் இந்தத் தமிழர் குருஷேத்திரகீதையை ஈழநாடு பதிப்பகத்தின் சார்பில் வெளியிடுவதில் யான் பெரு மகிழ்ச்சியும் ஆத்ம திருப்தியும் அடைகின்றேன்.

இனிய தோழமையுடன்

T.K.பரமேஸ்வரன்

(ஆசிரியர் - ஈழநாடு (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையல்

ஈழத்தமிழினம் தன்மானத்தோடு
தலை நிமிர்ந்து வாழ வேண்டும்
எமது எதிர்காலச் சந்ததி
சுதந்திர மனிதர்களாக
அந்த மண்ணிலே வாழ வேண்டும் என்பதற்காக
இன்று அந்த மண்ணிலே
விடுதலைத்தீ ஓங்கி எரிகின்ற ஓமகுண்டத்திலே
தங்களை ஆகுதியாகி நின்ற
மாவீரர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

**சித்ராமணாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களத்தில் கவனிப்பு

## பதம் 01

*தமிழ்ஞானி — புலி வீரர்களே! அதர்மத்திற்கு மரணமும் தர்மத்திற்குப் பிறப்பும் நெருங்கி விட்ட காலம் இது. இவை உங்களால் தான் உருவாக வேண்டும். இது பரமாத்மாவினுடைய பணிப்பு.*

## பொருளுரை

*வன்னிக்காட்டினுள் கரந்துறைந்த புலி வீரர்களின் இதயங்களுக்கு ஒரு இனிமையான செய்திகளாக தமிழ்ஈழப் போரின் உண்மை நிலையினை எடுத்துரைக்கின்றார் முக்காலமும் உணர்ந்த தமிழ்ஞானி.*

*'இலங்கைத் தமிழர்கள் தப்பிப் பிழைப்பதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்கள் முழுவதையும் தனியே பிரித்து தனியரசை அமைப்பது. இதனால் இந்தியா — பாகிஸ்தான் பிரிந்தது போல் இலங்கை இரண்டாகப் பிளவுபடும். இது கடும் மருந்து. இதை நாம் கேட்கவில்லை.*

*அடுத்தது சமஷ்டி அமைப்பு. முறைப்படி தமிழ்பேசும் பிரதேசம் மாகாண சுயாட்சி கொண்டு வாழுவது. இதையே நாம் நாடி நிற்கின்றோம்.*

*நம் கோரிக்கை அரசியல் நீதிக்கு சம்பூரணமாக இயைந்தது. இதுவே நிறைவான ஜனநாயகமுறை. ஜனநாயகமுறை என்றால் பொதுமக்களின் ஆளுகை.*

*மேற்கண்டவாறு தமிழீழத் தந்தை செல்வா அவர்கள் 1951ம் ஆண்டு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி மாநாட்டில் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார். இலங்கை ஒரு சமாதான பூமியாக இருக்க வேண்டும். அதில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றுமை யாக வாழ வேண்டும் என்பதையே பெரும் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த மூதறிஞர் அவர்கள். அதர்மத்தை எதிர்த்து சாத்வீக வழிகளில் போராடி பெரும் சோதனைகளைச் சந்தித்தார். ஆனால் கொடுமையும் கொடூரமும் கொழும்பில் கோலோச்சியது மட்டுமல்லாமல் அப்பாவித் தமிழர்களை வெட்டிச் சாய்ப்பது தான் கொள்கை எனக் கோலங் கொண் டார்கள்.

அதன் விளைவு 1970ம் ஆண்டுப் பொதுத்தேர்தல் முடிவு. சிங்களப் பெரும்பான்மை இடது சாரிகளின் தேர்தல் வெற்றி தமிழர்களை மேலும் கொடுமை செய்யும் என்பதை மிகத் தீர்க்கதரிசனமாக உணர்ந்த பெரிய வர் 'தமிழர்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்' என்றார்.

சுதந்திரநாட்டின் மக்களாகத் தலைநிமிர்ந்து தமிழர்கள் வாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு முப்பது ஆண்டுகள் சமரசம் பேசி தமிழ் மக்களை வழி நடத்திய தந்தை செல்வா காங்கேசன்துறைத் தொகுதி இடைத் தேர்தல் மூலமும் தமிழ்ஈழமக்கள் தமது மூதாதையர்கள் ஆண்ட மண்ணை மீண்டும் தாமே ஆள வேண்டும் என்ற வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின் மூலமும் தமிழீழ மக்களின் ஏகோபித்த அங்கீ காரம் பெற்று இலங்கைத் தேசியப் பேரவையில் மிகவும் பௌவியமாக நிதானமாக சிங்கள மக்களுக்குச் சொன்னார். 'தமிழர்களாகிய நாங்கள் உங்களை விட்டுப் பிரிந்து எங்களது நாட்டில் சுதந்திரமாக வாழப் போகின்றோம்' என்று. அகிம்சைவாதியை அதர்மவாதிகள் விடுவார்களா? அதர்மம் தனது சுயரூபத்தைக் காட்டத் தொடங்கியது. தமிழ்இளைஞர் களை வேட்டையாடினார்கள். அஸ்த்தனாபுரத்தில் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் சமரசம் பேசப் புறப்பட்ட பரந்தாமன் அனுமான் கொடியுடன் களம் புக நேர்ந்தது. காரணம் அதர்மம் பேச்சுவார்த்தை தக்கு அடிபணியாது என்பதை பரமாத்மா அறிந்தவரல்லவா. எனவே தான் தமிழ்ஈழ மக்களை அடிமைப்படுத்தும் அதர்மத்தை அழிக்க புலிகளாகிய நீங்கள் வந்துள்ளீர்கள். பரம்பொருள் உங்களை அனுப்பி வைத்துள்ளார் என்று தமிழ்ஞானி கூறியதும்

## பதம் 02

புலி வீரர்கள் — கூப்பிய கரங்களுடன் சுவாமி! இந்தக் காட்டிற்குள் விலங்குகள் மட்டும் தான் இருக்கும் என்று எண்ணினோம். தங்க ளைக் கண்டதும் எங்கள் இதயத்தில் ஒரு தெய்வீக ஒளி பரவக் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளுரை

புலி வீரர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற சமய வாழ்வியலில் கலந் துறைந்து வாழ்ந்தவர்கள். அவர்கள் நல்லவர்கள், கெட்டவர்கள், காட்டிக் கொடுப்பவர்கள், கருணை கொண்டவர்கள் இப்படிப் பல தரப்பட்டவர் களையும் எளிதில் கண்டுபிடிக்கும் சக்தி நிரம்பப் பெற்றவர்கள். அதனால் தான் வன்னிக் காட்டில் தாங்கள் சந்தித்த தமிழ் ஞானியைக் கண்டவுட னேயே கரம் கூப்பி வழிபடுகின்றனர்.

அவர்களின் முன்னால் தமிழ் ஞானி கையை உயர்த்தவில்லை. அவர்கள் அவரைக் கட்டி வைக்கவும் இல்லை. ஞானியின் விழியில் புலிவீரர்கள் ஒரு பெரும் கருணையையே பார்க்கின்றார்கள். அவரிடமிருந்து தங்க ளுக்கு நல்ல உபதேசம் கிடைக்கப் போகின்றது என்பதை புலிவீரர்களின் முகங்கள் காட்டி நிற்பதை தமிழ்ஞானி உணர்கின்றார். இவ்வளவு கால மும் தான் எதற்காகக் காத்திருந்தாரோ அதை நிறைவு செய்யும் தருணம் இது எனத் தீர்மானித்த தமிழ்ஞானி தன் ஐம்புலன்களை அடக்கி கண் களை மூடியபடியே தியானத்தில் இருந்து புலிவீரர்களுக்குச் சொல்கிறார்.

## பதம் 03

தமிழ்ஞானி — புலி வீரர்களே! தமிழர் குருஷேத்திரப் பூமியில் புலிக் கொடி பறக்கின்ற வெள்ளைக்குதிரைகள் பூட்டிய அழகிய பெருந்தேரில் கிருஷ்ண பரமாத்மாவும் பிரபாகரனும் அமர்ந்திருந்து உரையாடுகிறார் கள். அங்கே சமய சமரசமும் தெரிகிறது.

## பொருளுரை

கிருஷ்ண பரமாத்மா கீதையை முதல் முதல் சூரிய தேவனான விவஸ் வானுக்கும் அவன் மனுவுக்கும் மனு இஷ்வாகுவுக்கும் உரைத்தனர். பின்னர் அது மறைந்து போகவே பாண்டுவின் மகனான அருச்சுனனுக்கு உபதேசித்தார். மீண்டும் அது மறைவு நிலையை அடைந்த போது இந்தக் கலியுகத்தில் சூரியதேவனான பிரபாகரனுக்கு (சூரியபகவானுக்கு பிரபாகரன் என்னும் நாமமும் உண்டு) உபதேசிக்கின்றார். இன்று உலகம் முழுவதும் அதர்மம் ஆதிக்கம் செலுத்துகின்றது. ஏன் கிருஷ்ண பரமா த்மா தமிழர் குருஷ்சேத்திரத்தை உபதேசத்திற்காகத் தேர்ந்தெடுத்தார்?

பகவத்கீதையை உரைப்பதற்கு ஏன் பாரதக்குருஷேத்திரத்தை கிருஷ்ண பரமாத்மா தேர்ந்தெடுத்தார் என்பதை அறிந்தால் தமிழர் குருஷேத்திரத் திற்கும் நியாயம் கிடைக்கத்தானே செய்யும்.

பாண்டவர்கள் பன்னிரெண்டு ஆண்டுகள் வனவாசமும் ஓராண்டு தாங்கள் இருக்கும் இடம் யாருக்கும் தெரியாமலும் வாழ்ந்து முடித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியிருந்தும் ஒப்பந்தப்படி கௌரவர்கள் அவர்களுக்குரிய நாட்டைக் கொடுக்கவில்லை.

அதே போல் தமிழ்ஈழத்தலைவர்கள் செய்து கொண்ட பண்டா — செல்வா, டட்லி — செல்வா, ஸ்ரீமாவோ — சாஸ்திரி, திம்புப் பேச்சு வார்த்தைகள், ராஜீவ் — ஜே. ஆர்.ஜெயவர்த்தனா ஒப்பந்தங்களும் தமிழர் களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

பந்தபாசம் என்ற உணர்ச்சிகளுக்கு இடம் தராத இடத்தில் பாரதப்போரை நடத்தத் திட்டமிட்ட கிருஷ்ண பரமாத்மா அதற்கான இடத்தைத் தேடிக் கொண்டு குருஷேத்திரம் என்ற கிராமத்திற்கு வருகிறார். அங்கே ஒரு உழவன் தன் வயலில் இருந்து வெளியேறிய நீரை அடைப்பதற்காக மண்ணை வெட்டிப் போட்டுக் கொண்டிருந்தான். மண்ணை எவ்வளவு வெட்டிப் போட்டும் நீர் பெருகுவது நிற்கவில்லை. ஏதாவது பொருளை அணையாக வைத்து மண்ணை போட்டாலே நீர்ப்பெருக்கம் நிற்கும் என்ற முடிவுக்கு வந்த உழவன் அங்கும் இங்கும் தேடினான். ஒன்றும் கிடைக்கவில்லை. உடனே தன் மகனை இரண்டு துண்டுகளாக வெட்டி அணையாகப் போட்டுக் கட்டினான். இதைக்கண்ட கண்ணபிரான் மனிதர்களின் உணர்ச்சிகளுக்கு இடந்தராத இந்த இடம் தான் பாரதப் போருக்கு தகுந்த இடம் எனத் தீர்மானித்து அங்கே பகவத்கீதையை உபதேசித்தார்.

ஆனால் தமிழீழத்திலோ சிங்களக் காடையர்களின் அடவாடித்தனங்களும் அதை அடக்கி அமைதி காண வேண்டிய காவலர்களின் கண்மூடித்தன மும் காமவெறிகளும், கன்னித் தமிழ்ப் பெண்களை பாலியல் வன்முறை களுக்குட்படுத்துவதும், கொடூர ஆட்சியாளர்களின் கொடுங்கோலால் தமிழ் மாணவர்களின் எதிர்காலத்தை தரப்படுத்தல் என்ற பெயரில் சிதைத்தெறியப்பட்ட போதும், இந்துமதகுருமார்களையும் தமிழ் வர்த்த கர்களையும் வெட்டி வீசப்பட்டதையும், பொறுக்க முடியாத தமிழ் மாவீரர்கள் பாரிய வெடிகுண்டுகளால் தங்கள் உடல்களை அறுத்து தமிழ்ஈழ மண்ணுக்குத் தங்களை அணையாக வைத்துக் கட்டி விட்டி ருக்கிறார்கள். எனவே தான் கிருஷ்ண பரமாத்மா இலங்கைப் போரில் தமிழர் குருஷேத்திரத்தை உபதேசிப்பதற்காக தேர்ந்தெடுத்துள்ளார்.

'பெருகி ஓடிய வெள்ளத்தைத் தடுக்க தன் மகனை வெட்டி அணை யாகக் கட்டினான் உழவன். அன்று பிறந்தது 'பாரத குருஷேத்திரக்கீதை'

'இனவெறியால் தமிழர்களின் இரத்தம் பெருக்கெடுத்து ஓடிய போது தங்கள் உடல்களையே அறுத்து அணையாகக் கட்டினார்கள் மாவீரர்கள். அதனால் இன்று பிறந்திருக்கிறது 'தமிழர் குருஷேத்திரக் கீதை'

தமிழ்ஞானி சொல்கின்றார் பிரபாகரனும் கிருஷ்ண பரமாத்மாவும் அமர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கும் இடத்தில் சமய சமரசம் தெரிகிறது என்று. இதை மிகவும் ஆழமாக நாம் அவதானித்தல் மிக அவசியம். மொழியுணர்வு மிக்க நாட்டில் சமய முரண்பாடுகள் அறவே இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட பூமி தர்மப் போருக்கு உகந்த இடமில்லை என்பது தான் உண்மை. பெரும்பான்மை இந்துசமயிகள் வாழும் தமிழீழத்தில் கிறிஸ்தவரான தந்தை செல்வாவை முப்பது ஆண்டுகள் தலைவராக ஏற்றுக் கொண்டதன் மூலம் தர்மப் போருக்குத் தகுதியுடையவர்கள் தமிழ்ஈழமக்கள் என்பதை நிரூபித்து விட்டார்கள். இவர்களின் மேன்மையான எண்ணத்திற்கு யாழ் நகர் தந்த யோகர்சுவாமிகளின் பிரார்த்தனை முறைகளும் ஒரு காரணம். ஏனெனில் சைவசமய சுவாமியான யோகர்சுவாமிகள் கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய நூல்களையும் தமது ஆச்சிரமத்தில் வாசித்துப் பழக்கியதன் மூலம் தமிழீழ மக்களை தர்மப் போருக்குத் தயார்ப்படுத்தியவர். அப்படிப்பட்ட தமிழர் குருஷேத்திரத்தில்

கிருஷ்ண பரமாத்மா தமது வைஷ்ணவ கோல அடையாளங்களுடன் திவ்விய ஜோதியாய் வீற்றிருக்க சைவசமயராகிய பிரபாகரன் கழுத்தில் நஞ்சைத் தொங்கவிட்டுக் கொண்டிருப்பது சிவபெருமானை நினைவு படுத்துவது போலவும் நல்லவர்களை வாழ வைப்பதற்காக நாம் எமது உடலையும் அழிப்போம் என்ற உறுதியையும் தெரியப்படுத்துவதோடு தேவஅசுரப் போரையும் நினைவுபடுத்துகிறது. இந்த வைஷ்ணவ, சைவர்களின் இருப்பையே தமிழ்ஞானி சமயசமரசம் என்கிறார்.

முன்பு மோகினி வேடம் பூண்ட திருமாலுக்கும் சிவபெருமானுக்கும் பிறந்த ஐயப்பன் சமய சமரசராக அருள்பாலித்து வருவதைக் கண்டு கொண்டு தான் இருக்கின்றோம். ஐயப்பனுக்கு மணிகண்டன் என்ற பெயர் உண்டு. நயவஞ்சக சூழ்ச்சியால் புலிப்பால் எடுக்க காடு போய் புலிப்படை நாட்டிற்குள் வந்ததன் மூலம் புலிகண்டன் என்றும் ஐயப்பனுக்குப் பெயர் உண்டு. அதேபோல் நயவஞ்சகரால் வனம் புகுந்த தமிழ்ப்புலிகளும் புதிய புராண வரலாற்றுக்காரர்கள் என்பதை தமிழ்ஞானியின் உரையில் காண முடியும்.

## பதம் -04

*பிரபாகரன் — அழிவற்றவரே! போர்புரியும் ஆவலுடை யவர்களாய் இருக்கின்றவர்களில் நான் யாருடன் போர் புரிய வேண்டும் என்பதைக் கூறுவீர்களாக!*

## பொருளுரை

கிருஷ்ணரை அழிவற்றவரே என்று அழைப்பதன் மூலம் தங்களைக் களத்தில் வழி நடத்துபவர் கடவுள் என்பதை உறுதிப்படுத்துகின்றார் பிரபாகரன். ஒரு சுதந்திரப் போர் என்பது பெரும் கட்டுப்பாட்டிற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கவேண்டும். அப்படிப்பட்ட போராட்டம் தான் தமிழ்ஈழ மக்களுக் காக புலிகள் நடத்தும் போராட்டம் என்பதை தன்னுடைய கேள்விக் குள்ளேயே அடக்கிக் காட்டுகிறார் பிரபாகரன் அவர்கள். ஆனால்

வலியப் போய் போர் செய்வதுடன் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் கட்டுப்பாடற்ற முறையில் நடக்கும் சிங்களப்படைகள் பழியை புலிகளின் மேல் திணிப்பதற்கு சிங்களத் தலைமைப் பீடம் அதிகப்பிரயத்தனம் எடுத்து வருவதை நாம் நன்கு அறிவோம்.

இதைத் தெளிவாக்கும் வகையில் 1983ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ம் திகதி கொழும்பு நீதிமன்றத்தில் நின்று உலக மக்களுக்கு அருமையான விளக்கத்தைக் கொடுத்தார் மாவீரர் தங்கத்துரை அவர்கள்.

'எந்த ஒரு தேசிய இனமும் தனது இறைமையை நிலை நிறுத்துவ திலும் பறிக்கப்பட்டிருப்பின் அதை மீண்டும் பெற்றுக் கொள்ள முயற்சிப் பதையும் தேசத் துரோகமோ அன்றி, பயங்கரவாதமோ என உலகில் எந்த ஒரு சாசனமும் கூறிவிட வில்லை.

நாம் வன்முறை மீது காதல் கொண்டவர்களோ அன்றி அது மாதிரியான நோய்களால் பாதிப்புற்ற மனநோயாளிகளோ அல்லர் என்ற தங்கத்துரையின் இந்த விளக்கமானது உலக சமாதானபீடமாக விளங்கிக் கொண்டிருக் கும் ஐக்கியநாடுகள் சபையில் அங்கீகாரம் பெற்ற ஸ்ரீலங்கா நீதிமன்றத் தில் உலக அங்கீகாரம் பெறாத தமிழ்ஈழப் பிரகடனம். இதை இறை வன் அன்றே அறிந்து விட்டார். இறைவனை அறியாதோர் இன்னும் அறியவில்லை. கறுப்பு யூலைக்காய் கண்களை வேள்வி செய்த அந்தக் கண்ணப்பனாயனார்கள் ஆலயங்களில் இருந்து அருள்பாலிக்கும் போது அகிலம் அதை மீண்டும் உணரும்.

இங்கே களத்தில் பிரபாகரன் அவர்களுக்கு கிருஷ்ணர் தேர்ச்சாரதியாக இருக்கின்றார். பிரபாகரன் அவர்கள் சொல்லியதை செய்வதே கிருஷ்ண ரின் கடமை. ஆனால் அவரிடமே ஆலோசனை கேட்பதானது தொழிலை வைத்து அறிவையும் திறமையையும் மதிப்பிடலாகாது என்பதையும் இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையில் பரஸ்பர நல்லெண்ணமும் நட்புரிமையும் நடனம் புரிய வேண்டும் என்பதையும் காட்டுகிறது. சுந்தர மூர்த்திநாயனார் கடவுளைத் தோழனாகக் கொண்டார். அதனால் தம்பிரான் தோழர் எனப் பெயர் பெற்றார்.

கடவுளைத் தோழனாகக் கொண்டால் கஷ்டங்கள் வராதே அப்படியாயின் கிருஷ்ணரைத் தோழமை கொண்ட பிரபாகரனுக்கு ஏன் பல சோதனை கள் என்று நினைப்பது நியாயமே. உண்மையான நண்பர்களிடையே தானே சோதனைகள் அதிகம். மணப்பந்தலில் சுந்தரரை தடுத்தாரே சிவபெருமான். அதையும் சுந்தரர் தாங்கினார். அதனால் தான் இன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிரான் தோழராக சைவர்கள் மனங்களில் வாழ்கின்றார் சுந்தரர்.

அந்தவகையில் தான் தமிழர் குருசேஷ்த்திரத்தில் தனது தளபதிகளுடனும் போராளிகளுடனும் உண்மை நட்புரிமையுடன் பழக முடிகிறது பிரபாகரன் அவர்களால். அவரின் அந்த நிலைப்பாடு தான் வல்லரசுகள் கூட வீழ்த்த முடியாத வீரர்களாக புலி வீரர்களை அகிலத்தில் உயர்த்தி வைத்திருக்கிறது.

இந்த நட்புரிமை போராட்டத்திற்கு மட்டும் வழிகாட்டவில்லை. ஒவ்வொருவரின் இல்வாழ்வுக்கும் இனிது வழிகாட்டுகின்றது என்பதையும் நாம் புரிந்து கொள்வது நல்லது.

அடுத்து நான் யாருடன் போர் புரிய வேண்டும் என்ற பிரபாகரனின் கேள்விக்குள் சிங்கள மக்கள் மேல் வெறுப்போ அவர்களை அழிக்கும் நோக்கமோ இம்மியளவும் அவருக்கு இல்லை என்பதை வெளிக்காட்டுகின்றது. தமிழர்களைக் கொல்லுதல் தான் அகிம்சை என்று ஸ்ரீலங்காவில் புத்த மதம் மாற்றம் போதிக்கத் தொடங்கி விட்டது. இதை ஏற்படுத்தியவர்கள் சிங்களத் தலைவர்கள். தங்களின் சுகபோக வாழ்வுக்காக அப்பாவிக் கிராமிய சிங்கள இளைஞர்களை தமிழர் குருசேஷ்த்திரம் நோக்கி அனுப்புகிறார்கள். எதிர்கால வாழ்வுக்கு பணம் தரும் ஒளி என நினைத்து விளக்கொளி நாடி ஓடி வந்த விட்டில் பூச்சிகள் அந்த விளக்கினுள் விழுந்து மரணிப்பது போல் அப்பாவிச் சிங்கள இளைஞர்களும் மடிகின்றார்களே என்ற ஆதங்கம் பிரபாகரன் அவர்களுக்கு உண்டு. ஏனெனில் அவர் கிருஷ்ணரின் நண்பனல்லவா! எனவே தான் மிக நிதானமாகவே யாருடன் போர் புரிய வேண்டும் எனக் கேட்கின்றார். பிரபாகரன் அவர்களின் உள்ளக் கிடக்கையைப் புரிந்து கொண்ட கிருஷ்ண பரமாத்மா.

## பதம் 05

பார்வதி குமரா! அதோ உனது எதிரிகளின் கொழும்புக் கோட்டை இராஜதானியில் அகிம்சை வழிநின்ற தமிழ்த்தலைவர்களும் இலட்சிய நோக்குடையவர்களாக நீ ஒருகாலத்தில் கருதிய போராளிகளும் மகிழ்ச்சியுடன் இருக்கின்றார்கள். உமது போர்க்காலம் கலியுகம் என்பதை மறந்து விடாதே.

## பொருளுரை

கிருஷ்ண பரமாத்மா பிரபாகரன் அவர்களைப் பார்த்து பார்வதி திருக்குமரா என்றழைப்பதன் நோக்கம் பார்வதிப்பிள்ளையின் இளையமகன் பிரபாகரன் என்பதை மட்டும் உறுதி செய்வதற்காகவல்ல என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். சூரனை அழிக்க தன் இளைய மகன் குமரனை வேல் கொடுத்து அனுப்பினாளே பார்வதிதேவி அவளின் பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தான் விடுதலைப்புலி வீரர்கள் என்பதை வெளிக்காட்டவே பார்வதி குமரா என்கிறார் பரமாத்மா.

எனவே தான் தந்தையின் பெயராக அமைந்திருக்கும் வேலுப்பிள்ளை யினுள் பிரபாகரன் அவர்களின் தாயார் வேலாக ஒளி பரப்பி நிற்பதை பார்க் கும் போது பார்வதி பரமேஸ்வரனின் திருவருட்கடாட்சம் பெற்றவர்கள் புலிகள் என்ற உண்மையைக் காணலாம். எப்படியெனில் சமணர்களின் அடக்குமுறையின் கீழ் சைவத் தமிழ் நலிவுற்றவேளையில் சைவத் தமிழிற்கு ஒரு ஞானதேவன் தேவைப்பட்டான். அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யவே சீர்காழித் தோணியப்பரை வணங்கிய திருஞான சம்பந்தருக்கு பார்வதிதேவி ஞானப்பால் ஊட்டினாள். வெறும் கையில் தாளம் போட்டுப் பாடிய திருஞான சம்பந்தரின் திருக்கரங்களில் பொற் தாளம் கிடைத்தது. முத்துப்பல்லக்கு வந்தது. நற்றமிழ் நாவில் குடி கொண்டாள். நலிந்திட்ட சைவத் தமிழ் மீண்டும் நடனம் புரிந்திட்டது அதேபோல் ஜீவகாருணியம் என்ற புத்த தர்மத்தை கொலை செய்து விட்டு பௌத்த அதர்ம ஆட்சி நடத்தும் இலங்கையில், பயந்து அடங்கி, ஒடுங்கி வாழும் அந் நாட்டின் பூர்வீக மக்களான தமிழர்களும் நிமிர்ந்து வாழ ஒரு வீரதேவன் தேவைப்பட்டான். அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய வல்வைச்சிவனை வணங்கிய பிரபாகரனுக்கு பார்வதிப்பிள்ளை (பிரபாகரனின் தாயாரின் உண்மைப்பெயர்) வீரப்பால் ஊட்டினார். உலகில் உள்ள மிக நவீன ஆயுதங்கள் எல்லாம் அந்தப் புலித் தேவன் கரங்களில் நர்த்தனம் புரிகின்றன. இது புலிகளின் வெற்றிக்கு நல்ல சமிஞ்சை எனவே தான் பார்வதி குமரா என அழைக்கின்றார் கிருஷ்ண பரமாத்மா.

இங்கே யாருடன் நான் போரிட வேண்டும் என்ற பிரபாகரன் அவர்களின் முன்னைய பதத்தின் கேள்விக்குப் பதிலாக உன் எதிரிகளின் கொழும்புக் கோட்டை இராஜதானியினுள் அகிம்சைவழி நின்ற தமிழ்த்தலைவர்களும் இலட்சிய நோக்கம் கொண்டவர்கள் என்று ஒரு காலத்தில் நீ கருதிய வர்களும் சந்தோஷமாக இருக்கின்றார்கள் என்று சொல்லியதோடு உனது போர்க்காலம் கலியுகம் என்பதையும் மறந்து விடாதே என்று எச்சரிக் கின்றார்.

கலியுகம் என்றாலே கெட்டதே நல்லதாக வேடம் போட்டுக் கொள்வது என்பதே அர்த்தம். ஒருவரின் மூளைக்குள்ளேயே இரண்டும் திணிக்கப் பட்டிருக்கும் எனவே அதைப் புரிந்து போரிட வேண்டும் என்பதே கிருஷ்ண பரமாத்மாவின் பணிப்பு.

போருக்குரிய நீதிகள் முறையாகக் கடைப்பிடித்த மகாபாரதப் போரிலேயே மறைமுகமான திட்டங்கள் மூலமே பல வீரர்களை வீழ்த்தினார் பரமாத்மா. ஏகலைவனின் கட்டைவிரலை குருதட்சனையாக துரோணர் பெற்றமை, அசுவத்தாமன் என்ற யானையைக் கொலை செய்து துரோணரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்த்தியது. பீமன் மூலம் துரியோதனனின் தொடையில் கதாயுதத்தால் அடித்து அரைக்குக் கீழ் அடிக்கக்கூடாது என்ற போர்விதி முறையை மீறியது. இவ்வளவு பொய்களும் தர்மத்தை அரியணை ஏற்றியது உண்மையே. எனவே தான் கிருஷ்ணரின் வழியில் வள்ளுவரும் இதை வாழ்வியலாக்குகின்றார். எப்படியெனில்

'பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்' என்கிறார். யார் வல்லவர், யார் பலசாலி என்பதை உணர்ந்து போரிடும் பாரதப்போர்ச் சூழலில் கூட போராட்டத்திற்கு ஆயுதம் மட்டும் போதாது. அறிவும் வேண்டும் என்று போதித்த கிருஷ்ணர் தானே தமிழர் குருஷேத்திரத்தில் பிரபாகரனின் சாரதி. இருப்பினும் பழைய தமிழ்த்தலைவர்களும் இலட்சிய நோக்கம் கொண்டவர்களாக நினைத்த போராளிகளும் மனித விரோதிகளான சிங்களத்தலைமைப்பீடத்துடன் நிற்பதை நினைத்து வெறுப்படைந்தார் பிரபாகரன் அவர்கள்.

## பதம் 06

பிரபாகரன் — என் அன்புக்குரிய கேசவா! தமிழர்கள் நாங்கள் பிரிந்து போகின்றோம் என்று பேருரைத்த எங்கள் பழைய தலைவர்களும் இலட்சிய நோக்கம் கொண்டவர்கள் என்று நான் நினைத்தவர்களும் மனிதத்தைத் தொலைத்து விட்ட சிங்களத்தலைவர்களுடன் நிற்பது எனக்கு விரக்தியை ஏற்படுத்துகின்றது.

## பொருளுரை

தமிழர்களாகிய நாங்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழும் நோக்கத்தோடு நெருங்கிப் போன வேளையில் எல்லாம் எங்களுக்கெதிராக பிரிவினைவாதத்தைச் சட்டமாக்கி அப்பாவிச் சிங்களமக்களிடம் துவேஷ உணர்வை ஊட்டி பிரிந்து போங்கள் என்று துரத்திய மனிதத்தைத் தொலைத்து விட்ட சிங்களத் தலைவர்களுடன் பிரிந்து போகப் போகின்றோம். இனி மேல் இங்கே வரமாட்டோம் என்று சூளுரைத்த தமிழ்த் தலைவர்களும், 1970ம் ஆண்டுடன் ஸ்ரீலங்காத் தேசியப்பேரவை ஆட்சி முறையில் நம்பிக்கை இழந்து ஆயுதம் ஏந்திய இளைஞர்களும் எதிரியுடனேயே இரண்டறக் கலந்து நிற்பதைப் பார்க்கும் போது விரக்தியாக இருக்கின்றது என்ற பிரபாகரன் அவர்களின் கருத்தினுள் சிங்களத் தலைவர்களுக்கு எதிரானவர்கள் புலிகள், சிங்கள மக்களை என்றும் நேசிப்பவர்கள் புலிவீரர்கள் என்ற நம்பிக்கை தெரிவதைக் காணலாம்.

ஜீவகாருணிய சீலர் புத்தரை வணங்கும் சிங்கள மக்கள் தமிழர்களை கொலை செய்வதே கொள்கை எனக் கோலங்கொண்டதன் காரணமே அவர்கள் புத்த தர்மத்தைத் தொலைத்து கனகாலம் ஆகி விட்டது என்பதையே காட்டுகின்றது. சிங்கள மக்களுக்கு நல்ல நாடு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசசபை உண்டு. அதை அனுபவிக்க முடியாமல் தமிழர் பூமியினுள் வந்து சாகின்றார்களே? இது வரை மூவாயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கால்களை இழந்து விட்டதாகவே அவர்கள் அறிவிக் கின்றார்கள். படையில் சேரமாட்டேன் என்று ஓடி ஒளிந்தவர்கள் ஏராளம் ஏராளம். ஆனால் சிங்களத் தலைவர்களின் பிள்ளைகள் கொழும்பு நட்சத்திர விடுதிகளில் அட்டகாசம் இவற்றைப் பாமரச் சிங்கள மக்களி டம் விளங்கப்படுத்த ஒரு மனிதனும் அங்கில்லையே என்று பிரபாகரன் அவர்கள் நினைத்து விரக்தியடைகின்றார். புலிகளுக்கு இரண்டு முக்கிய கடமைகள் உண்டு. முதலாவது தமிழீழத்தை மீட்பது. இரண்டாவது கிராமியச்சிங்கள மக்களை நிம்மதிப்படுத்துவது. எனவே தனது விரக்தி பற்றி தலைவர் பிரபாகரன் வாய்மொழி அளித்த செவ்வியை இங்கே இணைப்பது பொருத்தமானது என எண்ணுகின்றேன்.

அனிதாப்பிரதாப் — உங்கள் வாழ்க்கையில் மிகுந்த விரக்தியைத் தந்த கணம் என்று எதையாவது கூறுவீர்களா?

பிரபாகரன் — என் வாழ்க்கையில் அப்படி விரக்தி ஏற்பட்ட கணம் என்று எந்த ஒன்றையும் குறித்துச் சொல்ல முடியாது. இலட்சிய நோக் கங் கொண்டவர்கள் என்று நான் நினைத்து நம்பிய சில நண்பர்கள் சுய நல சந்தர்ப்பவாதிகளாக மாறிய போது நான் மிகுந்த விரக்திக்குள்ளான துண்டு.

(1984ம் ஆண்டு மார்ச் மாதம் 11 — 17ந் திகதி இந்தியாவில் இருந்து வெளிவரும் சண்டே பத்திரிகை சார்பாக அனிதா பிரதாப் எடுத்த பேட்டி யின் போது அளித்த பதில்)

இந்த விரக்தியின் விளைவைப் பிரபாகரன் அவர்கள் பரமாத்மாவிடம் பின்வருமாறு விபரிக்கின்றார்.

## பதம் 07

பிரபாகரன் — கிருஷ்ணா! என் உடல் முழுவதும் நடுங்குகின்றது. மயிர்க் கூச்செறிகின்றது. என் ஆயுதமும் என் கையிலிருந்து நழுவு கின்றது என் சருமம் எரிகின்றது.

## பொருளுரை

ஆசையுடையது விலங்கு. அன்புடையவர்கள் மனிதர்கள். அருளுடை யவர்கள் தேவர்கள் என்று வகைப்படுத்துகின்றது சைவ சமயம். காட்டில் வாழுகின்ற விலங்குகளுக்குரிய சுதந்திரம் இன்று நாட்டி னுள் வாழும் மனிதர்களுக்கில்லை. எனவே தான் உலகம் போர்ச் சூழ லால் போர்க்கப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் தான் தமிழ்ஈழ மண்ணி லும் களம் புகுந்திருக்கிறார்கள் புலி வீரர்கள். ஆனால் யாருக்காக களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்தார்களோ அவர்களில் சிலரும் எதிரிகளோடு நிற்பதைக் கண்டு பிரபாகரன் பொறுமையிழந்து இருக்கின்றார். சாதாரண மனிதர்களுக்கு உடல் நடுக்கமும் மயிர்க் கூச்செறிவதும் இருவகையாக அமைகின்றது. ஒன்று ஆன்மீக ஆனந்தத்தினால் ஏற்படுவது. மற்றது மனதில் எழும் விரக்தியினாலும் கோபத்தினாலும் பொறுமையின் இழப்பினாலும் ஏற்படுகின்றது.

ஆனால் இங்கே பிரபாகரன் அவர்கள் இறைவனோடு அமர்ந்திருப்பதனால் ஆன்மீக ஆனந்தமுடையவராக இருப்பினும் தனது மக்களின் நிலையில் தன்னை உருவாக்கிக் கொண்டு சிந்திப்பதன் மூலம் தன் இனத்தில் சிலரை தானே அழிக்க வேண்டி ஏற்படுமோ என்ற ஏக்கமும் அவரை தன்னிலை பிறளச் செய்கின்றது. எனவே பிரபாகரனுக்கு தற்போது ஏற்பட்டுள்ள உடல் நடுக்கமும் மயிர்க்கூச்செறிவும் உயிர் நஷ்டத்தை நினைத்ததினால் ஏற்பட்டதே. அவர் தனது ஆயுதங்களை நழுவ விடும் அளவுக்கு பொறுமை இழந்திருக்கின்றார். அவரது உள்ளம் எரிவதால் அவரது உடலே எரிவது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. இவை எல்லாமே வாழ்வைப் பற்றிய உணர்வாலேயே அவருக்கு ஏற்படுகின்றது. காரணம் என்றும் எதிரியைக் கூடக் கொலை செய்வதை விரும்பாதவர் அவர். அதற்குச் சரியான சான்று.

1978ம் ஆண்டு செப்டம்பர் 7ம்திகதி அன்றைய சிங்கள அரசு அறிமுகப் படுத்திய புதிய அரசியல் அமைப்புச்சட்டம் சிங்கள மொழிக்கும் புத்த சமயத்திற்கும் அதி விசேஷமான அரசியல் அந்தஸ்தைக் கொடுத்தது. அந்தச் சட்டத்திற்கு தமிழர்களின் எதிர்ப்பைக் காட்டும் வகையில் ஏயர் சிலோன் என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான பயணிகள் விமானத்தை கொழும்பு இரத்மலானை விமானநிலையத்தில் குண்டு வைத்துத் தகர்த்த புலிவீரர்கள் விமானத்திலிருந்து பயணிகள் வெளியேறிய பின்பே சிதைத்தார்கள். இந்த நிகழ்வு மனிதர்கள் மனிதர்கள் மேல் அன்பு செலுத்துவது என்பது என்றும் யாருமே ஒதுக்கி விடமுடியாத ஒன்று. அதில் புலிகளும் அடங்குவர் என்பதையே காட்டுகின்றது. ஆனால் தமிழ்ஈழப்போர் உச்சக் கட்டத்தையடைந்திருக்கும் இன்றைய நிலையில் எதிரிகளோடு இணைந்து நிற்கும் தமிழர்கள் நிலையினை பிரபாகரன் நினைக்கும் போதே தன்னிலை இழக்கின்றார். ஏனெனில் தனித்தமிழ் ஈழம் பெற்றுத் தருவோம் என்று சொன்னவர்கள் தானே எதிரிகளுடன் நிற்கின்றார்கள். சொன்ன வார்த்தையை காப்பாற்றாத வர்களை சைவசமய நாயனாரே மன்னிக்கவில்லை.

சோழநாட்டில் நாட்டியத்தான் குடிக் கிராமத்தில் வாழ்ந்த சிவ பக்தர் சோழ மன்னருடைய படைத் தளபதியாக இருந்து பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்தவர். அதனால் அவரை கோட்புலி நாயனார் என அழைத்தார்கள். போரில் வெற்றி பெறுபவர்கள் புலிகள் தான் என்பதை அன்றே சைவத் தமிழர்கள் நம்பி விட்டார்கள் போலும். அதனால் தான் கோட்புலி நாயனார் என்று அழைத்தார்கள். சிவபெருமானுக்கு திருவமுது படைப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லைச் சேமித்து வைப்பது கோட்புலியாரின் கடமையாக இருந்தது. ஏனெனில் பஞ்சம் ஏற்படினும் பரமசிவன் பட்டினி கிடக்கக் கூடாது என்ற நிலைப்பாடே. இந்தவகையிலேயே நெற்குவியலைச் சேமித்தார்.

திடீரென ஒருநாள் அரச கட்டளை ஏற்றுப் போர்க்களம் புறப்பட்ட கோட் புலியார் தமது பெற்றோர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் கண்டிப் பான கட்டளையிட்டார். எவ்வளவு பஞ்சம் ஏற்பட்டாலும் அந்த நெல்லை எடுக்க வேண்டாம் என்று. அதற்கு அவர்கள் எல்லோரும் பூரண சம்ம தம் கொடுத்தனர். சில நாட்கள் செல்ல அக்கிராமத்தில் கொடிய பஞ்சம் தலை விரித்தாடியது. செய்வதறியாத கோட்புலியாரின் பெற்றோர்களும் உறவினர்களும் பரமசிவனுக்காக வைத்திருந்த நெல்லை எடுத்துப் பசி யாற்றினார்கள். போர் முடிந்து வீடு திரும்பிய கோட்புலியார் கோபம் கொண்டார்.

யாருமே தப்பி ஓடாதபடி காவல் போட்டு விட்டு தனது பெற்றோர்களை யும் உறவினர்களையும் வெட்டிக் கொலை செய்தார். எஞ்சிய ஒரு பால் குடிக் குழந்தையை நமது வம்ச வாரிசுக்காக விடும்படி காவலன் ஆலோசனை கூறினான். குழந்தை அந்த நெல்லில் செய்த அமுதை உண்ணவில்லை. குழந்தையின் தாய் சாப்பிட்டாள். இந்தக் குழந்தை அந்தப் பாலைக் குடித்தது என்று சொல்லி அதையும் வெட்டிக் கொன் றார் கோட்புலியார். பரமசிவன் மேல் வைத்த பக்தி பெற்றோர்களையே வெட்டி எறியத் தூண்டியது. இன்று அவர் அறுபத்திமூன்று நாயன்மார் களில் ஒருவராக ஆலயங்களில் இருந்து அருள் பாலிக்கின்றார். ஆனால் புலித்தேவன் பிரபாகரன் அவர்கள் தமிழ் மீது வைத்த பக்தியால் பொங்கி வரும் கோபம் கொப்பளிக்க உள்ளம் கொதிப்பெடுக்க உதடுகள் துடிதுடி க்க பரம் பொருளின் அருகே அக்கினித்தேரில் அமர்ந்திருந்து கூறுகின் றார்.

## பதம் 08

பிரபாகரன் — கோவிந்தா! இனியும் இங்கு என்னால் நிற்க முடியாது. என்மனம் குழம்புகின் றது. நான் என்னையே மறக்கின்றேன். கேசியை அழித்தவரே கெட்ட சகுனங்களையே காண்கின்றேன்

## பொருளுரை

பொறுமையிழந்ததால் பிரபாகரன் அவர்களுக்கு போர்க்களத்தில் நிற்பதே இயலாதாயிருந்தது. மனம் பலமிழந்து அவர் தன்னையே மறந்து விட் டார். எனவே தான் கிருஷ்ணரை கோவிந்தா என்றழைக்கின்றார். ஏனெ னில் புலன்களுக்கும் பசுக்களுக்கும் இன்பம் தருபவர் அவர். எனவே தனது குழம்பிய புலன்களுக்கு புதிய தெம்பினைத் தருவார் பரம் பொருள் என எண்ணுகின்றார் பிரபாகரன் அவர்கள். எவை மனிதர்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத் தேவையற்றதோ அதை தான் எடுத்துக் கொண்டு மனிதர்களுக்குத் தேவையானதைக் கொடுப்பவரே இறைவன் இதைச் சைவத்தமிழ் மக்கள் நன்கறிவர். எப்படியெனில்

சிவபெருமான் பாம்பைத் தான் அணிந்து கொண்டு பவுணைப் பக்தர் களுக்குக் கொடுத்தவர். புலித்தோல் அவருக்கு ஆடை பட்டுடைகள் பக்தர்களுக்கு ஆடை. காடு சிவனாருக்கு வாழ்விடம். பக்தர்ளுக்கோ நாடும் வீடும் வாழ்விடம். மண்டையோடு அவருடைய அட்சயபாத்திரம். பக்தர்களுக்கோ பலவர்ணக் கோப்பைகள். அதே போன்று தான்.

பசுவும் வைக்கோலையும் தவிட்டையும் புல்லையும் தான் தின்று கொண்டு நெல்லையும் அரிசியையும் பாலையும் மனிதர்களுக்குக் கொடுக் கிறது. எனவே தான் சைவத்தமிழர்கள் பசுவிலும் சிவனைத் தரிசனம் செய்தார்கள். சூரிய தேவனுக்குப் பொங்கிய சைவத்தமிழர்கள் மாட்டுக்கும் பொங்கினார்கள். அதன் பலனை கைமேல் கண்டவர்கள் தமிழ்ஈழ மக்கள் எப்படி யெனில் தமிழ்ஈழப்போருக்கு முதன் முதல் வாங்கிய துப்பாக்கி கல்வியங்காட்டைச் சேர்ந்த செல்வநாயகம் என்ற இயற்பெயர் கொண்ட புலிமாவீரன் செல்லக்கிளியின் மாடுகள் விற்று வந்த பணத்தில் வாங்கியது என்பதை நினைவில் கொள்ளும் போது பசுப் பாலை மட்டும் தமிழர்களு க்குக் கொடுக்கவில்லை. அதர்மத்தை அழிக்கும் ஆயுதத்தையும் கொடுத் துள்ளது புலனாகும். எனவே தான் பிரபாகரன் அவர்களும் புலன் இன்பம் தருபவரான கோவிந்தன் தனக்கு நிச்சயம் உதவுவார் என எதிர் பார்க் கின்றார்.

ஏனெனில் பிரகாரன் அவர்கள் போர்க்களத்தில் துக்கத்தை மட்டுமே காண் கின்றார். எதிரிகளை வெற்றி கொள்வதிலும் மகிழ்ச்சி கொள்ள முடியா மலிருந்தது. ஏனெனில் எதிர்ப்பாளர்களுடன் தன் இனத்தவர்களும் சேர்ந்தி ருப்பதைப் பார்க்கும் போது ஏதோ ஒருவித ஏமாற்றம் அவரது மனதை வருத்தியது. இந்நிலை மையில் நான் ஏன் இருக்கின்றேன் என்று எண்ணுவது மனித இயற்கையே. ஒவ்வொரு மனிதர்களும் தங்கள் சுயநலத்திலேயே மிகக்கவனமுடையவர்களாக இருக்கின்றார்கள். இதையே எதிரிகளுடன் இணைந்திருப்போரின் நிலை நிதர்சிக்கின்றது. எல்லோரும் எல்லாம் வல்ல பரம்பொருளிடம் கூட கவனமுடையவர்களாக இல்லை. எனவே இந்தப் போரில் தாங்கள் அடையும் வெற்றி கூட ஏக்கத்தையே கொடுக்கும் என்றும் பிரபாகரன் அவர்கள் எண்ணுகின்றார். ஏனெனில் ஒற்றுமையான வெற்றி தான் முழுமையானதாக அமையும் என எண்ணும் பிரபாகரன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதம்09

*பிரபாகரன் — கிருஷ்ணா! சொந்த உறவினரை இப்போரில் கொல்வதால் என்ன நன்மை வருமென்பதை என்னால் காணமுடியவில்லை. இதிலே பெறக்கூடிய வெற்றியையோ அரசையோ இன்பத்தையோ நான் விரும்ப வில்லை.*

## பொருளுரை

ஒரு மனிதனுடைய உண்மையான சுயநன்மை என்பது பரம்பொருளின் மேல் பதிந்ததாக அமைய வேண்டும். அதை விடுத்து உடலோடு சம்பந் தப்பட்ட உறவுகளில் மகிழ்ச்சி காண்பதும் அதனால் நிரந்தரமான இன்பம் உருவாகும் என்று நினைப்பதும் வெறும் மாயையாகும். அந்த மாயை விலகும் போது உலக இன்பத்திற்குக் காரணம் பரம் பொருள் தான் என்பது புரியவரும். இங்கே பிரபாகரன் அவர்களின் விருப்ப மின்மையானது தன் மக்களில் சிலர் இன்னும் இந்த மாயைக்குள் சிக்கி நிற்பதையே வெளிக்காட்டுகிறது. இந்த மாயாவாதிகளையும் தமது இலட்சியத்தின்பால் தமிழீழம் என்ற பரம் பொருளின்பால் பக்தியுடையவர் களாக்க வேண்டும் என்ற எண்ணமே எதிரிகளோடு சேர்ந்திருப்போ ரைக் கொல்வதிலும் வாழ்வில் மகிழ்விருக்காது என்ற எண்ணத்தை அவருக்கு ஏற்படுத்துகிறது. ஏனெனில்

எம் மக்களின் விடுதலைக்கு ஆயுதப் போராட்டம் தான் ஒரே வழி என்ப தில் முழுமையாக நம்பிக்கையுடன் புரட்சிகர இளைஞர்களின் துணை யுடன் தான் நான் விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தேன் என்று 1984ம் ஆண்டு இந்தியா சண்டே சஞ்சிகைக்குப் பேட்டியளித்த பிரபா கரன் அவர்களின் இந்நிலைப்பாட்டிற்கு ஒருவகையான காரணம் உண்டு.

போர்த்துக்கேயரோடு பொருதிய காலகட்டத்தில் சங்கிலி மன்னன் மன்னா ரின் வேதசாட்சிகள் சிலரைப் படுகொலை செய்த சரித்திரமானது தமிழ்க் கிறிஸ்தவர்களின் மனங்களில் இன்றும் ஒரு சிறு நோவை ஏற்படுத்திய வண் ணமே இருக்கின்றது என்பதை மறைப்பதற்கில்லை. அந்த வகையில் தமிழ்ஈழப் போரில் தான் எடுக்கும் நடவடிக்கைகளும் அமை ந்து விடக் கூடாது என்பதே பிரபாகரன் அவர்களின் நோக்கமாகும்.

கிருஷ்ண பரமாத்மாவின் நேரடிக் கண்காணிப்பில் போர்க்களத்தில் நிற்கும் பிரபாகரன் அவர்கள் சாதாரண மக்கள் எப்படிச் சிந்திப்பார்களோ அப்படிச் சிந்தித்து போர்க்களச் சிக்கல்களை பரம் பொருளின் மூலம் மக்களுக்கு வெளிப்படுத்துகின்றார். ஏனெனில் தமிழ்ஈழப் போர் தெய்வீகப் போர் அங்கு களம் புகுந்துள்ள புலி வீரர்கள் முழுமையான போராளிகள். அவர்கள் போரையே தொழிலாக ஏற்றுக் கொண்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய நாட்டை அவர்கள் போரின் மூலம் மீட்டே ஆக வேண்டும். சுதந்திரப் போரில் பெரும் கஷ்டங்கள் உண்டு இதைப் பிரபாகரன் நன்கு அறிவார். தமிழ்மக்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே அவரின் இந்த நிலையின் காரணமாகின்றது. சுதந்திரப்போர் கஷ்டத்திற்கு இந்திய வரலாறு ஒன்று நல்ல உதாரணம்.

பாரதநாட்டை பிரிட்டிஷாரின் கொடுங்கோலாட்சியில் இருந்து மீட்டெடுக்க ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தவர்களில் நேதாஜி சுபாஸ்சந்திர போஸ் அவர்கள் இந்திய வரலாற்றில் புரட்சி முத்திரை பதித்தவர். அவருக்கு முதலே வங்காளத்தில் தேசிய வீரராகத் திகழ்ந்த ராஷ்பிகாரியும் ஒருவராவார். ராஷபிகாரியை உயிருடன் சரி அல்லது பிணமாகவோ கொண்டு வருபவருக்கு ஒரு லட்ச ரூபா வெகுமதி என்று பிரிட்டிஷ்சார் அன்று அறிவித்தனர்

இனிமேல் இந்தியா சென்றால் தூக்குமேடையில் ஊசலாட வேண்டி ஏற்படும் என்பதை உணர்ந்த ராஷ்பிகாரி ஜப்பானிய பெண்ணை மணந்தார். பாரதப் போராளி பாதை மாறியதால் போராட்டம் தோல்வி கண்டது. ஆனால் தமிழ்ப்புலி வீரர்கள் தங்கள் மண்ணை விட்டு அகலவில்லை. நாட்டை மீட்க வேண்டும் என்பதற்காக காட்டில் வாழ்கின்றார்கள். கழுத்தில் தங்கமில்லை. நஞ்சு தான் தொங்குகிறது. தீய பழக்கங்களையும் ஏன் திருமணத்தையும் துறந்து போராடுகின்றார்கள். இவர்களும் துறவிகளே. கிருஷ்ணபரமாத்மாவின் நேரடி ஆணைக்குக் கீழ் போர்முனையில் இறப்பவனும் துறவு நிலையில் வாழ்பவனும் சொர்க்கம் புகுவர் என்கிறது சைவசமயம். ஆனால் பிரபாகரன் அவர்களோ பரம்பொருளிடம் மேலும் இப்படிக் கேட்கிறார்

## பதம் 10

பிரபாகரன் — கோவிந்தா! நமக்கு அரசு கிடைத்து ஆகப் போவதென்ன? இன்பங்கள் எதற்காக? ஏன்? உயிர் வாழ்வது கூட எதற்காக?

## பொருளுரை

ஒவ்வொரு மனிதனின் தகுதிக்கேற்றவாறு அவர்களின் புலன்களை இறைவன் திருப்தி செய்வான். அதை விடுத்து அவர்களின் பேராசைகளின் அளவுகளுக்கேற்ற வகையில் புலன்களைத் திருப்தி செய்ய மாட்டான். எனவே மனிதர்கள் தங்கள் புலன்களைத் திருப்தி செய்து கொள்ளாமல் இறைவனின் புலன்களைத் திருப்தி செய்ய வேண்டும். அதன் மூலமே சகல உயிர்வாழிகளின் ஆசைகள் எல்லாவற்றையும் இறைவன் நிறைவேற்றி விடுகின்றான். அந்த வகையில் தான்,தன் தந்தை சமதக்கினி முனிவரைக் கொலை செய்த மன்னர் குலத்தைப் பழிவாங்குவதற்காக சிவபெருமானை நினைத்துத் தவமிருந்த பரசுராமன் பரசு என்னும் மழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயுத்தைப் பெற்றார். அந்த ஆயுதத்தால் மன்னர்குலத்தை இருபத்தியொரு தலைமுறைக்குப் பழிவாங்கி வதைத்து முடி வேந்தர்களின் செங்குருதியிலே தந்தைக்குச் செய்ய வேண்டிய பிதிர்க்கடனைச் செய்து முடித்தார் பரசுராமன். அத்துடன் தன் தவ வலிமையால் அதே மழுவாயுதத்தால் கடல் நீரை விலகச் செய்து அவர் உருவாக்கிய நாடு சேரநாடு.

இழந்த தமிழீழ மண்ணை மீளவும் பெறுவதற்காக சாத்வீக வழியில் போராடிய தமிழ் ஈழத் தலைவர்களையும் அவர்களது கொள்கைகளையும் மதியாது மிதித்திட்ட சிங்களத் தலைமைப் பீடம் தமிழர்களின் குருதியில் இனிய சுருதி பாடியது. அந்த ஆக்கிரமிப் பாளர்களைத் தமிழ் ஈழ மண்ணை விட்டு விரட்டுவதற்கு தலைவர் பிரபாகரனும் புலி வீரர்களும் எடுத்த ஆயுதங்கள் உருவாக்கிய நாடு தமிழ் ஈழம்.

பரசுராமர் உருவாக்கிய சேர நாட்டில் பிறந்த விறல்மிண்டர் சிவனையும் சிவனடியார் கூட்டத் தையும் வணங்கும் மிகச்சிறந்த சிவபக்தர். அவர் ஒருமுறை திருவாரூருக்கு விஜயம் செய்து அங்குள்ள சிவ ஆலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனாரின் வருகைக்காக சிவனடியார் கூட்டத்தினருடன் காத்திருந்தார். தாமதித்து வந்த சுந்தரரோ சிவனடியார்களை வணங்காது கோயிலுக்குள் சென்று சிவனை வணங்கினார். இந்நிகழ்வு விறல்மிண்டருக்கு மிகக் கோபத்தை ஏற்படுத்தியது. உடனே வன்றொண்டன் இவ்வடியார்க்குப் புறம்பானவன் அவனை வலிய ஆட்கொண்ட வீதி விடங்கப் பெருமானும் இவ்வடியார்க்குப் புறம்பானவன் என்றுரைத்து விட்டு இனி மேல் திருவாரூர் எல்லையைத் தீண்டுவதில்லை என்று சபதம் எடுத்ததுடன் தன் இல்லம் நாடிவரும் சிவனடியார்களுக்கு திருவமுது கொடுத்ததுடன் திருவாரூர்க்காரராயின் அவர்களின் காலை வெட்டுவதை வழ க்கமாக்கிக் கொண்டார். விறல் மிண்டர் சிவனடியார் மீது வைத்த பக்தி அவரை விறல் மிண்டர் நாயனாராக அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவராக மிளிரச் செய்தது.

அதே போன்று தமிழீழ விடுதலைப்புலி வீரர்களும் தமிழீழத்தைத் தாண்டுவதில்லை என்று சதபம் எடுத்தார்கள். அதனால் தான் எதிரிகள் தமிழ் ஈழ மண்ணைத் தீண்ட முடிவதில்லை. அண்மையில் வீரமரணமடைந்த பெண்புலி வீராங்கனை மேஜர் துளசி போர்க்களத்திலிருந்து வீர சுவர்க்கம் அடையும் முன்னர் தன் தாயாருக்கு வரைந்த இறுதி மடலில் எமது நாட்டுக்கும் (அண்ணன் — பிரபாகரனுக்கும்) அண்ணனுக்கும் துரோகம் செய்ய முடியாது என்று குறிப்பிட்டதுடன் தான் புலிப்படையில் இணையப் புறப்படும் போது தாயார் அணிந்து விட்ட பாபா பதக்கத்துடன் தமது இலட்சியப் போரின் இலட்சினையான சயனைட் குப்பியும் தொங்குகிறது என்று குறிப்பிட்டதோடு கடவுளைக் கும்பிட்டுக் கும்பிட்டே இயமன் பாசக்கயிற்றை எறியப் பயப்படுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று எழுதியுள்ளார். இந்நிகழ்வு காலன் கூட கதி கலங்கும் அளவுக்கு பக்தி சிரத்தையுடன் போர்க்களம் புகுந்துள்ள புலிவீரர்கள் தமிழ்ஈழ மண்ணையும் மன்னனையும் மதியாது மிதிப்போரை அழித்து விட்டு இறைவனோடு ஒடுங்கி தேவதைகள் ஆகின்றனர் என்பதையே காட்டு கின்றது.

தாயக மண் மீது இவ்வளவு பக்தி கொண்ட புலிவீரர்கள் தாயகத்தில் பிரகடனப்படுத்தும் சட்டங்கள் அந்த மண்ணுடன் மட்டும் தான் மண்டி யிட்டுக் கிடக்கின்றது. அந்த மண்ணையும் வீரவரலாற்றையும் வணங்கு கின்றோம் என்று பெருமையடித்துக் கொள்ளும் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ்ஈழமக்கள் தாயகத்தில் புலிகளால் தடைசெய்யப்பட்டுள்ள தமிழகத்துச் சினிமாப்பாடல்களிலும், படங்களிலும், சஞ்சிகைகளிலும் கொண்டுள்ள அபரீதமான மோகம் தமிழ்ஈழப் போராட்டத்திற்கு மாபெரும் துரோகமாகவே அமைகின்றது. இவர்களும் சிங்கள அரசுக்கு துணை நிற்கும் தமிழர்கள் சிலரும் ஒரே வட்டத்தினுள் அடங்குபவர்கள் என்று கருதின் தவறில்லை என்பேன்.

இப்படிப்பட்ட மக்கள் தங்களுக்கு ஒரு சுதந்திர அரசு வேண்டும் என்று நினைத்துக் கொண்டு தங்கள் புலன்களைப் புறத்தே மேய விட்டு சுகங் காணுகின்றார்கள். புலன்களைப் புறத்தே போகவிடாமல் ஆசைகளை உண்டு பண்ணாமல் அடங்கியிருக்கச் செய்து ஆனந்தம் காண்பவர்கள் தான் தியானசுகம் பெறுபவர்களாகும் அப்படிப்பட்டவர்களே புலி வீரர்கள். பக்தி வழியில் செயலால் உடல்களை வருத்தி தியானசுகம் கண்ட மனிதர்கள். உடலை வருத்தாமல் பக்தி வழி செல்லாமல் போதை வஸ்துக்களைப் பாவித்து சுகம் காண அதாவது ஒருவித இன்பங் காண உலக வல்லரசுகள் வழிவகுத்து விட்டன. இதில் தமிழர்களும் விதி விலக்கல்ல.

எனவே தான் சமூக சீர்திருத்தவாதச் சிந்தனையாளரான பிரபாகரன் அவர் கள் பரமாத்மாவிடம் கேட்கிறார். நமக்கு அரசு கிடைத்தும் ஆகப் போவது என்ன? இன்பம் எதற்காக இப்படிப்பட்ட வாழ்வு வேண்டுமா என்று. புலிகள் தாயக மண்ணில் பிரகடனப்படுத்தும் சட்ட திட்டங்களை கடைப் பிடிக்கத் தவறிய புலம்பெயர்ந்த தமிழர்களின் நிலையில் பிரபாகரன் அவர்களின் இத்தகைய வினாக்கள் ஏற்புடையதே.

ஆனால் தவறு செய்பவர் களை கடவுளின் பக்தன் எதிர்ப்பதில்லை. பக்தனுக்கு தீயவர்கள் செய்யும் கொடுமைகளை கடவுள் பொறுத்துக் கொள்வதும் இல்லை. தன்னுடைய விடயத்தில் பரம் பொருள் ஒருவரை மன்னிக்கலாம். ஆனால் அவருடைய பக்தருக்கு தீங்கு செய்பவர் எவரை யும் அவர் மன்னிப்பதில்லை. எனவே பிரபாகரன் அவர்கள் எதிரிகளை மன்னிக்க நினைத்தாலும் பரம்பொருள் தீயவரை அழித்தே தீருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் பரம்பொருளின் உண்மையான பக்தன் பிரபாகரன் எனவே தான் மேலும் பரமாத்மாவிடம் பிரபாகரன் அவர்கள் கேட்கிறார்

## பதம் 11

எவருக்காக நாம் அரசு போகத்தையும் அளவிலாச் செல்வங்களையும் திரும்பப் பெற விரும்புகின்றோமோ அவர்கள் உயிரை மறந்து செல்வம் துறந்து எங்கள் எதிரிகளுடன் நிற்கின்றார்கள்.

## பொருளுரை

17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழீழ மண்ணின் யாழ்ப்பாண இராச்சியத்தை இரண்டாம் சங்கிலி மன்னன் ஆட்சி புரிந்தான். நல்லூர் வீரமாகாளி அம்மனை வணங்கி வளமான ஆட்சியோடு போர்க்களம் புகுந்து பல வியத்தகு வெற்றிகளைச் சேர்ந்தான் மன்னன் சங்கிலி குமாரன். இந்த வீர மண்ணைக் கைப்பற்றும் நோக்குடன் சங்கிலிய மன்னனுடன் போரிட்டு பல தடவைகள் போத்துக்கேயப் படைகள் படுதோல்வியடைந்தன. பின் சிங்களக் கூலிப்படைகளுடன் போத்துக்கேயப் படைத்தளபதி பிலிற்டிஒலிவேரா 1619ம் ஆண்டு யூன் மாதம் சங்கிலி மன்னனைக் கைது செய்து இந்தியாவிலுள்ள கோவாச்சிறையில் தூக்கி லிட்டான்.

தமிழீழத்தின் வன்னி இராச்சியத்தை ஆண்ட மாவீரன் பண்டார வன்னியன் காக்கைவன்னியன் என்ற தமிழ்த்துரோகியால் 1803ம் ஆண்டு அக்டோபர் 31ம் நாள் காட்டிக் கொடுக்கப்பட்டு வன்னி கற்சிலைமடுவில் வைத்து ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து தப்பித்து சகோதரியார் வீடு சென்று இயற்கை மரணம் எய்தினான். இதனோடு தமிழீழ இராச்சியம் அன்னியர் வசம் ஆகியது. 1833ம் ஆண்டு பிரிட்டிஷார் இலங்கை முழுவதையும் ஒற்றையாட்சியின் கீழ் கொண்டு வந்தனர். பின்பு 1948ம் ஆண்டு இலங்கையை விட்டுப் போகும் போது இலங்கை யின் பெரும்பான்மையினரான சிங்கள மக்களிடம் முழு இலங்கையையும் ஒப்படைத்துச் சென்றனர். இதன் விளைவு இலங்கைத் தமிழர்கள் அரசு செல்வங்களை இழந்து அடிமையினமாக்கப்பட வைத்தது. அயல் நாட்டுத்தமிழர்கள் இலங்கையின் தமிழ்ப் பகுதிகளுக்கு வருவதாயின் சிங்கள அரசின் அனுமதி பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

1951ம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் திருகோணமலை மாநாட்டிற்கு தமிழகத்தின் தமிழரசுக்கழகத் தலைவர் திரு ம.பொ.சி. அவர்கள் அழைக்கப்பட்ட பொழுது இலங்கை அரசு விசா வழங்க மறுத்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957ம் ஆண்டு கொழும்பில் நடக்கவிருந்த திருவள்ளுவர் விழாவில் கலந்து கொள்வதற்கு ம.பொ.சி.யாருக்கு விசா வழங்கப்பட்டது. பயணப் படும் சில மணி நேரங்களில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்து விசா பறி முதல் செய்யப்பட்டது.

1974ம் ஆண்டு தை மாதம் யாழ்ப்பாணத்தில் நடந்த அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வருவதற்கு தமிழக அறிஞர்கள் பலருக்கு விசா மறுக்கப்பட்டது. அத் தடையை மீறி மகாநாட்டில் கலந்து கொண்ட உலகத்தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் அவர்களின் உரையினைக் கேட்கக் கூடிய தமிழர்களின் மேல் சிறிலங்கா பொலிசார் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தில் பத்து அப்பாவித்தமிழர்கள் மரணித்தனர். இவைகள் அனைத்தும் தமிழ்ஈழ மக்கள் இழந்த அரச போகத்தையும் செல்வம் செல்வாக்கையும் வெளிக் காட்டி நிற்கும் வரலாற்று உண்மைகள்.

ஆனால் 1985ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் அனுமதி பெற்று தமிழ்ஈழத்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட தமிழ் நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் திரு ப.நெடுமாறன் அவர்கள் 23 நாட்கள் தன் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு தமிழகம் திரும்பி ஈழப்போர் முனையில் புலிகளுடன் என்ற நூலினை எழுதினார்.

அதன்பின் 1987ம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத்தின் மேல் சபை உறுப்பினரும் இன்றைய ம.தி.மு.க. பொதுச்செயலாளருமான திரு வை.கோபால்சாமி அவர்களும் சிறிலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் திரு அனுரா பண்டாரநாயக்காவும் தமிழீழத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு தமிழீழத்தலைவரையும் அவரது பிரதிநிதிகளையும் சந்தி த்து உரையாடினார்கள் என்பதனைக் கவனித்துப் பார்த்தால் தமிழீழ அரசு இரண்டு நாடுகளின் அரச பிரதிநிதிகளையும் ஒருநாட்டின் பெரும் கட்சித் தலைவரையும் வரவேற்றுள்ளது என்பது புலனாகும். இந்த நிகழ்வுகள் தமிழ்ஈழ மக்கள் தாங்கள் இழந்த அரசையும் செல்வம் செல்வாக்கையும் மீளப் பெற்றுள்ளமையை தெளிவாக்குகின்றது.

ஆனால் இவற்றை மீளப் பெற வேண்டும் என்று சாத்வீக வழியில் போராடிய தமிழ் தலைவர்களும் ஆயுதம் தாங்கி போராடியவர்கள் சிலரும் சிங்களத் தலைமைப்பீடத்துடன் நிற்பதானது தமிழ்ஈழ அரசுக்கும் அதன் போராளிகளான புலிகளுக்கும் எதிராக நின்று அவர்கள் செயற்படுகின்றார் கள் என்று கருதும் பிரபாகரன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதம் 12

*கிருஷ்ணா! அங்கே நிற்பவர்கள் யார்? அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை, இந்தியா இவைகள் தர்மத்தைப் பேசுகின்றன. அதர்மத்தின் பக்கம் சார்ந்து நிற்கின்றன.*

## பொருளுரை

*தற்போது உலகளாவிய ரீதியில் உள்நாட்டு யுத்தங்களே அதிகளவில் இடம் பெறுகின்றன. 1977ம் ஆண்டில் வணக்கத் தலங்கள், கலாசாரச் சின்னங்கள், போன்றவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற அம்சம் ஜெனீவா சமாதானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. சாசனத்தில் ஒப்பமிட்டுள்ள எந்தவொரு நாடும் போரில் ஈடுபடும் இராணுவத்தினருக்கு சர்வதேச மனிதாபிமானச் சட்டவிதிகள் பற்றி அறிவூட்ட வேண்டும். சிறிலங்கா அரசுக்கும் இந்தக் கட்டுப்பாடு உண்டு என்று ஐ.சி.ஆர்.சி. பிரதிநிதி செல்வி விக்டோறியா குறிப்பிட்டுள்ளார்.*

*ஜெனீவா உடன்படிக்கையைக் கடைப்பிடிக்காத எந்தவொரு நாடும் குறித்த யுத்தம் முடிந்ததும் சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்தப்படும் என சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதிநிதி அலன் கொலி தெரிவித்திருக்கின்றார்.*

*வெளிநாட்டுக்கப்பல் சேவையில் தலையிட வேண்டாம் என்றும் சகல தீவிரவாத நடவடிக்கைகளையும் மனித உரிமை மீறல்களையும் புலிகள் நிறுத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபையின் கோரிக்கையுடன் நாமும் இணைந்து கொள்கின்றோம் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பிரதிப் பேச்சாளர் ஜம்ஸ் போலே தெரிவித்துள்ளார். படையினருக்கு என கொண்டு வரப்பட்ட ஆயுதங்கள் மோட்டார் செல்கள் எதுவும் இலங்கைக் கடல் எல்லைக்குள் காணாமல் போகவும் இல்லை. கடத்தப்படவும் இல்லை என்று சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.*

*எனவே செய்யாத குற்றத்தை செய்து விட்டீர்களே என்று புலிகளின் மேல் பழிசுமத்தும் அமெரிக்காவும் சர்வதேச மன்னிப்புச்சபையும் சிங்கள அரசிற்கு ஆதரவாக அதர்மத்துக்குத் துணை நிற்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. உலக சமாதானத்தை விரும்பும் அமெரிக்கா உலக நாடுகளுக்கு ஆயுதங்கள் விநியோகிப்பதை நிறுத்த யோசிக்கவில்லை. ஏனெனில் போராயுதங்கள் அவர்களின் பேராதாயங்கள் அல்லவா? இவைகள் எல்லாம் ஆசியாக் கண்டத்தை ஆக்கிரமிக்க நினைக்கின்ற அமெரிக்கக் கண்டத்தினரின் அபிலாசைகள் என ஒருவர் நினைப்பின் தவறில்லை என்பேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தர்மம் பிறந்த பாரதபூமி என்று புகழ்பாடிக் கொண்டிருப்பதோடு இந்தியா தங்கள் இரத்த நாடு என்ற உணர்வோடு தமிழ்ஈழத்தவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தியா அரசோ தனக்கெதிரான சிங்களவர் பக்கம் நிற்பது மிக வியப்பிற்குரியது.

1962ம் ஆண்டு சீனா இந்தியாவின் எல்லையை ஆக்கிரமித்த போது அன்றைய இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்தியாவிற்கு ஆதரவாக இருக்கவில்லை. நடுநிலையாளர் என்ற வேடம் பூண்டு மறைமுகமாக சீனாவையே ஆதரித்தார். 1974ம் ஆண்டு வங்காளதேசப் போராட்டத்தையொட்டி இந்தியா பாகிஸ்தான் போர் மூண்டது. பாகிஸ்தான் இராணுவ விமானங்கள் இலங்கை வழியாக வங்காளதேசம் போவதற்கு அனுமதியளித்ததின் மூலம் அன்றும் ஸ்ரீமாவோ இந்தியாவுக்கு எதிராகவே இருந்தார்.

இதேவேளை இந்தியா மீது சீனா படையெடுத்த போது தமிழர் தந்தை செல்வநாயகம் அவர்கள் இந்தியாவுக்கு ஆதரவாகத் தந்தி அனுப்பினார். இந்திய எல்லையைக் காக்க தமிழர் படை அனுப்புவதாக அறிவித்தார். இந்தியாவுக்காக நிதியும் திரட்டினார். இவைகள் இந்தியாவுக்கும் தமிழ் ஈழ மக்களுக்குமுள்ள உறவினை உணர்வாக்கும் சம்பவங்கள்.

ஆனால் இந்தியாவோ அன்றைய நிறவெறி கொண்ட தென்னாபிரிக் காவை எதிர்த்தது. இந்திய பிரபல பக்திப்பாடகரான பித்துக்குளி முருக தாஸ் தென்னாபிரிக்காவில் உள்ள தமிழர் கோயிலுக்குப் பக்திப்பாடல் பாடுவதற்குப் போனதைக் கண்டித்ததுடன் எதிர்காலத்தில் எந்த இந்தியக் கலைஞனும் தென்னாபிரிக்கா போகக் கூடாது என்று தடைவிதித்தது.

ஆனால் இன்று இனவெறி கொண்ட இலங்கைக்கு தங்கள் விளையாட்டு வீரர்களையும் கலைஞர்களையும் அனுப்புகின்ற இந்தியா தென்னாபிரிக்காவுக்கு ஒரு நீதி தமிழ்ஈழத்துக்கு ஒரு நீதி என்று கடைப்பிடிப்பதையே காட்டுகிறது. இது இந்தியாவில் நீதி இறந்து விட்டதையே உணர்த்துகின்றது. எனவே தான் தர்மத்தின் தாயான இந்தியா தர்மத்தைத் தொலைத்து விட்டு அதர்மத்தின் பக்கம் நிற்பதையும் சமாதானம் செய்ய வேண்டிய அமெரிக்காவும் சமாதானசபையும் தடுமாறி நிற்பதையும் நினைத்து வேதனைப்படும் பிரபாகரன் அவர்கள் பரமாத்மாவிடம் அதைச்சுட்டிக் காட்டுகிறார்.

## பதம் 13

புலிவீரர்கள் — தமிழ்ஞானியைப் பார்த்து சுவாமி! களத்தில் தலைவர் பிரபாகரன் அவர்கள் எங்களை மிக உற்சாகமாகவே வழி நடத்துகின்றார். ஆனால் நீங்களோ அவர் போரை விரும்பவில்லை என்கிறீர்கள். எங்களுக்கு ஒரே குழப்பமாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளுரை

கடவுளின் உபதேசங்களில் சமயங்களை மட்டும் காண்பதை விடுத்து சமுதாயத்தையும் பார்க்க வேண்டும். நான் கீதையின் உபதேசத்தில் சமயத்தோடு சேர்ந்த சமுதாயத்தையே பார்க்கின்றேன். அதனால் தான் என் பொருளுரைகள் சமயம், இலக்கியம், இதிகாசம் இன்றைய உலக நடப்புக்கள் அடங்கிய பொருளுரையாக விரிவடைகின்றது என்பதை என் அன்புத்தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்துவது இந்த இடத்தில் தேவையாகின்றது. பக்தன் எந்த உருவத்தைப் பெரிதும் விரும்புகின்றானோ அந்த உருவத்தில் கடவுள் அவனுக்குக் காட்சியளிப்பார் என்கிறது இந்துமதம். இதற்கு ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சர் தரும் விளக்கம் என்னவெனில்

'கடவுள் எல்லா உயிர்களுக்குள்ளும் இருக்கின்றார். நல்லவரோடு நெருங்கிப் பழகலாம். கெட்டவர்களைக் கண்டால் தூரவிலகி நிற்க வேண்டும். புலியினிடத்தும் நாராயணன் இருக்கின்றார். என்கிறார். இந்த வகையில் தமிழ்ஈழம் மலர்ந்தால் தலைவர் பிரபாகரன் அவர்களையே தாங்கள் வணங்கும் கடவுளாக ஆக்கிக் கொள்வார்கள் தமிழ் ஈழமக்கள் என்று யாரும் நினைப்பின் தவறிருக்க முடியாது.

தமிழ்ஈழம் தந்த சமயகுரவரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெரிய புராணத் திரட்டிலும் சைவசமய நாயன்மார்களிடத்தும் அளவிலாப் பற்றுக் கொண்டவர். சிவபெருமானையே அதில் கண்டவர். நாவலரின் பெரிய புராண அன்பின் மிகுதியைக் கண்ட நாவலரின் அண்ணன், அவரின் அன்பின் எல்லையை அறிய விரும்பி நாவலரிடம் சென்று சொல்லக் கூடிய ஒருவரிடத்தில் 'தொண்டர் புராணக் கதைகள் எல்லாம் அண்டப் புளுகு. கற்பாருக்கு இறையன்பு நிறையக் கூறிய கற்பனைக் கதைகள் அவை உண்மையென்று எண்ண வேண்டாம் என்று கூறினார்.

அச்செய்தி அந்த அன்பர் மூலமாக நாவலரின் செவிக்கு எட்டியது. நாவலருக்கு தமையன் மீது கடும் சினம் உண்டாயிற்று. அத்தமையனாரை வெட்டிக் கொலை செய்வது தான் அவர் கூறிய பழியுரைக்குக் கழுவாய் என்று துணிந்தார். கையிற் பெரியகத்தியொன்றை எடுத்துக் கொண்டு தமையனாருடைய வீடு நோக்கிச் சென்றார். அங்கே இருந்தவர்கள் நாவலரைப் பிடித்து தடுத்து நிறுத்தி சினத்தைத் தணித்தனர். சிவபக்தன் நாவலர் சினம் தணிந்தார். தமையனார் உயிர் தப்பினார் என்று யாழ்ப்பாணப் புலவர்கள் என்ற நூலில் புலவர் சொ.முருகேச முதலியார் குறிப்பிடுகின்றார்.

அந்தத் தமிழீழ மண்ணிலே பிறந்து வீரப்புலிகளாகக்களத்தில் நிற்கும் புலிகளும் தமிழீழ மண்ணையும் தமிழீழத் தலைவர் பிரபாகரன் அவர்களையும் இறுக்கமான பக்தி பூர்வமாகவே நேசிக்கின்றார்கள். அத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகைய தலைவரின் வீரத்தைக் குறைத்தும் ஆயுதப்போரை பிரபாகரன் அவர்கள் விரும்பவில்லை என்று தமிழ்ஞானி உரைப்பதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதனால் தங்கள் மனதில் ஏற்பட்டுள்ள குழப்பத்தைத் தீர்க்குமாறு புலிவீரர்கள் தமிழ்ஞானியிடம் கேட்கின்றார்கள். தமிழர் குருஷேத்திரப் போர்க்களத்தில் தற்போது புலிகள் அடைந்து கொண்டிருக்கும் வெற்றிக்குக் காரணமே அவர்களுடைய மனதில் கடுகளவும் குழப்பம் இல்லாத தன்மையே. அப்படிப் பயிற்றுவித்திருக்கின்றார் போராளிகளைத் தலைவர் பிரபாகரன் அவர்கள். அத்துடன் தமிழீழத்தையும் அதன் போர்ப்படையான புலிகள் பற்றியும் தவறான அபிப்பிராயங்களை கொண்டுள்ள உலகநாடுகளின் சந்தேகங்களைத் தீர்ப்பது முதல் வேலை என்பதும் தலைவர் பிரபாகரன் அவர்களின் எண்ணம். இது போராளித் தலைமைக்குரிய தனித்தன்மையே.

இப்படியொரு வரலாற்று நிகழ்வு பாரதப் போராளியின் வரலாற்றினுள்ளும் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவது மிகப் பயனுள்ளதாகும் எனக் கருதுகின்றேன். எப்படி சிங்களவரின் அடக்குமுறையில் இருந்து தமிழீழ மக்களை மீட்கும் நிலைமை புலிகளுக்கு ஏற்பட்டதோ அப்படி ஒரு தேவை பிரிட்டீசாரின் ஆட்சிக் காலத்தில் இந்திய இளைஞர்களுக்குத் தேவையாகியது. மகாத்மா காந்தியடிகளின் போராட்டம் இந்தியர்களின் போராட்ட நியாயங்களை சர்வதேச அரங்கில் பிரசாரப்படுத்துமே தவிர பிரிட்டீசாரின் கொடுங்கோன்மையாட்சியை உடைத்தெறியாது என்று நம்பிக்கை கொண்டார்கள் இந்திய இளைஞர்கள். மகாத்மாகாந்தியடிகளின் அகிம்சை வழியில் போராடிய இளைஞர் நேதாஜி சுபாஸ்சந்திர போஸ் சிறையில் இருந்து சிந்தித்தார். ஆயுதம் ஏந்திய போராட்டம் தான் சுதந்திர இந்தியாவைத் தோற்றுவிக்கும் என்று நம்பிக்கை கொண்டார். அந்தக் கனவு நிறைவேற வேண்டுமாயின் தான் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும். சிறையை உடைத்துத் தப்பினால் தான் வெளியேறுவதே கஷ்டமாகிவிடும் என்று நினைத்த சுபாஸ் சந்திரபோஸ் சிறையில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார்.

ஒரு இளைஞர் பட்டினி கிடந்து தங்கள் சிறையில் மரணிக்கக்கூடாது என்று கருதிய பிரிட்டிசார் சுபாஸ் சந்திரபோஸை விடுதலை செய்தனர். அவர் மாறுவேடத்தில் 1941ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம்திகதி இந்தியாவை விட்டு வெளியேறினார். ஒரு அகிம்சாவாதி சுதந்திர இந்தியாவைக் காணப் போராளியாக மாறினான். இந்த வரலாற்று நிகழ்வை இன்றைய இந்தியர்கள் மறந்தார்களே என்பதை நினைக்கும் போது தான் இன்றைய இந்தியர்களை மனிதர்களாக மதிக்க முடிவதில்லை. 1987ம் ஆண்டு சமாதானப் புறாக்கள் என்ற போர்வையோடு தமிழ்ஈழ மண்ணில் கால் பதித்த இந்தியப்படைகள் தமிழ்ஈழ மக்களை கொலை செய்து குவித்தார்கள். ஆயுதம் ஏந்திப் போராடிய புலிவீர மறவன் திலீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிம்சை மார்க்கத்தில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தான். அதுவும் போர்க்கடவுளான நல்லூர்க்குமரன் ஆலய முன்றலில். அந்த வீர மறவனை மரணிக்கச் செய்ததின் மூலம் சுகத்தையும் சுதந்திரத்தையும் பெற்றுத் தந்த காந்தியடிகளுக்கு குண்டையும் மரணத்தையும் பரிசாகக் கொடுத்த போதே எங்கள் மனிதமும் மரணித்து விட்டது என்பதைக் காட்டினார்கள் இந்தியர்கள். அந்தக் கொடியவர்களை தமிழீழ மக்கள் நேரில் பார்த்தார்கள். அந்த அநீதியாளர்களின் கொடுமைகள் தமிழீழ மக்களை விட்டு என்றும் அகலாதவை. இப்படிப்பட்ட இந்தியர்கள் கொண்ட நாடு உருவாகும் என்று நினைத்திருந்தால் நேதாஜி சுபாஸ் தன்னை ஒரு இந்தியப் போராளியாக மாற்றியிருக்கவே மாட்டார். பிறந்த மண்ணை விட்டு புறப்பட்ட நேதாஜி சுபாஸ்சந்திரபோஸ் அன்றைய ஜேர்மன் சர்வாதிகாரியும் பெரும் படைப்பலம் கொண்டவருமான ஹிட்லரைச் சந்தித்தார்.

ஆனால் ஹிட்லரோ தான் எழுதிய மேன்காம் 'எனது போராட்டம்' என்ற புத்தகத்தில் இந்தியாவைப் பற்றி பின்வருமாறு எழுதியிருந்தார்.

'1920 — 1921 இல் ஜேர்மன் தேசியவாதிகளில் சிலர் கொண்டிருந்த சிறுபிள்ளைத்தனமான புரிந்து கொள்ள முடியாத நம்பிக்கை என் ஞாபகத்தில் இருக்கிறது. அதாவது இந்தியாவில் இங்கிலாந்து தன் ஆதிக்கத்தை இழந்து வீழ்ச்சியடையும் காலம் நெருங்கி விட்டது என அவர்கள் எண்ணினர். அப்போது ஆசியாக்காரர்களான பல வேடதாரிகள் தங்களை இந்தியாவின் விடுதலை வீரர்கள் என்று கூறிக் கொண்டு ஐரோப்பா முழுவதும் சுற்றிக் கொண்டிருந்தார்கள். நியாயபுத்தி படைத்தவர்கள் கூட அத்தகைய நாடோடிகளின் கூற்றைக் கேட்டு மயங்கி விட்டார்கள். பிரிட்டிஸ் சாம்ராஜ்யம் இந்தியாவிலிருந்து மறையும் காலம் வந்து விட்டது என்று நம்பினார்கள். தங்களுடைய கூற்று எவ்வளவு மடத்தனமானது என்பதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. பிரிட்டின் இந்தியாவை இழந்து விட்டால் பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்திற்கு அந்திம காலம் வந்து விடுமென அவர்கள் எதிர்பார்த்ததிலிருந்தே இந்தியா இங்கிலாந்தின் வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதது என்பதை ஒப்புக் கொள்ளுகின்றனர் என்பது தெரிகிறது. இந்தியாவைத் தன் பிடியிலிருந்து நழுவ விடாமல் பாதுகாக்க இங்கிலாந்து தன் முழுச்சக்தியையும் உபயோகித்தே தீரும் என்று நம்புவது சரித்திரத்தின் ஞானசூன்யத்தையே காட்டுவதாகும்.

மிகவும் சக்தி வாய்ந்த ஒரு விரோதியின் ஆயுதபலத்தினால் ஜெயிக்கப்பட்டாலன்றி அது இந்தியாவை ஒரு காலத்திலும் இழக்காது. ஆனால் இந்தியாவில் ஏற்படும். எழுச்சிகளால் இங்கிலாந்து தோல்வியுறும்படி செய்து விட முடியாது. இங்கிலாந்தைப் பணிய வைப்பது எவ்வளவு கடினம் என்பதை ஜேர்மனியர்களாகிய நாம் அனுபவபூர்வமாக அறிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளோம். இவைகள் எல்லாம் ஒரு புறம் இருக்க இந்தியா மற்ற எந்த நாட்டு ஆதிக்கத்திலும் இருப்பதைக் காட்டிலும் பிரிட்டிசாரின் ஆதிக்கத் தில் இருப்பதையே ஒரு ஜேர்மனியன் என்ற முறையில் நான் விரும்புகின் றேன் என்று எழுதி வைத்த மனோநிலை கொண்ட ஹிட்லரை தங்கள் இந்தியாவுக்கு ஆதரவாகத் திருப்ப முடியும் என்ற நம்பிக்கையில் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் ஹிட்லரைச் சந்தித்தார்.

இத்தருணத்தில் தமிழ்ஈழ மக்களைப் பற்றி இந்திய மக்கள் இன்றைய போர்ச்சூழலில் என்ன நினைத்துள்ளார்கள் என்பதை ஆராய்வது பொருத்த மானதாகும். தமிழ்ஈழத்தில் ஏற்பட்டுள்ள எழுச்சிகளும் புலிவீரர் களின் படைப்பலமும் தமிழ்ஈழம் என்ற ஒரு நாட்டை இலங்கையில் உருவாக் கும் என்பதை அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர்.ஜயவர்த்தனா ஒப்பந்தங்கள் மூலம் இந்தியப்படைகள் அனுபவபூர்வமாக படித்து விட்ட பாடங்கள் எண்ணிலடங்காதவை. அது மட்டுமின்றி அந்த இரு நாட்டுத் தலைவர்களின் ஒப்பந்தங்கள் பற்றித் தமிழ்ஈழத் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் பேச வேண்டும் என்பதற் காக இந்திய விமானம் இந்திய உயர் இராணுவப் படைத்தளபதிகளுடன் வட தமிழ் ஈழத்தின் சுதுமலை ஆலய முன்றலில் இருந்து தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு அழைத்து இந்தியப் பிரதமர் ராஜீவ் பேசியதன் மூலம் தமிழ்ஈழத்தின் தேவை இந்தியாவுக்கும் தேவையென்பது தெளிவா கின்றது. அத்துடன் தமிழ்ஈழத் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் பேசிய முதல் இந்தியத் தலைவர் ராஜீவ் என்பதும் தமிழ் ஈழத் தலை வரை வரவேற்ற முதல் நாடு இந்தியா என்பதும் மிகப்பெருமை மிகு வரலாற்று நிகழ்வு.

உலகத்தலைவர்கள் தம்மிடம் எவ்வளவு அச்சம் கொண்டிருந்தார்கள் என்பதை நன்கு உணர்ந்திருந்த ஹிட்லர் அன்னிய ஆட்சியில் அடிமைப் பட்டுக் கிடந்த இந்திய மக்களின் தலைவரான நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் மனதில் அணுவளவும் அச்சமின்றித் தன்னை அணுகியது. ஹிட்ல ருக்கு மிக வியப்பாக இருந்ததுடன் அவரை அறியாமலே சுபாஸ் மேல் ஒரு அபரீதமதிப்பு ஏற்பட்டது. அத்துடன் ஹிட்லர் கேட்ட கேள்விக்கு நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அளித்த பதில் ஹிட்லரை மேலும் வியப்பில் ஆழ்த்தியது. ஜேர்மனியிடமிருந்து தாங்கள் என்ன உதவியை எதிர்பார்க் கின்றீர்கள் என்று கேட்டார் ஹிட்லர். தாங்கள் செய்ய வேண்டிய முதல் உதவி மேன்காம் 'எனது போராட்டம்' என்ற புத்தகத்தில் இந்தியாவைப் பற்றி தாங்கள் குறிப்பிட்டுள்ள ஆதாரமற்ற பகுதியை எடுத்து விடுங்கள் என்றார் நேதாஜி. அதற்குச் சம்மதித்த ஹிட்லர் இந்தியா சுதந்திரம் பெறும் விடயமாக ஏதாவது திட்டமிருந்தால் அதற்கு ஜேர்மனி முழு ஆதரவும் அளிக்கும் என்றும் வாக்களித்தார்.

அதே போன்று தான் தமிழர் குருஷேத்திரத்தில் பெரும் வெற்றிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவித்துக் கொண்டிருக்கும் தலைவர் பிரபாகரன் அவர்களைப் பற்றி தமிழ்ஞானி கூறியவைகள் ஆதாரமற்றவைகளாகவும் புலிவீரர்கள் மன தில் குழப்பதையும் ஏற்படுத்தியது. அதனால் முதலில் குழப்பதைத் தீர்க்குமாறு புலிவீரர்கள் தமிழ்ஞானியிடம் கேட்கின்றார்கள். புலி வீரர்கள் ஒரு நிறைவான ஆன்மீக வாதிகள் ஏனெனில் ஆன்மீக வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் வெட்கம் வெறுப்பு, பயம் என்ற மூன்றும் அவர் களிடம் கொஞ்சமும் இல்லை.

ஹிட்லரின் பூரண ஆதரவை பெற்ற பாரதப் போராளி நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் பாயும் புலியைச் சின்னமாகக் கொண்டு சுதந்திர இந்திய சேனை என்ற படையை அமைத்தார். அந்தப் போராளியின் தூய எண் ணம் துலங்க வேண்டும் என்றால் இன்று தமிழ்ஈழத்தில் பறக்கும் புலிக் கொடி அகில இந்தியாவிலும் பறக்க வேண்டும் புலிவீரர்களின் குழப்ப தைத் தீர்க்கும் வகையில் தமிழ்ஞானி கூறுகின்றார்.

## பதம் 14

தமிழ்ஞானி — புலிகளே! நல்லது கேட்டீர் விஞ்ஞான உலகத்தில் நீங்கள் மெய்ஞான உலக விடயங்களை அறிவது கடினமே. அது மெய் ஞானிகளால் மட்டும் தான் முடியும்.

## பொருளுரை

இங்கே புலிகளே! என்று தமிழ்ஞானி அழைப்பதன் அர்த்தத்தை முதலில் நாம் புரிந்து கொள்வது மிக அவசியம். இதைப்பற்றி ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச் சரிய சுவாமிகள் பின்வருமாறு விளக்கம் தருகின்றார். பராசக்தி இல்லாத இடம் ஒன்றுமில்லை. மனதிற்குப் பிடிப்பு உண்டாவதற்காக அவளுக்குப் பல இருப்பிடங்களைச் சொல்லியிருக்கின்றது அதில் அமிர்தசாகரத்தின் மத்தியில் மணித்தீபம் என்ற மணிமயமான தீவில் அமர்ந்திருப்பவ ளாகவும் சொல்லப்படுகின்றது. இந்த வரலாற்றை முழுமையாக நாம் வாசித்தால் நமது நயினை நாகபூஷணி அம்பாள் இதயத்தில் தோன்றி மறைவதை உணரலாம். பராசக்தியின் மற்றுமொரு வாழ்விடம் பூரணச் சந்திரன். பராசக்தியின் இந்த இருப்பிடத்தை தியானம் செய்து பல மகான் கள் பரமானந்தத்தை அனுபவித்தார்கள் என்று சொல்லப்படுகின்றது.

பூரண சந்திரனில் அம்பாள் அமர்ந்திருப்பதை தியானிக்க வேண்டுமாயின் புலித்தோலின் மேல் இருந்து தியானிக்க வேண்டுமாம். எனெனில் புலி எப்படித் தனக்குத் தேவையான இரையை விரைந்து ஒரே பாய்ச்சலில் பிடித்துக் கொள்ளுகின்றதோ அதேபோல் புலித்தோலை ஆசனமாகப் பாவித்தத்தும் மனம் விரைந்து தியானத்தில் ஒன்றி விடுகிறதாம். எங்கள் ஜகத் குரு எங்களுக்கு உபதேசித்த இந்த வழிமுறையை இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கடைப்பிடிக்க முடியுமா? நிச்சயம் மலரும் தமிழீழத்தில் இது சாத்தியமாகும்.

தன்னுடைய உபதேசங்களை உடன் தங்கள் மனங்களில் பதிய வைத்து அதில் இருந்த சந்தேகங்களை புலி வீரர்கள் கேட்பதைப் பார்க்கும் போது வேண்டிய இரையை விரைந்து பிடிக்கும் புலிகள் நினைவு தமிழ்ஞானிக்கு வரவே புலிவீரர்களைப் புலிகளே! என்று அழைக்கிறார். தமிழ் ஈழத்தை விரைந்து அடைவார்கள் என்பதும் இங்கே மறைமுகமாகத் தெரிவிக்கிறார் தமிழ்ஞானி.

மற்றது புலிவீரர்களின் சந்தேகத்தைத் தீர்க்க உலகை இரண்டு வகைப் படுத்துகின்றார் தமிழ்ஞானி. விஞ்ஞானிகள் உலகம். மெய்ஞானிகள் உலகம். பெற்றோர்களின் திருமண நிகழ்ச்சியை பிள்ளைகளும் ஏன் பேரப் பிள்ளைகளும் பார்க்கிறார்கள். அதற்கு வீடியோ என்ற விஞ்ஞானக்கருவி உதவியாக இருக்கின்றது. எனவே தான் சந்திரமண்டலம் செவ்வாய் மண்டலம் போன்ற மண்டலங்களையே இந்த உலகத்திலிருந்து ஆராய முடிகின்றது. அதேபோன்று மனிதர்கள் பற்றிய சகல விபரங்கள் அடங்கிய கோவை திருக்கைலாயத்திலும் இருக்கின்றது. இதை இன்னுமொரு வகையிலும் நாம் பார்க்கலாம். கைலாயத்தில் சிவனின் ஒருபாதியும் சக்தியின் ஒருபாதியும் இணைந்து அர்த்தனாதீஸ்வரராக இருக்கின்றார்கள். அவர்களின் மறுபாதிகளே பூவுலகில் ஆண்களாகவும் பெண்களாகவும் பிறந்துள்ளார்கள் என்று நமது ஆன்மீகர்கள் கருத்துச் சொல்கின்றார்கள். எனவே அந்த மெய்ஞான உலகத்திலும் நமது பங்கிருக்கின்றது என்பதிலும் உண்மை உண்டு. பூவுலகில் நமது அபிலாசைகள் அரைகுறையாகவே இருக்கும். மெய்ஞான உலகில் உள்ள சிவசக்தி யுடன் நாம் இணையும் போதே முழுமையடைய முடியும். எனவே ஒவ்வொரு மனிதர்களும் பூவுலகத்தில் என்ன செய்ய வேண்டும் என்பது மெய்ஞான உலகில் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்படுகின்றது. பிரபாகரனுக்கும் கிருஷ்ண பரமாத்மாவுக்கும் தமிழர் குருஷேத்திரம் பற்றிய விடயங்கள் விவாதித்து முடிவெடுக்கப்பட்டு விட்டது இதைத்தான் யாழ்.நகர் தந்த யோகர்சுவாமிகள் சொன்னார் அது எப்பவோ முடிந்த முடிவு என்று. தமிழர் குருட்சேத்திரப் போர் ஒரு தெய்வீக அனுக்கிரகம் நிறைந்த போர் என்பதைப் புலி வீரர்களுக்கு மீளவும் நினைவூட்டவே மெய்ஞானக் கண்களால் தான் பார்க்கும் காட்சிகளை விளக்குகிறார் தமிழ்ஞானி. இறைவனோடு தன் சந்தேகங்களை விவாதித்து தீர்க்கமான தெளிந்த மனநிலையுடன் பிரபாகரன் அவர்கள் களத்தில் நிற்கின்றார் என்பன தமிழ் ஞானியின் விளக்கம் புலிவீரர்களின் குழப்பத்தைத் தீர்க்கிறது. ஆனால் பிரபாகரன் அவர்களோ குழப்பதில் இருக்கும் தனது மக்கள் சிலர் தெளிவு பெற வேண்டும் என்பதற்காக பரம்பொருளிடம் கேட்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதம் 15

*இயற்கையே! என் கண்ணா! நான் கொல்லப்பட்டாலும் கவலையில்லை. இவர்களைக் கொல்ல நான் விரும்பவில்லை மூவுலகையும் ஆளுகின்ற வாய்ப்புக் கிடைப்பதாயினும் இந்தப் போரை நான் செய்ய மாட்டேன் வெறும் மண்ணை ஆளுவதற்காகவா செய்வேன்?*

## பொருளுரை

பிரம்மம் என்றால் பரம்பொருள் அல்லது இயற்கை என்னும் பொருள் படும் என்று கவிஞர் கண்ணதாசன் கூறுகிறார். இதுவரை பல பெயர்களால் கிருஷ்ணரை அழைத்த பிரபாகரன் அவர்கள் தற்போது இயற்கையே என்கிறார். ஏனெனில் எவனொருவன் மனதையும் ஆசைகளையும் கட்டுப்படுத்தி இந்த உலகத்தை இறைவனுடைய உருவமாகவும் இறைவனையே உலகமாகவும் காண்கிறானோ, எவன் விருப்பு வெறுப்பில்லாமல் நன்மை தீமைகளைப் பற்றிச் சிந்திக்காமல் தனக்கு ஏற்பட்ட கடமைகளை இறைவனுக்கே அர்ப்பணம் செய்து வருகிறானோ அவன் வாழ்க்கைத்துக்கத்தை அடைவதில்லை. அப்படிப்பட்டவர்களையே விவேகி என்றழைக்கிறது இந்துசமயம். பிறப்புக்களில் மிகச் சிறப்பாகக் கருதப்படும் மனிதப் பிறப்புக்களிலேயே விவேகிகள் உருவாகின்றார்கள்.

விவேகியாகப்பட்டவன் அகங்காரம் முதலானவை என்னிலும் வேறானவை என்பதை அறிந்து அவற்றின் வழிச் செல்ல மாட்டான். விவேகியானவன் தன்னைச் சுற்றிலுமுள்ள இந்த உலகத்திலிருந்து பரம்பொருளை அறிய முற்படுகின்றான். அப்பொழுது அவன் பார்க்கின்ற எல்லாப் பொருட்களும் பிராணிகளும் அற்பமாகத் தோன்றுகின்ற வஸ்துக்கள் அவனுக்கு ஞானத்தை உணர்த்துகின்றன. இந்த வழியில் ஞான உணர்வு பெற்றவர் பிரபாகரன் அவர்கள். அதனால் தான் அவரை ஒரு விவேகியாக பரமாத்மா ஏற்றுக் கொண்டுள்ளார். இதை உண்மையாக்கும் வகையில் 1984ம் ஆண்டு இந்தியாவிலிருந்து வெளிவரும் சண்டே ஆங்கிலப் பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றிற்குப் பதில் அளித்த திரு வே.பிரபாகரன் (இப் பேட்டியே தலைவர் பிரபாகரன் பத்திரிகைகள். சஞ்சிகைகளுக்கு அளித்த முதல் பேட்டி) அவர்கள் இயற்கையே எனது நண்பர் என்கிறார். இவருக்கு இயற்கை என்ன போதனைகள் செய்தது என்பதை இங்கே நாம் ஆராய்ந்து பார்ப்பது மிகப் பயனுடையதாகும்.

பூமியானது தோண்டப்பட்டும் வெட்டப்பட்டும் குடையப்பட்டும் மனிதர்களாலும் பிராணிகளாலும் பீடிக்கப் பட்டாலும் பொறுத்துக் கொண்டிருக்கிறது. அதேபோல் மனிதர்களும் மனோதைரியம் உடையவனாய் தனக்கு ஏற்படும் சுகதுக்கங்கள் எல்லாம் தெய்வச்செயலால் ஏற்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது என்று கருதிப் பொறுமையாக இருத்தல் வேண்டும்.

காற்று பிரதிஉபகாரத்தை விரும்பாமல் உயிர்வாழிகளுக்கு ஆதாரமாக இருப்பது போல் மனிதர்களும் எல்லா உயிர்வாழிகளுக்கும் உதவி புரிந்து வாழப் பழக வேண்டும். ஆகாயத்தில் மேகம் முதலானவை சஞ்சரிக்கின்றன. சூரிய. சந்திரர்கள், நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்றன. அவற்றிற்கெல்லாம் இடமளித்துக் கொண்டிருக்கும் ஆகாயம் அவற்றிற் கிடையில் உருவ பிரகாச பேதங்களைப் பார்ப்பதில்லை. அதே போல் ஒவ்வொரு மனிதர்களும் உலகியல் வாழ்வில் நிற மொழி சமய பேதங் கள் பார்க்காமல் வாழப் பழக வேண்டும்.

நிர்மலமான தெளிந்த நீர் பிராணிகள், மனிதர்கள் என்று வேறுபாடு இல்லா மல் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக இருந்து இரட்சிப்பது போல் மனிதர் களும் சகல உயிர் வாழிகளிடமும் அன்புடையவர்களாகவும் பரிசுத்தமாக வும் இன்சொல் பேசுபவர்களாகவும் வாழப் பழக வேண்டும்.

நெருப்பானது நல்லவை கெட்டவை எல்லாவற்றையும் எரித்துச் சாம்ப லாக்கக்கூடிய சக்தியுடையதாயிருந்தும் தான் எதனாலும் பாதிப்படை வதில்லை. அதேபோன்று மனிதர்களும் தாங்கள் செய்யும் நல்ல செயல் களால் சந்தோஷப்பட வேண்டுமே தவிர அவற்றை அனுபவிக்கக் கூடாது. இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களைக் களங்கப்படுத்தக்கூடிய எந்த பாவ தோஷபயங்களாலும் பாதிப்படைவதில்லை.

சந்திரனின் கலைகளே தேய்ந்து வளர்கிறது, சந்திரனல்ல. அதேபோல் பிறப்பு வளர்ச்சி மரணம் என்பது இந்த உடலுக்கு மட்டுமேயன்றி உயி ருக்கல்ல என்பதைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

சூரியன் பூமியில் உள்ள தண்ணீரை எடுத்து மேகங்களாக்கி பிறகு மீண்டும் அம்மேகங்களைக் கொண்டு மழை பெய்யச் செய்வது போல் மனிதர்களும் தாங்கள் தேடிய செல்வங்களைத் தக்கவர்களுக்குக் கொடு த்து விட்டு இது என்னால் அடையப்பட்டது என்றோ கொடுக்கப் பட்டது என்றோ நினைத்து அகங்காரம் கொள்ளாமல் அதைப்பற்றிச் சிந்திக்காமலே வாழப்பழக வேண்டும்.

தேனீக்கள் மிகவும் பிரயாசைப்பட்டு சிறு சிறு துளிகளாகக் கொண்டு வந்து சேர்க்கும் தேனை மனிதர்கள் ஒரு நொடியில் தேன் கூட்டை அழித்து விட்டு அபகரித்துக் கொள்கின்றார்கள். அதைப்போல் மிகவும் பிரயாசைப்பட்டுச் சேர்க்கின்ற செல்வம் விதி வசத்தால் பிறரால் அபகரி த்துச் செல்லப்படுவதுண்டு. ஆகையால் செல்வத்தின் மேல் மோகம் கொள்வதும் மனிதர்களுக்கு ஆகாத செயல் என உணர்தல் வேண்டும்.

புல் வளர்ந்திருக்கும் இடத்தை நோக்கி ஓடுகின்ற மான் அங்கு வேடன் விரித்த வலையில் விழுந்து நாசத்தை அடைகின்றது. அதேபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களும் தெய்வீக விடயங்களைச் சிந்திப்பதை விட்டு தங்கள் சிந்தனைக்கு வேலை கொடுப்பதற்காக கண்ட விடயங்களையும் அறிய முற்படுவதால் நாசத்தையே அடைகின்றார்கள் என்பதை தெரிந்து கொள் ளல் வேண்டும்.

தூண்டில் முள்ளில் வைக்கப்பட்ட இரையை விரும்பியதால் உயிரை இழக்கின்ற மீனைப்போல் மனிதர்களும் ருசி பார்க்க ஆசைப்படுவதால் கேட்டையே அடைவார்கள். இதில் என்ன இருக்கிறது பார்ப்போம் என்ற சபலம் ஆசைக்கு அடிமையாகச் செய்கிறது என்பதை தெரிந்து கொள் ளல் வேண்டும்.

மிதிலையில் வாழ்ந்த பிங்களை என்ற தாசி தன்னை அலங்கரித்துக் கொண்டு தன்னை இச்சிக்க யாராவது ஒரு புருஷன் வருவான் என்று காத்திருந்தாள். ஏமாற்றமடைந்தவள் இறைவனையே தன் மனதில் இச்சித் தாள். அப்பொழுதே துறவு பூண்டு பக்தையானாள். இதன்மூலம் தீய எண் ணங்களை தெய்வீக நினைவுகளால் இல்லாதொழிக்க முடியும் என்பதை உணர்தல் வேண்டும்.

திருவுருவச் சிலையில் கண்ணைச் செதுக்கும் சிற்பி தன்னைச் சுற்றி நடைபெறும் நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்தாது தன் தொழிலில் எப்படிக் கவனம் செலுத்துகின்றானோ அதேபோல் பரமாத்மாவிடம் செலு த்திய மனதையுடைய மனிதர்கள் ஆரவாரங்களில் மனதைச் செலுத்தா மல் இருத்தல் வேண்டும்.

சிலந்திப்பூச்சி தன் உடலிலிருந்து உண்டாகின்ற நூலை வலையாகப் பின்னிக் கொண்டு அதில் சிலகாலம் வசித்துப் பிறகு அதைத் தனக் குள்ளே கிரகித்துக் கொள்வது போல் பகவானும் பிரபஞ்சத்தை உண்டு பண்ணி சிறிது காலம் நடக்க விட்டு பிறகு தம்மிடத்திலேயே கிரகித்துக் கொள்கின்றார் என்பதை அறிதல் வேண்டும்.

குளவி புழுவைக் கொண்டு போய் வைத்து அதையே தன் சந்ததியாக மாற்றி விடுகின்றது. குளவியினால் பிடிக்கப்பட்ட புழு பயத்தினால் அதையே தியானித்து தன்னுடைய தேகத்தை விட்டு விடாமல் வண்டி னுடைய உருவத்தை அடைவது போல் பகவானுடைய திவ்விய மங்கள சொரூபத்தை தியானிக்கும் மனிதர்கள் அவருடைய சொரூ பத்தை அடைகின்றார்கள் என்பதை உணர்க.

இப்படி உலகில் உள்ள அனைத்து இயற்கைச் செல்வங்களும் மனிதர் களுக்கு நல்ல வாழ்க்கை நெறிகளையே போதிக்கின்றன. இவற்றைத் தன் ஆசானாக ஏற்றுக் கொண்டதினால் தான் அவதூதர் என்ற மனிதர் பிரம்ம ஞானியானார் என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே கொடியவர்களாகிய என் எதிரிகளை நான் அழிக்கும் பொருட்டு நான் போர் தொடுப்பேனாயின் இந்த அரும்பெரும் போதகர்களான இயற்கை யும் கொலை செய்ய நேரிடும் எனவே அதை நான் செய்ய மாட்டேன் என்று பரம்பொருளிடம் கூறும் பிரபாகரன் அவர்கள் பரம் பொருளை என் கண்ணா என்கிறார்.

ஏனெனில் அசுரர்கள் என்ற பெயரால் தோன்றியுள்ள அட்டூழியங்களின் செய லால் பாவங்கள் மேலும் மேலும் விருத்தியடைந்து என்னால் தாங்க முடி யாத சுமையாகி விட்டன. இந்தப் பாவச்சுமையிலிருந்து ஒரு விமோசனம் ஏற்படாவிட்டால் என்னால் இனிமேல் தாங்க முடியாது. நீங்கள் தான் இதற்கு ஏதாவது ஒருவழி செய்ய வேண்டும் என்ற பூமாதேவியின் பிரார்த்தனையும் வேண்டுகோளையும் நிறைவேற்றவே தேவகியின் கற்பத்திலிருந்து கருநீல மணி போல் கிருஷ்ண பகவான் அவதரித்தார். எனவே தான் பக்தியினால் என்னைச் சரிவர அறிந்தவர்களின் அஞ்ஞா னத்தை என் ஞானதீபத்தால் அழித்து அவர்களைக் கஷ்டங்களிலிருந்து மீட்பேன் என்கிறார் கண்ணன்.

பாண்டவர்களும் கௌரவர்களும் மகாஞானிகளும் நிறைந்த சபையில் பாஞ்சாலியின் துகில் உரியப்பட்ட போது என் கண்ணா என்று பாஞ்சாலி அழைத்த குரல் கேட்டு கரங்கொடுத்து மானம் காப்பாற்றியவரல்லவா கண்ணன் எனவே தான் தன் மண்ணின் மானத்தையும் கண்ணன் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையுடனேயே என் கண்ணா என்கிறார்

கண்ணா! என்றவுடனேயே நீல வர்ணம் நம் மனங்களை ஆகர்சிக் கின்றது. வானத்தைப் பார்த்ததும் அந்தக் கண்ணனின் நினைவே நிழலாடுகின்றது. வர்ணங்கள் ஏழு என்று பிரித்துணர்த்த மெய்ஞானி களும் விஞ்ஞானிகளும் வானத்தை ஏன் நீலவர்ணம் மட்டும் ஆட்சி புரிகிறது என்பதற்கு சரியான சான்றுகள் தரவில்லை. அதைத் தன் விஞ் ஞான ஆராய்ச்சியால் நிரூபித்து உலக விஞ்ஞான மேதையாக அங்கீ காரம் பெற்று தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த பேரறிஞர் சேர்.சி. வி.ராமன் 1888ம் ஆண்டு தமிழகத்திலுள்ள தஞ்சை மாவட்டத்தில் மாங்குடிக் கிராமத்தில் பிறந்தார். இந்த மேதைக்கும் தலைவர் பிரபா கரனுக்கும் இடையில் தாயக சாதனைகள் பற்றிய சிந்தனைகளில் ஒற்றுமை இருப்பதை நாம் காணலாம்.

எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும் நம்பிக்கையும் உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு. நாமே போராடி எம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். நமது உரிமைகளை வென் றெடுக்கப் பிறநாடுகளை நாம் நம்பியிருக்கக் கூடாது என்ற ஒரு இறுக்கமான மனோதிடத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய நாடொன்றில் அதுவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலை நகரில் சி.ஐ.ஏ. உளவு நிறுவனத்தின் சிலந்தி வலைக்குள் இருந்து எமது போர்முனைத்திட்டங்கள் பற்றி பேசுவதற்கு நாம் விரும்பவில்லை என்று முரசறைந்ததின் மூலம் தமிழீழப் பிரச்சனைகள் தமிழீழ மண் ணிலேயே ஆராயப்பட்டுத் தீர்க்கப்பட வேண்டும் என்பது தலைவர் பிரபா கரன் அவர்களின் ஆதங்கம். இறுக்கமான வெளிப்பாடு.

ஒருநாட்டின் விஞ்ஞான வளர்ச்சிகள் பிறநாடுகளின் தயவை நம்பி யிருக்கக் கூடாது என்றும். இந்திய இளைஞர்களும் யுவதிகளும் நம்பிக்கையினையும் தைரியத்தையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இழக்கா தீர்கள். உங்கள் கடமைகளைத் துணிச்சல் மிகுந்த விசுவாசத்தோடு நீங்கள் செய்கின்ற போது தான் வெற்றி உங்களைத் தேடிவரும். வியர்வை சிந்தாமல் வெற்றி பெறுவது சாத்தியமில்லை. நமது நாட்டில் மனித ஆற்றலுக்குப் பஞ்சமில்லை. உலகின் எந்த நாட்டினரின் அறிவுத் திறமைக்கும் நாம் சற்றும் குறைந்தவர்களுமல்ல என்றார் சேர்.சி.வி. இராமன். நோபல் பரிசு பெறத் தகுதியுள்ள ஒரு விஞ்ஞானக் கண்டு பிடிப்பை 200 ரூபா பெறுமதியுள்ள கருவி மூலம் தான் அமைத்த பெங்க ளூர் விஞ்ஞான கூடத்தில் கண்டு பிடித்து வெற்றி கண்டதன் மூலம் உலக விஞ்ஞான பீடத்தில் இடம் பிடித்த முதல் தமிழர் சி.வி.இராமன் ஆவார். ஆனால் இன்று பிரபாகரன் அவர்கள் அந்நிய நாடுகளிடம் பயிற்சி பெறாமலே போர்க்கலை மேதை என்ற பெயரைப் பெற்றுக் கொண்டிருக் கிறார். தமிழ்ஈழம் மலர்ந்து அமைதி திரும்பியதும் அடுத்து நோபல் பரிசினைப் பெறும் தமிழ்மேதை அவராகவும் இருக்கலாம் என்று கருதின் தவறில்லை என்பேன்.

வானம் ஏன் நீல நிறமாக இருக்கிறது என்ற கேள்விக்கு விடை காணத் தன் ஆராய்ச்சிகளைத் தொடங்கிய விஞ்ஞான மேதை சி.வி.இராமன் அவர் கள் சூரியனில் உள்ள ஏழு நிறங்களில் நீலம் தான் பிரகாசம் குறைந்தது. அதாவது சூரிய ஒளிச் சக்தியில் நீலநிறம் நாற்பதில் ஒரு பங்காகவே இருப்பதைக் கண்டறிந்தார். எல்லா நிறங்களையும் ஆட்சி புரியும் சக்தி மஞ்சள் நிறத்திற்கே உண்டு என்பதையும் அடுத்தது நீல நிறத்திற்கு உண்டு என்பதையும் கண்டு பிடித்த இராமன் பூமியிலுள்ள பச்சை இலைகளிலுள்ள க்ளோரோமில் சூரிய ஒளியிலுள்ள மஞ்சள் நிறத்தைக் கிரகித்துக் கொள்வதனால் நீலம் வானத்தை ஆட்சி புரிவ தையும் வானத்தில் உள்ள வெண் மேகங்கள் ஆங்காங்கு மிதக்கும் போது காற்று மண்டலத்திலுள்ள தூசுகளைச் சுத்தப்படுத்துவதால் வானம் நீலநிறமாகத் தெரிவதையும் இத்தூசுகளாலேயே மேகங்கள் உருவாகின்றன என்பதையும் கண்டு பிடித்து இராமன் விளைவு என்ற பெயரால் உலக மாணவர்கள் படிக்கும் வகை செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் சகல நிறங்களையும் ஆட்சிபுரியும் மகிமை மஞ்சளுக் குண்டு என்பதை இந்துக்கள் ஏற்றுக் கொண்டு தமது சடங்கு சம்பிர தாயங்களில் அதை முதன்மைப்படுத்திய மெய்ஞான விளக்கத்திற்கு விஞ்ஞான விளக்கம் தந்தார் சேர்.சி.வி.இராமன் அவர்கள்.

எப்படி வானம் தூய்மையாக இருக்கும்போது நீலவர்ணம் தெரிகிறதோ அதேபோல் நீலவர்ணனான கண்ணனும் எந்த மாயையாலும் மறைக்கப் படாத நிர்மலனராக காட்சி தருவதை உணர்ந்த பிரபாகரன் அவர்கள் போரினால் கொலைகள் ஏற்பட்டு எல்லாமே அழிந்துவிடும். வெறும் மண்ணை ஆளுவதற்காக இதை செய்யவா வேண்டும். இந்த மண் ணில் இந்த மக்களோடு என்னால் வாழமுடியா விட்டால் வேறு எந்த மண்ணும் எனக்கு வேண்டாம். எல்லாவற்றையும் அழிக்கும் வகையில் நான் இவர்களைக் கொலை செய்ய மாட்டேன். என்னைக் கொலை செய்தாலும் நான் கவலைப்பட மாட்டேன் என்று கூறுவதன் மூலம் பிரபா கரன் அவர்கள் சமாதானத்தின் பக்கம் நிற்கிறார் என்பது புலனாகிறது

## பதம் 16

ஜனார்த்தனா! சிங்களவரைக் கொன்று நாம் காணப்போகும் இன்பம் என்ன? பாதகரையே கொல்வதாயினும் பாவம் தானே பரிசாகக் கிடை க்கும்?

## பொருளுரை

ஜனார்த்தனன் என்றால் மனிதர்களால் துதிக்கப்படுபவர் என்று பொருள். எனவே மனிதர்களைக் கொலை செய்வதற்கு கிருஷ்ணர் விரும்ப மாட் டார் என்பதற்காகவே பிரபாகரன் அவர்கள் ஜனார்த்தனா என்று அழைக் கின்றார்.

வேதவிதிகளின்படி அக்கிரமக்காரர் ஆறுவகையினர் எனக் கருதப்படு கின்றனர். 1 விஷம் கொடுத்தவர். 2 வீட்டிற்கு நெருப்பு வைத்தவர் 3 பயங்கர ஆயதங்களால் தாக்குபவர் 4 செல்வத்தைக் கொள்ளையடிப்பவர் 5 பிறர் நிலங்களை அபகரிப்பவர் 6 மனைவியைக் கடத்திச் சென்றவர் இவர்களை உடனே கொல்லலாம் என்று வேதம் விதித்துள்ளதாக பக வத்கீதைக்கு உரை எழுதிய தெய்வத்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபு பாதா அவர்கள் குறிப்பிடுகின்றார்.

தமிழ்ஈழத்தின் காட்டுப்பகுதிகள் தான் தமிழ்ஈழப் போராளிகளின் உறை விடங்கள் என்பதால் காடுகளில் நச்சுவாயுக்களை விமானத்திலிருந்து தெளித்தும். அங்குள்ள குளங்களில் நஞ்சைக் கலந்து மனிதர்களை மட்டுமல்லாது பறவைகளையும் மிருகங்களையும் கொலை செய்த ஜீவ காருணியசீலர் புத்தபெருமானின் மார்க்க வழி நிற்கும் சிங்களப்படையின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் கொடுமையினை மீள் நினைவுபடுத்திப் பார்த்தால் விஷம் கொடுத்த குற்றவாளிகள் சிங்களப்படைகள் என்பது புலனாகும்.

தமிழ்மக்களின் தாயக பூமியான வடக்கு கிழக்கு பகுதியில் அவர்கள் எரித்த வீடுகளும் கடைகளும் எண்ணிலடங்காதவை. அதை விடக் கோயில்களும் முக்கியமாக ஆசியாவிலேயே முதல்தர நூல்நிலையமாக விளங்கிய யாழ்.பொது நூல் நிலையம், பத்திரிகை காரியாலயங்கள், மக்கள் சந்தை இவைகள் நெருப்பு வசமாகியமைக்குச் சிங்களப்படைகளே பொறுப்பு என்பதை சர்வதேசமே ஏற்றுக் கொண்டுள்ளது.

1984ம் ஆண்டு நவம்பர் மாதம் வவுனியாவில் வர்த்தகர்களாக இருந்த என் இரத்த உறவினர்களான திரு கந்தையா பத்மநாதன், திரு செல்லப்பா பத்மநாதன் ஆகியோரைக் கைது செய்த சிங்களப்படையினர் கொடிய ஆயுதங்களால் தாக்கி அவர்களைக் கொலை செய்து வவுனியாக் காட்டிற்குள் வீசியதையும் அவர்களின் அந்த உருக்குலைந்த உடல் களைக் கூடக் கடைசியாகப் பார்க்க முடியாத துர்ப்பாக்கியசாலிகளாக என் கிராமம் கண்ணீர் விட்டதையும் இன்றும் நினைக்கும் போதும் என் இதயம் வேதனை நெருப்பில் எரிவதையே உணர்கிறேன். அத்துடன் போராளிகளுக்கு அச்சக உதவி செய்தார் என்ற காரணத்திற்காக இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்ட என் இரத்த உறவினரும் எஸ்.பி. என்று என் கிராமத்தவர்கள் அன்பாக அழைக்கின்ற திரு சி.சுந்தரலிங்கம் அவர்கள் சிங்களவரின் வெஞ்சிறையில் சில வருடங்கள் வாடி வதங்கியவர். அவர் மூலம் நான் அறிந்தேன், கைது செய்யப்படும் தமிழ்இளைஞர் களை தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு விடியும் வரை அடிப்பதும் மிளகாய்த்தூள் சாக்கிற்குள் தலையை மூடிக்கட்டிச் சாகடிப்பதும் உடம்பில் மின்சாரத்தைப் பாய்ச்சுவது சிகரெட்டால் உடல் முழுவதும் எரிப்பதும் இவைகள் அங்கே மிகச்சாதாரண நிகழ்வு என்றார். ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில் யூத இனம் அடைந்த சித்திர வதைகளை விட அதிக கொடுமையானது இது என்பதை உணர்ந்து பார்த்தால் பயங்கர ஆயுதங்களால் தாக்கியழிப்பவர்கள் சிங்களப்படைகள் என்பது தெளிவாகும்.

தொடர்ந்தும் தமிழர்கள் காரணமின்றிக் கைது செய்யப்படுவதும் காணா மல் போவதும் இலங்கையில் இன்று சர்வ சாதாரண நிகழ்வு ஆகி விட்டது. இதன் பின்னணிக்கு இப்படி ஒரு காரணமிருக்குமோ என்ற ஐயத்தை 1985ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ம்திகதிய சிலோன் ஆப்சேவர் ஆங்கிலப்பத்திரிகை எனக்கு ஏற்படுத்துகின்றது. அந்தப் பத்திரிகைச் செய்தி பின்வருமாறு அமைந்துள்ளது

மனிதத்தோல், எலும்பு, குருதிக் குழாய்கள், செவிப்பறை, மென்தோல்கள், இதயவால்வுகள், நரம்புகள், சிறுநீரகங்கள், போன்ற உடல் உறுப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் சேகரித்துப் பதனிட்டு உலக நாடுகளுக்கு விற்பனை செய்ய ஓர் அமைப்பினைச் சிங்களவர்கள் தொடங்கியிருக்கிறார்கள். இந்த அமைப்புக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு 31 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள் ளது என்றும் இதற்காக கிட்டத் தட்ட இரண்டு கோடி ரூபாய்களைச் சிங்கள அரசு ஒதுக்கியிருக்கிறது என்றும் கூறுகிறது. எனவே பயங்கர ஆயுதங்களால் தாக்கியழிக்கும் கொடுமையாளர்கள் சிங்களவர்கள் என் பது மறுப்பதற்கில்லை. அத்துடன்

கிழக்கு மாகாணங்களான மட்டக்களப்பு திருகோணமலையை அண்டிய பாரம்பரிய தமிழர்கள் பூமி சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையும் தமிழ்பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாகி மரணித்த கதைகளும் தமிழர்களின் செல்வங்கள் கொள்ளையடித்தும் அழித்தும் கோரத்தாண்டவம் ஆடும் சிங்கள வெறியர்களின் ஈனச் செயல்களை அகிலமே அறியும்.

இவ்வளவு கொடுமைகளையும் பாவங்களையும் செய்த சிங்களவர்களைக் கொலை செய்வதற்கு பிரபாகரன் அவர்கள் தயங்குகின்றார். காரணம் அவர் ஒரு சாதாரண மனிதரல்ல. அவர் ஒவ்வொருவர் இதயங்களிலும் இறைவனைக் காண்பவராகவும் தெய்வீக நினைவுகள் நிரம்பியவராகவும் இருக்கின்றார். மனிதப் பரம்பரையின் மாபெரும் செல்வமாகிய கரு ணையை இழந்து விட்டால் நாம் கண்பார்வை இழந்த குருடராகி விடுவோம். உலகம் இருளில் மறைந்து விடும் என்ற புத்தபெருமானின் போதனைக்கு உதாரணமாகவே பிரபாகரன் அவர்கள் அங்கு துலங்குகின்றார். இந்து சமயம் சொல்லும் பாவபுண்ணியங்களின் குத்துவிளக்காகவே அவர் சுடர் விட்டுக் கொண்டிருக்கின்றார். எப்படியெனில்

தேவர்கள் என்று சொன்னாலே நல்லவர்கள் சிவபக்தி கொண்டவர்கள் என்பதே அர்த்தம். அப்படிப் பட்ட இந்திரன் முதலான தேவர்கள் சூரபத்மனால் கைது செய்யப்பட்டு 108 யுகங்கள் சிறையில் கிடந்து துன்பத்தை அனுபவிக்க வேண்டி நேர்ந்தது. காரணம் சிவநிந்தனை செய்த தட்சனின் யாகத்தில் கலந்து கொண்ட பாவத்தின் விளைவே. அதே போல் சைவத்தமிழர்களை மட்டுமல்லாது புத்தபகவானின் கருணையையும் நிந்தனை செய்தமையினாலேயே இலங்கை இன்று இருளினுள் கிடந்து தத்தளிக்கிறது என்பதும் உண்மையே. அப்படியொரு பாவத்தைச் செய்யப் பிரபாகரன் அவர்கள் விரும்பவில்லை. பாவ புண்ணியங்களைப் பற்றிக் கவலைப்படாமல் பழிவாங்கலே பிரபாகரன் அவர்களின் நோக்கமாக இருந்திருப்பின்

தொண்டமானாறு சிங்கள இராணுவ முகாம் புலிகளால் பல மாதங்கள் சுற்றி வளைத்து முற்றுகையிடப்பட்டிருந்த போது வெளியிலிருந்து இராணுவ முகாமிற்குப் போகும் தண்ணீர் வசதிகளும் தடை செய்யப்பட்டிருந்தது. அதைத்தடுக்க வேண்டாம் என்ற சிங்கள இராணுவ தளபதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோளைப் பிரபாகரன் அவர்கள் ஏற்றுக் கொண்டார். காரணம் இறைவனால் உருவாக்கப்பட்ட இயற்கைகள் எல்லாம் எல்லா மனிதர் களுக்கும் சொந்தமானது என்பதை போர்க்களத்திலும் பிரபாகரன் அவர் கள் மறக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

யாழ்ப்பாணக்கோட்டை இராணுவமுகாம் புலிகளின் முற்றுகையில் இருந்த போது இரண்டு லொறி விறகுகள் அனுப்புங்கள் என்று சிங்கள இராணுவத் தளபதி கேட்டுக் கொண்ட போது இரண்டு லொறி விறகும் ஒரு கூடை மாம்பழமும் அவர்களுக்கு அனுப்பி வைத்ததன் மூலம் எதிரிகளின் உடலிலும் இருப்பது உயிர் தான். அது அநியாயமாக அழிக்கப்படக்கூடாது என்ற ஆதங்கம் ஆயுதக்களத்திலும் பிரபாகரன் அவர்களிடம் இருக்கிறது என்பதையே வெளிக்காட்டுகிறது.

இந்த நிகழ்வுகள் சிங்கள இராணுவத்தினர் புலிகளை ஒரு தாய்நாட்டின் தியாக சீலர்களாக சிறந்த இராணுவமாகவே கருத வழிவகுத்தது ஆனால் எங்கள் மண்ணோடு எந்தவிதமான தொடர்பும் இல்லாத அமெரிக்க செனட்சபை புலிகள் பயங்கரவாதிகள் என்று தீர்மானிக்கிறது.

இலங்கையின் தேவை அமெரிக்கர்களுக்கு வேண்டும் என்பதற்காக இப் படி ஒரு மனிதாபிமான மற்றப் பாவச் செயலைச் செய்யக்கூடாது. இதை அவர்கள் மீளாய்வு செய்ய வேண்டும் என்று அகில உலகமும் அன்பு வற்புறு த்தல் செய்ய வேண்டும். செய்யும் பாவம் எப்பிறப்பும் தொடரும் என்ற நம்பிக்கையுடையவர்கள் தமிழர்கள்.

இதையே முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பார்கள். இந்த நல்ல தொரு கருத்தின் அடிப்படையில் வளர்ந்தவர்கள் தமிழர்கள் பாவத்தின் விளைவு பற்றி நன்கு அறிந்தவர்கள். ஒருமுறை சாலவ மன்னனின் அரண்மனையில் பொன்னையும் மணியையும் பொருளையும் திருடிய கள்வர் களை அரண்மனைக் காவலர்கள் துரத்திச் சென்றார்கள். கள்வர் களோ அந்த நகரத்தை அண்டியிருந்த கானகத்தினுள் சென்று அங்கே தவஞ் செய்து கொண்டிருந்த மாண்டவையர் என்ற முனிவரின் பர்ண சாலைக்குள் ஒளித்துக் கொண்டார்கள்.

காவலர்கள் பிரம்மஞானியான மாண்டவையரையும் கள்வர்களையும் கையில் விலங்கிட்டு சாலவ மன்னன் முன் நிறுத்தினர். மாண்ட வைய ரைத் திருடர்கள் தலைவனாகக் கருதினர். கள்வர்களுக்குச் சிரசுச் சேதமும் மாண்டவையரைச் சிலுவையிலும் அறையுமாறு மன்னன் கட்டளையிட்டான். சிலுவையில் மாண்டவையரை அறைந்ததன் கார ணமே அவரை மீட்க வரும் மிகுதித் திருடர்களையும் பிடிப்பதற் காகவே. ஆனால் மறுநாள் கங்கை நீராட விடியற் காலை வான்வெளியே வந்த வசிட்டர் காசிபர், அகத்தியர், புலத்தியர், கபிலர் முதலிய முனிவர் கள் மாண்டவையரின் நிலைகண்டு திடுக்கிட்டு வணங்கி மூவுலகையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பலாக்கக் கூடிய தவவலிமையுடைய தங்களைச் சிலுவையிலிட்ட வர்களை ஏன் எரிக்கவில்லை என்று கேட்டார்கள். அதற்குப் பின்வரு மாறு மாண்டவையர் பதிலளிக்கிறார்.

எனக்கு யாரும் பகையில்லை. நான் யாரையும் நோகவில்லை. என்வினை என்னைச் சிலுவையில் ஏற்றியிருக்கிறது என்றார். உடம்பு செய்த வினையை அது நுகர்ந்தே தீர வேண்டும். நீங்கள் போய் வாருங்கள் என்றார். இதை தன் ஒற்றர்கள் மூலம் அறிந்த மன்னன் பிரம்மஞானியரான மாண்டவையரை சிலுவையிலிருந்து இறக்கி வணங்கி அவரில் அறைந் திருந்த ஆணிகளை ஒவ்வொன்றாகக் கழட்டினான். நெஞ்சில் அறைந்தி ருந்த நீளமான ஆணியைக் கழட்ட முடியாமல் அரங் கொண்டு அரிந்த போது அதை அப்படியே விட்டு விடுமாறு மன்னனிடம் கேட்டுக் கொண் டார். காரணம் சிவபூசைக்குத் தான் பூப்பறிக்கும் கூடையை அதில் மாட்டிக் கொள்ள வசதியாக இருக்கும் என்பதற்காக. அதனால் ஆணி மாண்டவையர் என்றே அழைக்கப்பட்டார்.

மாண்டவ்வையார் தன் பிரம்ம ஞானத்தால் கடவுளிடம் கேட்டார் என் உடம்பில் இவ்வாறு ஓர் இரும்பாணி இருக்க நான் என்ன வினை செய்தேன் என்று. அவர் இளமையில் ஒரு தும்பியைப் பிடித்து அதன் வாலைக் கிள்ளி யெறிந்து விட்டு ஒருமுள்ளைச் செருகிப் பறக்க விட்டார். அந்தப் பாவத்தின் விளைவால் நேர்ந்தது இது என்று பதில் கிடைத்தது. ஒரு தும்பிக்கு முள்ளைக் குத்திய பாவத்திற்கு இவ்வளவு பெரிய தண்டனையானால் மனிதர்களைக் கொலை செய்தால் எவ்வளவு பெரிய தண்டனை கிடைக்கும் என்று பிரபாகரன் அவர்கள் ஏங்குவது நியாயமே.

இராமருக்குப் பல கோயில் களைக் கட்டி அதற்குத் தங்கத்தால் ஸ்தூபி யும் அமைத்து பொன்னும் மணியும் கொண்டு இறைவனுக்கே பல அணிகலன் களைச் செய்து மகிழ்ந்த இராம தாசர் 12 ஆண்டுகள் சிறை யில் கிடந்து துன்பத்தை அனுபவிக்க நேர்ந்ததின் காரணம் ஒரு கிளியின் சிறகை அரிந்து 12நாட்கள் கூட்டில் அடைத்ததின் விளைவு என்பதை யும் நாம் கவனத்தில் கொள்வதால் பாவத்தின் தண்டனையைப் புரிந்து கொள்ள முடியும்.

அது மட்டுமின்றி இந்து சமயத் தவர்கள் மனித உடலையே கோயி லாகக் கருதுபவர்கள். அதனுள் இருக்கும் உயிரே கடவுள் என்று நினைப்ப வர்கள். இந்த நிலைப்பாடு தான் உண்மையான மதமாச்சரிய மற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் என்ற நம்பிக்கையை இன்னும் உலகம் உணர்ந்து கொள்ளாததின் விளைவே உலகத் தின் பிரச்சனைகள்.

சைவசமயத்தவர்களின் தலைமைக்கோயிலான சிதம்பரத்தின் அமைப்பைச் சுற்றிப் பார்த்தால் சைவர்கள் உடலை எப்படி மதிக்கிறார்கள் என்பது தெரிந்து விடும். பஞ்சபூத சிவதலங்களில் சிதம்பரம் ஆகாயம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பைப் பெறுகின்றது. இந்தக் கோயில் சுமார் 40 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இக்கோயிலின் சிறப்புக்கு அதன் நான்கு பக்கக் கோபுரங்களும் காரணமாகிறது. கிழக்குக் கோபுரம் விக்கிரம சோழ மன்னனால் கட்டப்பட்டது. இதில் 108 பரத நாட்டியக் கலையின் முத் திரைகளைச் சிலைகளாகச் செதுக்கி கோபுரத்தின் மீது பதித்துள்ளார் கள். மேற்குக் கோபுரம் சடையவர்ம சுந்தர பாண்டிய மன்னனாலும் தெற்குக் கோபுரம் பல்லவ மன்னனாலும் வடக்குக் கோபுரம் விஜய நகர மன்னன் கிருஷ்ண தேவராயராலும் கட்டப்பட்டது என்பதும் பெரு மைக்குரிய விடயம்.

சிதம்பரம் கோயிலின் கனகசபையின் மண்டபம் பதினெட்டுத் தூண் களைக் கொண்டது. இந்து சமயத்திற்க ஆதாரமாக இருக்கும் வியாசர் எழுதிய 18 புராணங்களை இது நினைவூட்டி நிற்கின்றது. பொன்னம் பலம் என்று போற்றப்படும் நடராஜப்பெருமான் சன்னதியின் மேல்கூரை தங்கத்தினாலேயே ஆனது. அந்த ஆடல் அரசனின் மேல்கூரை 64 சட்டங்கள் (மரங்கள்) கொண்டது. இது ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் பக்தர்கள் உணர்வுக்கு எடுத்தியம்பி நிற்கிறது.

நடராஜப் பெருமானின் சன்னதி மேல் கூரைத் தங்க ஓடுகள் அனைத் திலும் சிவாயநம என்று பொறிக்கப்பட்டுள்ளதாக தில்லை உலா என்ற நூல் கூறுகின்றது. அந்த ஓடுகளின் தொகை 21600. நாள் ஒன்றுக்கு மனிதன் சுவாசிக்கும் மூச்சின் எண்ணிக்கை 21600 என்ற மருத்துவக் குறிப்புக்களின் அடிப்படையில் மனித சுவாசத்தையே அது நினைவூட்டு கின்றது.

21600 ஓடுகளை 64 மரச்சட்ட ங்களில் பொருத்தப் பாவிக்கப்பட்ட ஆணி களின் மொத்த எண்ணிக்கை 72000. மனித உடம்பில் உள்ள மொத்த நாடி நரம்புகளின் எண்ணிக்கை 72000 என்பதையே இது தெரியப் படுத்துகின்றது. இந்தக் கூரை மீது பொருத்தப்பட்டிருக்கும் ஒன்பது கலசங்களும் மனித உடலில் இருக்கும் ஒன்பது வாசல்களையே குறிக் கின்றது. இந்த ஒன்பது ஓட்டைகளைக் கொண்ட உடல் என்னும் கூட்டினுள் வாழும் உயிர் இதுவே சிதம்பர ரகசியம் எனலாம்.

இப்படி மனித உடலையே ஆலயமாக வைத்திருப்பதன் நோக்கம் மனித உடலின் வாழும் உயிரும் கடவுள் தான் என்ற தத்துவத்தை வருங் காலச் சந்ததியும் அறிய வேண்டும் என்பதற்காகவே. எனவே எதிரியின் உடல் ஆனாலும் அங்கும் உயிர் தான் இருக்கிறது. அவர்களைக் கொலை செய்வதன் மூலம் ஒரு கோயிலை உடைத்த பாவமும் கடவு ளையே நிந்தனை செய்த பாவமும் தன்னையும் தன் சந்ததியான தமிழ் மக்களையும் பீடித்துக் கொள்ளும் என்பதால் தன் எதிரிகளைக் கொலை செய்ய விரும்பாத பிரபாகரன் அவர்கள் மேலும் கேட்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதம் 17

*திருமகளின் கணவரே! கொற்றைவர்களாயினும் சிங்களவர் நம் சுற்றத்தார். அயலவர். அவர்களைக் கொல்வது தகாது. பின்பு வெல்வதில் நமக்குக் கிடைக்கும் லாபம் என்ன?*

## பொருளுரை

*கொற்றைவர்கள் என்றால் கேவலமானவர்கள் என்று பொருள்படுகின்றது. நம் சுற்றத்தார் என்றால் நம் இனம். அதாவது மனிதயினம் என்பது கருத்து. எனவே தான் கேவலமானவர்களாகச் சிங்களவர்கள் இருப்பினும் அவர்களும் மனிதர்கள். உயிர்வாழிகள். எனவே அவர்களைக் கொலை செய்வதால் நாம் எந்தவிதமான இலாபத்தையும் அடைய முடியாது என்கிறார் பிரபாகரன்.*

*அரசியற் காரணங்களுக்காக மனிதர்களைக் கொலை செய்வதிலும் பார்க்க நற்குணத்தையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டு அவர்களை மன்னித்தல் சிறந்தது என்று எண்ணுகிறார் பிரபாகரன் அவர்கள். காரணம் அவர் கருணையுள்ளம் கொண்டவர். அவ்வகையினர் மற்றவர்களை மன்னிப்பார்கள் என்பதே அறிவுலக மேதைகளின் அடிப்படைக் கோட்பாடுகளாகும். அப்படியாயின் கொலைக் கருவியான ஆயுதத்தை ஏன் பிரபாகரன் கையில் எடுத்தார்? என்பது ஒரு கேள்வியாகுமாயின் அது நியாயமே!*

*1984ம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியா டுடே என்ற ஆங்கிலப் பத்திரிகையாளரின் கேள்விக்குப் பதிலளித்த தலைவர் பிரபாகரன் அவர்கள். பின்வருமாறு கூறுகின்றார் ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா உண்மையான பௌத்தராக இருந்திருப்பாராயின் நான் ஆயுதம் ஏந்தியிருக்க நேர்ந்திராது என்கிறார். எனவே உண்மையான புத்த தர்மக் கோட்பாடுகளை மீறியவர் ஜெயவர்த்தனா என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகின்றது. அப்படியாயின் உண்மையான பௌத்தன் எப்படியிருப்பான்?*

*அச்சமற்றவனாக இருப்பவனே உண்மை பௌத்தன் இதைப் புத்தரின் போதனைகளே நிரூபணம் செய்கின்றது. விழிப்புடன் இருப்பவனுக்கும் ஆசையற்ற மனம் உடையவனுக்கும் நன்மை தீமை இரண்டையும் ஒதுக்கியவனுக்கும் அச்சம் எப்போதும் ஏற்படுவதில்லை. ஆனால் இன்று முழுமையான அச்ச முடையவர்களாக ஸ்ரீலங்கா பௌத்தர்கள் வாழ்வதற்குக் காரணம் புத்த பகவானின் அந்தப் போதனையை விட்டு விலகி வெகு தூரம் போனமையே. எனவே தான் ஆசையிலிருந்து துன்பம் தோன்றுகின்றது. அவற்றிலிருந்து விடுபட்டவனுக்கு துன்பமும் இல்லை அச்சமும் இல்லை என்கிறார் புத்தபகவான். ஆனால் ஸ்ரீலங்கா பௌத்தர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தமிழீழ மக்களின் பாரம்பரிய பூமி மேல் வைத்த ஆசையால் இன்று பெரும் துன்பத்தையும் அச்சத்தையும் அனுபவித்துக் கொண்டிரு க்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் புத்த சமயத்தின் அடிப்படை வரலாற்றை இவர்கள் மறந்தமையே.

உலக வரலாற்றில் தமிழுக்கென்று ஒரு தனி வரலாற்றுச் சிறப்பு உண்டு. உலகமொழிகள் ஒவ்வொன்றும் தங்களுக்கென்று தனிச்சமய நெறிகளையே இணைத்து வைத்திருந்தன. எனவே தான் மொழிப் போராட்டங்களுடன் சமயமும் இணைந்து கிடப்பதைக் காண முடி கிறது. ஆனால் தமிழ்மொழி எல்லாச் சமயங்களையும் தன்னுடன் சுதந்திர மாகச் சங்கமிக்க இடங் கொடுத்தது. இந்த நிலைப்பாடு தமிழ்மொழியை அழித்து விடும் என்று எண்ணியவர்களும் உண்டு. ஆனால் ஒவ் வொரு சமயத்தவர்களும் தமிழ்மொழியைப் படிக்க வேண்டிய நிலை இதன் மூலம் ஏற்பட்டது. பதினெட்டாவது வயதில் தமிழ்படிக்கத் தொட ங்கிய வெளிநாட்டவரான ஜி.யு.போப் தன் கல்லறையில் நான் ஒரு தமிழ் மாணவன் என்று எழுதும்படி செய்தார். அதற்குக் காரணம் அவரு டைய சமயத்திற்காக அவர் தமிழ் படித்ததின் விளைவே.

இந்தவகையில் தான் கி.மு. 3ம் நூற்றாண்டில் அசோகர் காலத்தில் (275 — 232) தமிழ்நாட்டில் புத்தசமயம் வேரூன்றியது. அங்கு வாழ்ந்த தமிழர்கள் பலர் பௌத்தர்களாக மாறினார்கள். பௌத்த நெறிகளில் பாண்டித்தியம் பெற்றார்கள். தமிழிலும் சிறந்த புலமை பெற்றார்கள். அவர்களில் சங்கமித்திரர், வச்சிரபோதி, அனுரூதா, நாளாந்தாப் பல்கலைக் கழகத்தில் பெருந்தொண்டாற்றியவரான தரும பாலதிண்ணாகர் போன் றோர்கள் முதன்மையானவர்களாவார்கள். இவர்களே இலங்கையில் புத்த சமயத்தைப் பரப்பினார்கள் என்று கடைச்சங்க நூலான நற்றிணை, மதுரைக்காஞ்சி போன்ற நூல்கள் கூறுகின்றன. எனவே பௌத்த தர்மம் என்பது தமிழர்களின் தர்மம். அந்தத் தர்மம் மீண்டும் இலங்கையில் நிலைகொள்ள வேண்டும். எல்லாச் சமயத்தவர்களும் சகல சுதந்திரங் களையும் அனுபவிக்க வேண்டும். அதற் கான ஒரே வழி தமிழ்ஈழம் தான் என்பதை பிரபாகரன் அவர்கள் தீர்மானித்து வெகுகாலமாகி விட்டது. பௌத்தர்கள் தங்கள் தர்மவழியில் செல்லப்புறப்பட்டால் தமிழ் ஈழம் ஆயுதங்கள் இல்லாமலேயே அமைந்து விடும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. ஆனால் ஸ்ரீலங்காப் பௌத்தர்களோ புத்ததர்மத்தை மட்டுமல்ல தங்கள் சுய உணர்வுகளையும் தொலைத்து விட்டு தீயவர் களின் ஆலோசனையில் மூழ்கி விடுவது வரலாற்று வழமையாகவே தொடர்கிறது. இதற்கான பல வரலாற்று நிகழ்வுகளை மீளாய்வு செய்ய லாம். மிக இரண்டு நிகழ்வுகளை இங்கு பொருதிப் பார்ப்பது பொரு த்தம் என நினைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசகிரு நாட்டு மந்திரியின் ஒரேமகள் பத்திரை தன் தந்தையால் கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட கள்வனைக் காதலித்து கலியாணம் செய்தாள். ஒரு நாள் ஊடல் காரணமாக கணவனைக் கள்வன் என்று கூறி விட்டாள். அதனால் கோபம் கொண்ட கணவன் அன்புடையவன் போல் நடித்து என் உயிர் காத்த மலைத் தெய்வத்தை வணங்குவோம் வாவென மலையுச்சிக்கு அழைத்துச் சென்று அன்று என்னைக் கள்வன் என்றாய் இன்று உன்னைக் கொல்லப் போகிறேன். கடவுளை வணங்கிக் கொள் என்றான். திடுக்கிட்ட பத்திரை தற்கொல்லியை முற்கொல்க என் பதை எண்ணினாள். காதலை அழித்து விட்டு நான் வழிபடும் கடவுள் வேறு உண்டோ? தாங்கள் அன்றோ என் தெய்வம் என்று கூறி கண வனை வலம் வருவது போல் பாவித்துப் பின் புறமிருந்து தலை குப்புறத் தள்ளி விட்டாள். அதன் பின் உலகவாழ்வில் வெறுப்புற்று புத்த சமயத்திலிருந்து சமணசமயம் சேர்ந்தாள் பத்திரை என்று குண்டலகேசி என்ற புத்தசமய நூல் கூறுகின்றது. இந்த நூல் சமண சமயத்தைக் கண்டிக்கவென நாதகுந்தனார் என்ற புத்த சமயத்தவரால் இயற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று கி.மு.540 — 490 வரை மகத நாட்டையாண்ட விம்பி சாரன் என்ற புத்தசமய அரசனை புத்தர் மீது பொறாமை கொண்ட விம்பி சாரனின் மைத்துனன் தேதத் தன் பலவகை சூழ்ச்சிகள் செய்து துன்புறுத்தினான். விம்பிசாரனின் மைந்தன் அஜாத சத்துருவையும் தன் வயப்படுத்தினான் தேதத்தன். அவனுடைய வஞ்சக வலையில் வீழ்ந்த அஜாதசத்துரு தந்தை விம்பிசாரனைச் சிறையிலிட்டான். அரசியைத் தவிர வேறு எவரும் அச்சிறைக்குச் செல்லக்கூடாது என்று ஆணையிட்டான்.

ஆனால் அரசியோ அரசனைப் பார்க்கப் போகும்போது தன் முந்தானைத் தலைப்பில் உணவினை மறைத்துச் சென்று கொண்டு போய்க் கொடுத் தாள். அது அறியப்பட்டதும் தலையணைக்குள் சிறு உணவை மறை த்துச் சென்றாள். அதுவும் தெரிந்த பின் தன் உடம்பில் சாதூர் மதுரம் என்றும் இனிப்பு வகைகளைப் பூசிக் கொண்டு சென்றாள். அரசன் அதை நக்கி உண்டு உயிர் வாழ்ந்தான். இதுவும் கண்டு பிடிக்கப்பட்ட பொழுது அரசியே அரசனைப் பார்க்கக் கூடாது என்று கட்டளையிட்டான். ஆயி னும் அரசன் எவ்வித இன்னலும் இன்றி உலாவித் திரிந்தான். இதை அறிந்த மகன் அஜாதசத்ரு தந்தை விம்பிசாரனின் பாதத் தைக் கீறி உப்பையும் புளித்த காடியையும் வைத்துக் கட்டச் செய்தான். இதனால் ஏற்பட்ட துன்பம் தாளாமல் அரசன் உயிர் நீத்தான்.

அதே நாளில் அஜாத சத்ருவுக்கு குழந்தை ஒன்று பிறந்தது. அந்தக் குழந்தையிடம் உண்டாகும் தந்தைப் பாசம் இவனுக்குத் தோன்றியது. இதே போன்று தானே தன் தந்தைக்கும் தன் மேல் அன்பு ஏற்பட்டிருக்கும் என்று நினைத்து தாயிடம் கேட்கிறான். அவள் விம்பிசாரன் எத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பை அஜாத சத்ருவிடம் வைத்திருந்தான் என்பதை விளக்கினாள். அனைத்தையும் கேட்ட அஜாதசத்ரு தன் தந்தைக்கு விளைவித்த கொடுமைகளையும் வதைத்துக் கொன்ற வகையினையும் எண்ணி வருந்தி நைந்துருகி புத்தர் அருள் பெற்று பௌத்தம் சேர்ந்தான்.

மேற்கண்ட இரு நிகழ்வுகளும் புத்த போதனையைப் புரிந்து கொள்ளாதவர்களின் புகலிடமாகவே பௌத்தம் இருந்திருக்கிறது என்பதையே காட்டுகின்றது. பேசுவது புத்ததர்மம் செய்வது புத்த அதர்மம் என்பது பௌத்தசாம்ராட்சியங்களில் அன்றுதொட்டு வழக்கிலிருக்கின்ற உண்மைகள் என்பதையும் அந்த இருகதைகளும் விளக்குகின்றன.

இந்த வகையில் தான் ஸ்ரீலங்கா பௌத்தர்களும் இன்றும் இருந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை இன்றைய வரலாறு தெளிவாக்குகின்றது. எதையும் தெய்வீக நெறியுடன் அணுகினால் தீயனகூட நல்லனவாக அமைந்து விடும் என்பதைச் சைவசமயம் நிரூபித்திருக்கின்றது. மனிதர்கள் தவறு செய்யக் கூடியவர்கள். அதற்குப் பழிவாங்கலும் கொலை செய்தலும் மார்க்கமல்ல. எத்தகைய கொடுமைகளையும் இன்பமயமாக்கும் சக்தி பக்திக்குண்டு. அப்படி ஒரு வரலாறு தான் இது.

தொண்டை நாட்டில் பாலாற்றுக்கு வடகரையில் அமைந்துள்ள சிறந்த கிராமமான திருவேற்காடு என்ற ஊரில் வாழ்ந்த மூர்க்கர் என்பவர் சிறந்த சிவபக்தர். திருவெண்ணீற்றினையே மெய்ப்பொருள் என்று கருத்தில் கொண்டு வாழ்ந்தவர். எம்பெருமான் திருவடிகளுக்கு திருவமுது படைத்து அகமகிழ்ந்த பின் சிவனடியார்களுக்கும் அமுது படைத்து வாழ்ந்து மகிழ்ந்தவர். சிறுவயதில் சூதாடுவதில் மிகக் கைதேர்ந்தவராகவும் விளங்கினார். இவரது சிவநெறித் தொண்டையறிந்த சிவனடியார்கள் கூட்டம் பெருகவே தனது சொத்துக்களையும் பொருட்களையும் விற்றுத் திருவமுது படைத்தார். எவ்வளவு வறுமை மலை போல் வளர்ந்த போதும் மூர்க்கர் சற்றும் மனம் தளராமல் தமது குறிக்கோளின்னின்றும் இம்மியளவும் பிறளாது சேவை செய்தார். இந்நிலையில் விற்றுப் பணமாக்குவதற்கு ஒருபொருள் கூட இல்லாத கொடிய நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. பணம் சம்பாதிப்பதற்குச் சூதாட்டத்தையே பற்றுக் கோலாகக் கொண்டார். அக்கிராமத்திலுள்ள பலருடன் சூதாடினார். பணம் சம்பாதித்தார். சூதாட்டத்தில் பித்தலாட்டம் செய்வோரை கத்தியால் குத்தினார். இதனால் அந்தக் கிராமத்திலுள்ள எவரும் எவருடனும் சூதாடுவதில்லை அந்த வருமானம் மூலம் பரமனுக்கு பெரும் தொண்டாற்றினார். குடும்பத்தையே குலைத்து கொடுமைப்படுத்தும் சூதினை அந்தக் கிராமத்தில் ஒழித்ததினாலும் சிறந்த சிவத்தொண்டாற்றியமையாலும் மூர்க்க நாயனார் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வு பெற்று அறுபத்திமூன்று நாயன்மாரில் ஒருவரானார். எனவே தான் மனிதர்களைக் கொலை செய்யக் கூடாது அவர்களைத் திருத்த வேண்டும். கொலையினால் ஆகப்போவது ஒன்றும் இல்லை என்ற முடிவை இங்கே பிரபாகரன் எடுத்திருக்கின்றார். தந்தையைக் கொன்ற அஜாதசத்ரு அடைந்தது மீண்டும் பக்தி மார்க்கம் தான். காதலனைக் கொலை செய்த பத்திரை அடைந்தது துறவு மார்க்கம் தான். சூதாட்டம் ஒழிந்ததும் பக்தி மார்க்கம் மூலம் தான் எனவே உண்மையான பக்தி நெறியில் மக்கள் வளர்க்கப்பட்டால் கொலைகளும் கொடூரங்களும் தங்கள் ஆதிக்கங்களை அமுல் செய்ய முடியாது என்பதில் பிரபாகரன் அவர்களுக்கு நிறைந்த நம்பிக்கையுண்டு. சரி பிழைகளைப் பேசித் தீர்க்க வேண்டும் என்பதையே விரும்புபவர் அவர். அதற்கு காரணமே அவர் சார்ந்த இனத்தின் வரலாறு தான். அது எப்படியெனில்

பரமசிவன் பார்வதி திருமண த்திற்குத் தேவர்கள் வந்து சேரவே வடநாடு தாள்வுற்றது. தென்னாடு உயரவே இரு நாடுகளையும் சமன் செய்ய அகத்திய முனிவர் தென்திசை அனுப்பப் பட்டார். தென்திசையில் தாமரப் பர்ணி என்ற இடத்திற்கே அகத் தியர் முதலில் வந்தார் என்று வரலாறு கூறுகின்றது. இலங்கைத் தீவின் பழைய பெயர் தாமரப்பரணி என்பதை வரலாறு தெளிவாக்குகின்றது. இதன் அடிப்படையிலேயே தாமரவருணிப் புதிய புலிகள் என்று அஞ்சா நெஞ்சன் இராச்ரெத்தினம் அவர்கள் பெயரிட்டார் என்றும் அதைப் பிரபாகரன் அவர்கள் தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் என்று மாற்றினார் என்றும் இன்னுமொரு வரலாறு கூறுகிறது.

தாமரபர்ணி என்ற தென்னகம் அன்று இராவணனின் ஆட்சியில் இருந்தது. அவனுடைய படைகளால் தனக்கேற்பட்ட துன்பங்களிலிருந்து விடுபட அகத்தியர் இராவணனுடன் போர் செய்யப் புறப்பட்டார். போர் என்பது ஆயுதப் போராக அமையாமல் அறிவுப் போராக அமைய வழிவகுத்த அகத்தியர் இசைமேதையான இராவணனை இசைப்போருக்கு அழைத்தார். இராணவனும் அகத்தியரும் போர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இருவரின் வீணைகளும் விண்ணை அதிர வைத்தன.. அகத்தியர் வென்றார். தோல்வியை ஒப்புக் கொண்ட இராவணன் இலங்கையை மட்டும் ஆண்டான். நேர்மையான ஒப்பந்தங்களை மீறும் செயல்கள் தமிழர்களுக்கு அன்றும் இல்லை என்பதை இராவணனும் இன்றும் இல்லை என்பதை பிரபாகரன் அவர்களும் நிரூபித்துக் கொண்டேயிருக்கின்றார்கள். மனிதர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை. மண் மட்டும் தான் வேண்டும் என்று அன்று இராவணன் நினைத்திருந்தால் அகத்தியர் கொலை செய்யப்பட்டிருப்பார். தமிழுக்கு அகத்தியர் என்ற பெயரும் மரணித்திருக்கும். அந்தக் கொடியகுணம் தமிழர்களிடம் இல்லை என்பதை இராவணனின் வரலாறு காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் மீது ஆசை கொண்டிருந்தால் அசோகவனத்தில் சீதையை அசிங்கப்படுத்தியிருப்பான் இராவணன். கொடிய வனவிலங்குகளின் நடுவே காட்டில் ஒரு பெண்ணைத் தனியே விட்ட பொறுப்பற்ற இராமனையும் இலக்குமணனையும் நேரில் சந்தித்து ஒப்படைக்கவே அசோகவனத்தில் அழகு தேவதையாக வைத்திருந்தான் இராவணன் சீதையை. இதைப் புரிந்து கொள்ளவில்லை பொறுப்பற்றவர்கள் அன்று.

பொறுப்பற்ற தன்மையற்றவனாக இராவணன் இருந்திருப்பின் குரங்குடன் (அனுமன்) கூடவே சீதையை அனுப்பியிருப்பான். நல்லதையே நினைத்து நல்லதையே செய்த இராவணனின் நாட்டை நாசம் செய்தனர் வனவாசிகள். ஆனால் இலங்கையில் இராம இராச்சியம் நிலைக்கவே யில்லை. அதற்குக் காரணம் தேவைகள் இல்லாமல் யாரையும் இராவணன் கொலை செய்யவில்லை. அந்த வரலாற்றின் வழியிலே தான் தமிழர்களின் எதிரிகளான சிங்களவர்களும் மனிதர்கள் அவர்களைத் திருத்த வேண்டுமே தவிர அழிக்க வேண்டியதில்லை. அந்த அழிவுகளால் எவரும் எந்தவித பயனையும் அடைய முடியாது என்று தீர்மானித்து விட்ட பிரபாகரன் அவர்கள்.

## பதம் 18

ஜனார்த்தனரே! பேராசையால் உந்தப்பட்டு நண்பருடன் கலகம் செய்வதிலும் குலநாசம் செய்வதிலும் இந்த மனிதர் பயன் எதையும் காணவில்லையாயினும் குற்றமென்றறிந்த நாமேன் இச்செயல்களில் ஈடுபட வேண்டும்?

## பொருளுரை

மக்களுக்கு நல்லதையே செய்வார் கிருஷ்ணர் என்ற நம்பிக்கை பிரபாகரனுக்கு மிக இறுக்கமாகவே ஏற்பட்டிருக்கின்றது என்பதை ஜனார்த்தனா என்ற அந்த வார்த்தை வடிவமைத்துக் காட்டுகிறது. எதிரியால் போட்டிக்கோ போருக்கோ அறைகூவல் விடப்பட்டால் போராளி மறுக்கலாகாது. இந்த நியதியில் சிங்களவரால் போருக்கு அழைக்கப்பட்ட பிரபாகரன் அவர்கள் போருக்கு மறுக்க முடியாது. ஆனால் இவ்வாறான அழைப்பின் விளைவுகளைக் காணும் பார்வையற்றவர்களாகவே சிங்களவர்களைப் பிரபாகரன் அவர்கள் கருதுகிறார். அது மட்டுமின்றி போருனால் ஏற்படும் தீய விளைவுகளை முன்கூட்டியே காண முடிந்ததால் பிரபாகரனால் இந்த அழைப்பை ஏற்க முடியவில்லை.

தமிழர்கள் சிங்களவர்களை நல்ல நண்பர்களாகவே கருதி வாழ்ந்தார்கள். அந்த நட்பு நீடிக்க வேண்டும். எந்த ஒரு மொழியோ சமயமோ அழிவதைத் தமிழர்கள் விரும்புவதில்லை. அபயம் தேடி ஓடி வந்தவர்களை அணைக்கும் கரங்கள் தமிழர்களுடையது. அதற்கு வரலாற்றுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றுகள் நிறையவே உண்டு மகத சாம்ராச்சியத்தின் கபிலவஸ்த்து என்ற சிற்றரசை ஆண்டு வந்த சுத்தோதனனுக்கு கி.மு 560 இல் சித்தார்த்தர் என்ற மகன் பிறந்தார். அவர் வாலிப பருவம் வந்ததும் முடியேற்று குடிகாப் போனாக வாழ்வதை வெறுத்து காடேகி ஞானியாவதற்கு ஆர்வம் கொண்டார்.

காட்டில் பட்டினி கிடந்து உடலை வருத்தி ஞானம் பெற முடியாத சித்தார்த்தர் நாடு திரும்பி சத்தியம் தர்மம் அன்பு அகிம்சை தெய்வபக்தி போன்ற வைகள் தான் எக்காலத்திலும் நிலைக்க வேண்டியவை என்று போதித்தார். இதன் பின் போதி மரத்தடியில் ஞானம் பெற்றார். அதனால் புத்தபகவான் என்று அழைக்கப்பட்டார். அன்றிலிருந்து அவருக்கென்று பக்தர்கள் கூட்டம் கூடியது. முருக பக்தர்கள், ஐயப்ப பக்தர்கள், இராம பக்தர்கள் ரமண பக்தர்கள் அரவிந்த பக்தர்கள், சாயி பக்தர்கள் போல் புத்த பக்தர்களும் சேர்ந்தார்கள். இதனால் தமிழ் அரசர்களே புத்தரின் சிலை களை இந்துக் கோயில்களில் அமர்த்தியதுடன் புத்த கோஷ்டியினரையும் ஆதரித்தனர்.

ஆனால் இன்று இலங்கையில் சிங்களமக்கள் சிலர் புத்தரின் அருள்நெறி களை ஒதுக்கி விட்டு பேராசை என்ற சகதியினுள் கிடந்து பெரும் கொடுமை களையும் கஷ்டங்களையும் அனுபவிப்பதோடு ஆயுதங்களால் அமைதியை ஏற்படுத்தலாம் என்றும் நம்புவது புத்த போதனைக்கு முற்றி லும் முரணானதே! எனவே தான் எக்காலத்திலும் எவராலும் அழிக்க முடி யாத புத்த போதனைகளின் பக்கம் சிங்களவர்களைத் திசை திருப்ப வேண் டுமே தவிர அவர்களை அழித்து தர்மத்தை நிலை நாட்ட முடியாது என்பதில் பெருநம்பிக்கை வைத்துள்ளார் தலைவர் பிரபாகரன் அவர்கள்.

இந்துக் கோயில்களிலே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த புத்தர்சிலைகள் மறைந்ததினுள்ளும் மர்மம் இல்லாமலில்லை. நாளடைவில் புத்த கோஷ்டி யினர் புத்தரை ஒரு சமய ஸ்தாபகராகக் கற்பித்து இந்து சமயத்திற்கு எதிரானதாகவும் பிரசாரப்படுத்தினர். அதனால் இந்துக் கோயில்களிலிருந்த புத்தர் சிலைகள் அகற்றப்பட்டன. கி.பி.4ம் நூற்றாண்டிலிருந்து தங்களின் தூய்மையை இழக்க ஆரம்பித்த புத்த பக்தர்கள் புத்தர் பெயரால் சமய த்தை ஆரம்பித்து கடவுள் புத்தராக அவதரித்ததாகவும் தெய்வங்கள் அனைத்தும் பொய்யெனக் கூறியதாகவும் அன்பையும் அகிம்சையையும் போதித்தாகவும் பிரசாரப்படுத்தினர். ஆனால் அந்த அன்பும் அகிம்சையும் கூடப் புத்த பூமியான இலங்கையில் இயற்கை எய்தி விட்டன என்று கூறின் தவறில்லை. புத்தரின் போதனைகளுக்குப் புதிய சமயக் கோட்பாடு களை வகுத்துக் கொண்ட அவர்கள் மக்களை மதம் மாற்றம் செய் வதற்கு உபாயமாக மாந்திரீக வேலைகளில் தேர்ச்சி பெற்றனர். எனவே 4ம் நூற்றாண்டிலிருந்து 5ம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் தங்களை இந்துக்களாகவே காட்டிக் கொண்டு வந்த புத்த பக்தர்கள் பிக்குகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியதுடன் அரசர்களையும் மக்களையும் மதம் மாற்றத் தீவிரங் கொண்டனர். இவ்வேளையில்

கி.மு.545ம் ஆண்டளவில் மகதநாட்டு இளவரசன் விஜயனும் அவனது தோழர்களும் இலங்கையின் பழங்குடி மக்களான இயக்கர் நாகருடன் வந்து கலந்துறைந்தனர். அந்த வழி வந்தவர்களே இன்றைய சிங்கள வர்கள். அவர்களிடம் தங்கள் மொழியையோ சமயத்தையோ தமிழர்கள் திணிக்கவில்லை என்பதை எண்ணிப் பார்த்தால் தமிழர்களின் தூய உள்ளத்தின் நிலைமை புரியும். கி.மு.215 இல் முடிசூடிய சிங்கள அரச னான அசோகனுடைய காலத்தில் புலிக்கொடி ஏந்திய சோழ இளவரசன் எல்லாளன் அந்த அரசிருக்கையைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் ஆண் டான். அன்றும் அவன் சிங்கள மக்களைக் கொடுமைப்படுத்தவில்லை.

இமயத்தில் புலிக்கொடியைப் பறக்க விட்ட கரிகாற்சோழன் கி.பி.110இல் இலங்கையின் மேல் படையெடுத்து 12000 சிங்களவர் களைச் சிறை பிடித்துச் சென்று பெருக்கெடுத்து ஓடும் காவிரி நதிக்கு கல்லணை கட்டுவித்தான். இந்த நிலைப்பாடு சிங்களவர்களை அழித்து அதில் தமிழர் சாம்ராச்சியத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அன்றைய புலிக்கொடி வேந்தன் கரிகாலனிருந்து இன்றைய கரிகாலன் என்ற புனைபெயர் தாங்கிய விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் வரையில் நினையாத ஒன்று என்பது புலனாகின்றது.

கிறிஸ்தவர்கள் பிரபல்யமாகாத காலத்தில் ரோம் சாம்ராச்சியத்தை நீரோ மன்னன் ஆட்சி புரிந்தான். அவனது உத்யாவனத்தில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களைக் கொலை செய்தான் என்றும் அந்த இடத்தில் தான் வத்திக்கான் என்ற போப்பாண்டவரின் வாசஸ்தலம் அமைந்திருப்ப தாகவும் ஒரு வரலாறு கூறுகின்றது. ஆனால் 12000 சிங்களவர்களைக் கைது செய்த கரிகாற்சோழன் அவர்களைக் கொண்டு ஆக்கபூர்வமான வேலையைச் செய்ததுடன் அவர்களை மிக கவனமாகவும் பாதுகாத் தான் அதனால் தான் அவர்கள் மீளவும் இலங்கை திரும்ப முடிந்தது. எப்படியெனில்

தந்தையின் காலத்தில் ஏற்பட்ட தோல்வியைத் துடைக்க இலங்கை மன்னன் கயவாகு சோழநாடு சென்று நட்புரிமை கொண்டு சிறைப்பட்ட வர்களையும் அழைத்து வந்தவுடன் கற்பின் பெருமையால் மதுரையை எரித்த கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கோயில் அமைத்து விழாக் கொண்டாடிய போது அதில் கலந்து கொண்டு வணங்கியதோடு தன்னாட்டிற்கும் எழுந்தருளம்படி இறைஞ்சவே தந்தேன் வரம் என எழுந்தது ஒருகுரல். இதனைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்சூழ் இலங்கை கயவாக வேந்தனும்
எந்நாட்டாங்கண் இயமவரம் பனின்
நன்னாட் செய்த நாளனி வேள்வியில்
வந்துஈகு என்றே வணங்கினர் வேண்ட
தந்தேன் வரம் என்று எழுந்த தொரு குரல்

என்று கூறுகின்றார். அதனால் உள்ளம் பூரித்த கயவாகு புத்தரின் பிட்சா பாத்திரத்தின் சில்லான பத்ரதாது என்றதையும் கற்பின் கடவுளின் காற் சிலம்பையும் பத்தினி வணக்கத்திற்குரிய பாடல்கள் கொண்ட தமிழ் நூல் களையும் எடுத்துக் கொண்டு சோழநாட்டு மக்கள் பலரையும் அழைத் துக் கொண்டு சென்றதுடன் இலங்கையில் கண்ணகிக்குக் கோயில்கள் கட்டி பௌத்த கோயில்களிலும் கண்ணகி சிலைகளையும் நிறுவினான். இதனால் தான் இன்றும் சிங்களவர்கள் பத்தினித்தெய்யோ என்று பரவச மாகப் போற்றுகின்றார்கள். அது மட்டுமின்றி வாரம் மும் முறை பௌத்த பாடல்களையும் வாரம் இருமுறை தமிழ்ப்பாடல்களையும் பாட வேண்டும் என்றும் கயவாகு மன்னன் கட்டளையிட்டான். இலங்கையில் எவ்வாறு அவன் கண்ணகி வழிபாட்டைத் திறம்பட நடாத்தினான் என்பதை பின்வரும் சிலப்பதிகார உரை பெறு கட்டுரை விளக்குகின்றது.

'அது கேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வென்பான்
நங்கைக்கு நாட்பலிபீடிகை கோட்டமுந்துறுத்தாங்கு
அரந்தை கெடுத்து வரந்தரு மிவளென
ஆடித்திங்களகவையினாங்கோர்
பாடி விழாக்கொள் பன்முறை யெடுப்ப
மழைவீற்றிருந்து வளம் பெருகிப்

பிழையா விளையுள் நாடாயிற்று" என்ற வரலாற்று வரிகள் சிங்கள மன்னன் கயவாகு பகைமையை நட்பினாலேயே வென்றான். சிறைப்பட்ட தங்கள் மக்களை மீட்டான். தமிழ்த் தெய்வமான கண்ணகியை வழிபட் டான். வளமான ஆட்சியைப் புரிந்தான். இந்த நிலைமை மீண்டும் ஏற்பட வேண்டும். புலிக்கொடியின் கரிகால் சோழனுடன் அவன் கொண்ட நட்பு புலிக்கொடி வேந்தன் கரிகாலன் பிரபாகரனுடன் மீண்டும் புனருத்தாரணம் செய்யப் படல் வேண்டும். இதன் மூலமே இலங்கையில் பூரண அமைதி ஏற்பட முடியும். இலங்கையின் கிழக்குப் பகுதியான மட்டக்களப்பிற்கு புலியன்தீவு என்ற காரணப் பெயர் உண்டு. காரணம் புலியன் என்பவன் ஆண்டதினால் ஏற்பட்ட பெயர். எனவே தமிழ்ஈழப்பகுதிகள் புலிகள் வசம் இருந்ததே வரலாற்று உண்மைகள். எனவே அந்தநாள் மீண்டும் உதயமாக வேண்டுமாயின் பாவச் செயல்களால் ஏற்பட முடியாது. எனவே போர் செய்வதும் அதனால் மனிதர்களை அழிப்பதும் குற்றம் என்பதை முழுமையாக ஏற்றுக் கொண்ட தலைவர் பிரபாகரன் அவர்கள் போரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்க மறுக்கின்றார். சமாதானமே மனிதகுல மீட்சியும் மாட்சியும் என்பதே அவர் கொள்கை. எனவே தான் இனத்தின் அழிவு தர்மத்தின் அழிவு என்கிறார்.

## பதம் 19

*இனம் அழிந்தால் நிலையான இன தர்மங்கள் அழிகின்றன இன தர்மம் அழிந்தால் தலைமுறை முழுவதையும் அதர்மம் சூழுமே!*

## பொருளுரை

எந்தவொரு இனமும் முறையாக வளர்ந்து ஆன்மீகத் தகுதிகளைப் பெறும் படியான பல அறப் பண்பாட்டுக் கொள்கைகள் உண்டு. பிறப்பிலிருந்து இறப்பு வரை இனத்தைத் தூய்மைப்படுத்தும் முறைகளுக்குப் பெரியோர்களே முழுப் பொறுப்புடையவர்களாகும். எனவே தான் பெரியோர்களை வணங்குவதும் மதிப்பதும் தமிழர்களின் பண்பாட்டுக் கோலங்களாக இன்றும் விளங்குகின்றது. சிறுவயதினிலே தூய எண்ணங்களையும் இலட்சிய உணர்வுகளையும் ஆன்மீக நெறிகளில் வல்லமையும் கொண்டவர்களைப் பெரியவர்களாகவும் அவதார புருஷர்களாகவும் ஏற்றுக் கொண்ட சமயம் நமது இந்து சமயம். அந்த வகையிலே தான் திருஞான சம்பந்தர் பிரகலாதன் ஆகியோரின் பிறப்புக்கள் அமைந்தன. அவர்கள் செய்த அற்புதங்களை தெய்வீக உணர்வோடு சந்தேகம் இன்றி மக்கள் ஏற்றார்கள். இடர்கள் அகன்று இன்புற்று வாழ்ந்தார்கள். அதனால் தர்மங்கள் அழியாவரம் பெற்று வாழ்ந்தது.

ஆனால் கலியுகவாசிகளான நாமோ கலியின் வடிவான சந்தேகிகளாகவே வாழ்கின்றோம். அதனால் தான் நாம் சார்ந்திருக்கும் சமயமே பிழையானது என்று எண்ணத் தோன்றுகின்றது. உலகில் ஒரே கடவுள் தான். அவர் உரு வடிவில் இங்கு இல்லை என்ற பிரசாரத்தை நம்பத் தோன்றுகின்றது. இந்தக் குழப்ப நிலைகளுக்குள் நானும் சாமி தான் என்று வேடம் புனையும் பிரேமானந்தாக்களை நம்பி வளர்க்கவும் காரணமாக இருக்கின்ற மக்கள் நாம் தான். ஆன்மீகத்தோடு மக்கள் சேவைகளையும் செய்து கொண்டிருக்கும் ஆன்மீக வல்லுனர்களையும் சீரான கண்ணோடு பார்க்கப் பயப் படுகின்றார்கள். இன்று மக்கள் எல்லாமே அதாவது சாமிகள் என்றாலே போலிகள் ஏமாற்றுக்காரர்கள் என்று ஒதுக்கி விடும் நோக்குடையோர்களாகின்றார்கள்.

இத்தகைய குழப்பங்களுக்குக் காரணமே நமது தமிழினம் அழிவிற்கு உட்பட்டதே. ஏனெனில் உயிர்ப் பாதுகாப்புத்தேடி மேற்குலக நாடுகளில் தஞ்சம் புகுந்த நாம் சமயத்தையும் மகான்களையும் நம்பத் தயங்குகின்றோம். மேற்குலகு நாட்டவர் இன மொழி நிற பேதங்களை மறந்து இறைவனின் அவதாரமாக சத்தியசாயிபாபாவை வணங்குகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய பாதத்தை வணங்கப் புட்டபர்த்திக்குப் படையெடுக்கின்றார்கள். மேற்குலக மோகத்தில் மயங்கிக் கிடக்கும் இந்துக்கள் சிலர் இன்னும் அந்த மகானை ஏளனம் செய்து கொண்டேயிருக்கின்றார்கள்.

அதேபோல் இன்று மூன்றாவது தடவையாக கனடா வந்துள்ள ஓம்சக்தி நாராயணி அம்மா தமிழால் பூசை செய்யப் பழகுங்கள். பிள்ளைகளுக்கு வீட்டில் தமிழை மட்டும் சொல்லிக் கொடுங்கள் என்று வற்புறுத்துகின்றார். இது எல்லாம் வல்ல பராசக்தியின் அருள்வாக்கு என்று கருதி தமிழ்ப்பூசையைத் தொடங்கி தமிழ்அன்னைக்கு மகுடம் சூட்ட வேண்டிய நாம் நாராயணியம்மா பக்தர்களுக்கு எடுத்துக் கொடுக்கும் பொருட்கள் எப்படி எங்கிருந்து வருகின்றன என்பது பற்றி ஆராய்ச்சி செய்வதிலேயே காலத்தைக் கழிக்கின்றோம். ஒன்றை மட்டும் மறக்கின்றோம்.

அதாவது ஓம் சாயிராம் என்று உலகை உலுக்கும் சத்தியசாயி பாபாவோ ஓம்சக்தி நாராயணி அம்மாவோ தங்களிடமிருக்கும் இறை சக்தியை மட்டும் பயன்படுத்தியே தெய்வ உருவங்களையும் திருநீற்றையும் எடுத்துத் தருகின்றோம் என்று சொல்லவில்லை. மக்களைத் தங்கள் பக்கம் அதாவது ஆன்மீகத்தின் பக்கம் திருப்பவும் வறுமைப் பிடியினுள் சிக்கித் தினமும் பசியோடும் பட்டினியோடும் போராடும் மக்களுக்கு வேண்டிய தேவைகளைச் செய்து கொடுக்கப் பணமும் தேவை. எனவே இந்தக் கலியுகத்தில் இப்படிப்பட்ட சித்து விளையாட்டுக்கள் தேவையாகின்றது என்பதே உண்மை. மக்களைத் தங்கள் பக்கம் அழைப்பதற்காக. (பக்தியின் பக்கம்)

எனவே தெய்வீக அவதாரங்களாக விளங்கும் மகான்கள் ஒரு பொருளை எங்கிருந்து வரவழைக்கின்றனர் என்பதை எப்படி நாம் காண முடியவில்லையோ அதே போல் இறைவனும் உண்மையாகவே இருக்கின்றார். நம்மால் காணமுடிவதில்லை. நமது அன்பான ஆழமான பக்தியால் அவர் அருளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்படல் வேண்டும். அதன்மூலமே தர்மம் காப்பாற்றப்படும். அதுவே சிறந்த ஆன்மீக நம்பிக்கை.

இன்று இந்து சமயத்தின் அவதார புருஷர்கள் மக்கள் சேவை செய்கின்றார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. இன்று அவர்கள் அமைக்கின்ற பாடசாலைகளும் மருத்துவமனைகளும் இதற்குச் சாட்சியாகின்றன. கல்விக்கூடங்கள் இன்றைய காலத்தில் மட்டும் உருவான ஒன்றல்ல. இந்து சமயத்தின் புராண இதிகாசங்களில் வனங்களிலே பல பாடசாலைகள் (ஆச்சிரமங்கள்) அமைந்ததாகப் பார்க்கின்றோம். அவற்றில் நைமியசாரணிய வனம் மிகப் பெருமையும் புகழும் பெற்றது. அருந்தவம் செய்யவும் நல்ல கல்வியறிவைப் பெறவும் பிரம்மதேவர் உருட்டிய தர்ப்பைப் புல்லினால் சுட்டிக் காட்டப்பட்டதனால் நைமிய சாரணியம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் வந்ததாகவும் வேப்பமரங்கள் நிறைந்த காடாகையால் அப்பெயர் வந்த தாகவும் இரு வேறுபட்ட வரலாறுகள் கூறுகின்றன. இங்கே பதினாயிரம் மாணவர்கள் சவுனமுனிவரின் தலைமையில் கல்வி கற்று மகாபெரும் ரிஷிகளானார்கள். இங்கே! சமய போதனை வேதப் பயிற்சி அரசியல் பொருளாதாரம் போர்த்தர்மங்கள் பூமிசாஸ்திரம் தாவரவியல் விலங்கியல் போக் குவரத்துச்சாதனப் பயிற்சிகள் என்பன முக்கிய பாடங்களாகப் பயிற்சியளிக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. அங்கே படித்த மாணவர்கள் அங்கேயே தங்கி கல்வியுடன் குருவானவர்களுக்குப் பணிவிடைகளையும் தங்களுக்குத் தேவையானவற்றையும் தாங்களே செய்து சிறப்புடையவர்களாக வாழ்ந்தார்கள்.

அதுவே இன்றைய காலத்தில் மாணவர்கள் விடுதிச் சாலைகளாக நகர் புறப் பாடசாலைகளில் அமைந்து நாகரிகம் என்ற மோகத்தால் நலி வடைந்து கிடப்பதை வரலாற்று ரீதியில் நாம் அறியலாம். எனவே தான் வரலாறுகள் தான் எனக்கு வழிகாட்டி என்று கூறும் தலைவர் பிரபா கரன் அவர்கள் தமிழ்ஈழ வனங்களையே புலிகளின் வாழ்விடங்களாக மாற்றி அவர்களுக்குப் போர்ப் பயிற்சி மட்டும் அளிக்காமல் அங்கே அவர்களுக்குக்கான கல்வியையும் போதிக்கின்றார். புலிகளின் வனத்திற்கு விஜயம் செய்த திரு பழ. நெடுமாறன் அவர்கள் தமிழ்ஈழ விடுதலைப் புலிகளின் நூல் நிலையங்களைப் பார்த்து வியந்ததோடு போரில் கையா ளப்பட வேண்டிய ஒழுக்க விதிகள் என்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வெளியீடான நூலே தன்னைக் கவர்ந்தது என்கிறார். எனவே தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ்ஈழப் போரைச் சர்வதேசச் சட்ட ஒழுங்கு விதி களுக்கு உட்பட்டே நடத்துகின்றார் என்பது உண்மையாகின்றது.

எனவே போரிலிருந்து அறிவுக்கூடங்கள் மட்டுமல்லாது நல்ல பலன் மிக்க நூல்களும் அதைப் பயில்விக்கும் அறிஞர்களும் அனுபவமிக்க பெரியவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஆவல் கொள்கின்றார் பிரபாகரன். அவர்கள் புத்தகங்களை மட்டும் படித்து அறிஞனாகவோ சாஸ்திரப் புத்தகங்களைப் படித்து தர்மங்காக்கும் தலைவனாகவே உயர்ந்து விட முடியாது என்பதே வரலாற்று உண்மை.

நைமிய சாரணிய வனத் தலைவருடன் ஒத்துப் போக முடியாத ஒரு மாணவன் சாஸ்திரப் புத்தகங்களைப் படித்துப் பண்டிதனாவதுடன் தர்மத்தைப் போதிக்கும் தகுதியைப் பெறலாம் என்று உறுதி கொண் டான். அதன்படி தான் படித்த சாஸ்திர நெறியின்படி ஒரு வீட்டார் எறிந்த எச்சில் சாப்பாட்டைச் சாப்பிட்டான். அதைக் கண்ட அந்தக் கிராமத்துப் பெரியவர் படித்தவன் மாதிரித் தெரியும் நீ ஏனப்பா எச்சில் சாப்பாட்டைச் சாப்பிடுகின்றாய் என்று கேட்கவே அவன் பின்வருமாறு பதிலளித்தான். நான் படித்த சாஸ்திரம் சொல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எச்சில் பரிசுத்தம்' 'இறந்தவன் போர்வை பரிசுத்தம்' 'வாந்தி பண்ணினது பரிசுத்தம்' என்றான். இதைக் கேட்ட பெரியவர் சிரித்து விட்டுப் பின்வருமாறு விளக்கங் கொடுக்கின்றார்.

எச்சில் பரிசுத்தம் — பசுவிலிருந்து பாலைக் கறப்பதற்கு முன்பு கன்றுக் குட்டியை ஊட்ட விடுகின்றோம். கன்று பால் குடித்ததும் பசுவின் மடியை நாம் கழுவுவதில்லை. கன்றின் எச்சில் பட்ட காம்பிலிருந்து கறந்தபால் பரிசுத்தம். அதனால் அதை ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்கின்றோம்.

இறந்தவர் போர்வை பரிசுத்தம் — பட்டுப்பூச்சி இறந்த பிறகு தான் அதன் உடலிலிருந்து பட்டு நூலை இழுத்து அதை ஆடையாக நெய்கின்றார்கள். அதை உடுப்பது சிறந்தது. அது ஆண்டவனுக்கு உவப்பானது என்கிறார்கள் பெரியவர்கள். ஆனால் இன்று வியாபாரத்தின் நிமித்தம் பட்டுப் பூச்சிகளை இயற்கையாக மரணிக்க விடாமல் கொலை செய்து பட்டாடைகள் நெய்கின்றார்கள். அந்தப் பாவத்திற்குப் பயந்து தான் காஞ்சிப் பெரியவர் பட்டு வேண்டாம் என்று வேண்டிக் கொண்டார். இதுவே இறந்தவன் போர்வை பரிசுத்தம் என்று விளக்கமளித்த பெரியவர்

வாந்தி பண்ணினது பரிசுத்தம் — மருத்துவத்தில் தேனைச் சிறந்ததாகக் கொள்கின்றார்கள். தேனீ தன் உடலில் சேகரித்து வைத்துப் பிறகு வெளியே கக்கிய பொருள் தான் தேன். அதுவும் ஆண்டவனுக்கு உவப்பானதே. அதுவே வாந்தி பண்ணினது பரிசுத்தம் என்று முடித்தார். இந்த விளக்கத்தைக் கேட்ட சாஸ்திரப் புத்தகத்தை நம்பியவர் குருவைத் தேடி ஓடினான். எனவே இந்த நிகழ்வுகள் ஒரு இனத்தின் தர்மம் நிலை நாட்டுவதற்கு குருவும் தலைமையும் அறிவும் அனுபவமும் மிக்க பெரியவர்களும் முக்கிய தேவையானவர்கள். எனவே போரினால் இனம் அழிந்தால் இவர்களும் அழிந்து விடுவார்கள். பிறகு எமது இனம் அதர்மத்தின் வழி நின்று தவறி விடும். எனவே இந்தப் போர் வேண்டாம் என்கிறார் பிரபாகரன் அவர்கள்

## பதம் 20

*கண்ணா! தர்மம் கெட்டால் மாதர் கற்பும் மாதவர் நோன்பும் கெடும் விருஷ்ணி குலத் தோன்றலே! மாதர்கள் கெடுவதனால் சமூகத்தில் குழப்பம் உண்டாகின்றது.*

## பொருளுரை

வாழ்வில் சாந்திக்கும் வளத்திற்கும் ஆன்மீக முன்னேற்றத்திற்கும் ஆதாரத்துவம் மனித சமுதாயத்தில் நன் மக்கள் இருப்பதேயாகும். நன்மக்கள் தொகை தழைக்குமாறும் அதனால் நாட்டின் சமூகத்தின் பொது ஆன்மீக முன்னேற்றம் ஓங்குமாறும் மனித வளத்திற்கான வாழ்வியல் அறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகள் உருவாக்கப் பட்டிருந்தன. இவைகள் பகவத் கீதை பரிசுத்த வேதாகமம், திருக்குர்ஆன், புத்ததத்துவம் என்ற நூல்களாக இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இந்தவகை மக்கள் தொகை சமுதாயத்தில் நிறைந்து இருப்பது பெண்களின் கற்பையும் நம்பிக்கை நல்லொழுக்கத்தையும் பொறுத்திருக்கிறது. ஏனெனில் பெண்கள் மென்மையான சுபாவம் கொண்டவர்கள். அவர்களின் இந்தக் குணமே அவர்களின் நல்லொழுக்கத்தை நாசமாக்க காரணமாகி விடும். எனவே தான் பெண்களையும் குழந்தைகளையும் பெரியவர்கள் பாதுகாக்க வேண்டும் என்ற நடைமுறை நமது சமூகத்தில் ஏற்பட்டது. திருமணத் திலும் மணமகளை விட மணமகனுக்கு வயது சற்றக் கூடுதலாக இருக்க வேண்டும் என்பதற்கு இதுவே காரணம்.

எனவே பெண்கள் தங்களுக்கு வகுக்கப்பட்ட அறக்கொள்கைகளின் வழியில் பண்பாடுகளைக் கடைப்பிடித்து வந்தால் அவர்களது கற்பும் பக்தியும் மனிதநேயம் மிக்க நன் மக்களைத் தோற்றுவிக்கும். இதை விடுத்து வாழ்வியலுக்கு விதிக்கப்பட்ட பண்பாட்டுக் கோட்டைத் தாண்டி கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழ்ந்து விட்டு வாழ்வில் ஏற்படும் தோல்விகளுக்கு விதியே காரணம் என்று முடிவு எழுதுவது பொருத்தமுடையதன்று.

உலக மக்களின் இதயங்களில் ஏதோ ஒருவகையில் ஒருவித துன்பி யலை ஏற்படுத்தி விட்டு மறைந்த பிரிட்டீஷ் இளவரசி டயானாவின் வாழ்க்கை வரலாற்றை சற்று ஆராய்ந்து பார்த்தால் பெண்களின் ஒழுக்க மும் பண்பாடுகளும் எவ்வளவு முக்கியம் என்பது புரிந்து விடும். டயானா டொடிபியட்டின் காதல் மீது நிற வெறி கொண்டோர் தங்கள் விரும்பாத் தன்மையை இந்த மரணத்தின் மூலம் காட்டி விட்டார்கள் என்று லிபியத் தலைவர் கேர்ணல் கடாபியின் குற்றச் சாட்டும் பிரிட்டீஷ் அரசாரின் பதிலளிப்புக்களும் நாட்டுப் பிரச்சனையாக மாறி நிற்பதற்குக் காரணமே டயானா என்ற பெண் தானே!

இயற்கையிலிருந்து வருகின்றவைகள் எல்லாம் நல்லவைகளாகவே இருக்கின்றன. மனித னின் கரம் பட்டே அவை கெட்டுப் போகின்றன.
பிறக்கும் போது கள்ளம், கபடம் இல்லாமல் தான் நாம் பிறக்கின்றோம். வளர்கின்ற சூழ்நிலையில் தான் அவற்றை நாம் கற்றுக் கொண்டு விடு கின்றோம். எதைக் கற்றுக் கொள்வது எதை விட்டு விடுவது என்பது முற்றிலும் நம்மைப் பொறுத்த விடயமே!

ஒரு மனிதனுக்கு இரண்டு பாதிப்புக்கள் உண்டு. ஒன்று தன்னுடைய சுயசிந்தனையின் பாதிப்பு. மற்றொன்று சூழ்நிலையின் பாதிப்பு. இரண்டும் வேறு வேறாயினும் ஒன்றின் பாதிப்பு ஒன்றின் மேல் இருக்கவே செய் கின்றது. குறிப்பாக சுயசிந்தனையை வலிமைப்படுத்திக் கொள்பவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலைகளின் பாதிப்புகளுக்கு ஆளாவதில்லை. ஏனெனில் அவனுக்குத் தேவையான சூழ்நிலைகளை அவனால் உருவாக்கிக் கொள்ள முடியும். ஆனால் இந்த விதிமுறைகளில் நின்று வேறுபட்டு மேற்குறிப்பிட்ட இரு சூழ்நிலைகளாலும் பாதிக்கப்பட்டவர் இளவரசி டயானா என்பதை மறுப் பதற்கில்லை.

எனவே டயானாவின் வாழ்வில் விதி விளையாடி விட்டது என்று சொல்லி ஆறுதல்படலாமே தவிர அர்த்தம் அதுவாகி விடாது. ஏனெனில் நமது வாழ்க்கைப் போக்கிற்கு எதுவாகயிருந்தாலும் அதற்கான பொறுப்பை நாம் தான் ஏற்க வேண்டும். பிரிட்டீஷ் இளவரசர் சாள்ஸ்ஸைக் காதலித்த டயானா அவரைக் கரம் பிடித்து இளவரசியாக பக்கிங்ஹாம் அரண்மனை க்குள் காலடி வைக்கும் முன் அரண்மனை ரகசியங்களையும் சட்ட திட்ட ங்களையும் அறிந்து பரிசீலனை செய்திருக்க வேண்டும். ஏனெனில் உலக மக்களின் வயிற்றெரிச்சலே அந்த அரண்மனை என்பதை அவர் புரிந்திரு க்க வேண்டும். ஏழைகளின் இதயமாக டயானா இருந்திருப்பின் அது இலகுவில் அவருக்குப் புரிந்திருக்கும். மகாத்மா காந்தியடிகளின் வர லாறே டயானாவுக்கு துணை நின்றிருக்கும். எப்படியெனில்

காந்தியடிகள் வட்டமேசை மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்றபோது பிரிட்டீஷ் மன்னராக இருந்த ஐந்தாம் ஜோர்ச் அவரை சந்திக்க விரும்பினார். மன்னரின் அழைப்பைக் காந்தியடிகளும் ஏற்றுக் கொண்டார்.

மாட்சிமை தங்கிய மன்னரைச் சந்திக்கச் செல்பவர்கள் ஒரு குறிப்பிட்ட முறையில் கோட் சூட் அணிந்து செல்ல வேண்டும் என்றும் அதுவே அரசருக்குக் காட்டும் மரியாதை என்றும் ஒரு சம்பிரதாயம் இங்கிலாந்தி லுள்ளது. காந்திஜியிடம் அதைச் சொன்ன போது அந்த மாதிரியான உடை யணிய அவர் மறுத்து விட்டார். இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ஏழை மக்களின் பிரதிநிதியாகவே மன்னரைச் சந்திக்க நான் விரும்புகின் றேன். ஆகவே நான் என்னுடைய வழக்கப்படி நான் அணிந்து கொண்டி ருக்கின்ற உடையில் தான் மன்னரைச் சந்திக்க முடியும் என்று பிடிவாத மாகச் சொன்னார். மன்னரும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

மன்னரைச் சந்தித்து விட்டு பக்கிங்ஹாம் அரண்மனையில் இருந்து வந்த காந்தியடிகளிடம் பத்திரிகையாளர்கள் கேட்டார்கள் மன்னரைச் சந்தித்த அனுபவம் உங்களுக்கு எப்படியிருந்தது என்று. காந்தியடிகள் தமக்கேரிய நகைச்சுவையுணர்வுடன் சொன்னார் நான்கு ஐந்து பேர் அணிவதற்குப் போதுமான உடைகளை மன்னர் ஒருவரே அணிந்திருப்பது எனக்கு வியப்பாக இருந்தது என்று. இந்த வரலாற்றை ஒருமுறை பார்த்திருப்பின் ஏழைகளுக்கான ஏக்கம் டயானாவின் இதயத்தை நிறைத்திருக்கும். அதற்கான இலட்சியத்துடன் அந்த அரண்மனைக்குள் சென்றிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இளவரசியாகினால் நாகரீக உடைகளின் சொந்தக்காரியாகலாம் என்ற அவரின் நினைவுகளே அந்தச் சூழ்நிலைகளே அவருக்குப் பெரும் சுழற்சிகளாகி விட்டது என்பதே உண்மை.

காந்தியடிகளிடம் பாடம் படிக்கத் தவறிய டயானா கர்த்தரின் பாதையில் அவர் சார்ந்த சமய நூலான பரிசுத்த வேதாகம நூல்வழி சென்றிருந் தால் நிம்மதியடைந்திருக்கலாம். அது நடந்ததா? கர்த்தார் அதாவது இயேசுநாதர் அவர்களுக்குப் பின்வருமாறு போதிக்கின்றார்.

பரிசுத்த வேதாகமம் புதிய ஏற்பாடு மத்தேயு அத்தியாயம் 19ல் பதம் மூன்றிலிருந்து தொடங்குகிறது அப்பொழுது பரிசேயர் சிலர் இயேசு விடம் வந்து அவரைச் சிக்க வைக்கும் நோக்குடன் பல கேள்விகளைக் கேட்டார்கள். ஒருவன் தன் மனைவியை எக் காரணத்திற்காகவாவது விவாகரத்துச் செய்வது முறையாகுமா? என்றனர்.

அதற்கு இயேசுபிரான் ஆதியிலே இறைவன் மனிதனைப் படைத்த பொழுது ஆணும் பெண்ணுமாகப் படைத்தான். ஆகையால் ஒருவன் தன் தகப்பனையும் தாயையும் பிரிந்து தன் மனைவியோடு எப்பொழுதும் இணைந்திருப்பான். அவர்கள் இருவரல்ல, இருவரும் ஒரே உடலாய் இருப்பார்கள். எனவே இறைவன் இணைத்ததை மனிதன் ஒருபோதும் விவாகரத்தின் மூலம் பிரிக்க முடியாது என்றார்.

ஆனால் உலக மக்களை வழி நடத்திய அந்த பக்கிங்ஹாம் அரண்மனை யில் மேற்கூறிய சட்டவிதிகளையும் மீறி 1950ம் ஆண்டு எலிசபெத் மகா ராணியாரின் தங்கை மாகிரட்டின் விவாகரத்துடன் தொடங்கியது பின்பு மகாராணியின் மகள் இளவரசி ஆன் கப்டன் மார்க்பிலிப்ஸ்யும் பீடித்தது. இதை அறிந்திருந்தும் கூட டயானா அந்த அரண்மனைக்குள் சென்ற தன் விளைவு பதினைந்து வருட கால இல்லற உறவும் அதனுடன் அனுபவித்த இளவரசி பதவியும் துறக்க நேரிட்டது. எனவே தான் சார்ந்த ஆன்மீகத்தைக் கூட டயானா மதிக்கவில்லை என்பது இங்கே நிருபணமாகிறது. பங்கிங் ஹாம் அரண்மனையை விட்டு புதிய பறவை யாக வெளியே வந்த டயானா ஏழைகளுக்காக உழைப்பதே இலட்சியம் என்றார். இதில் எனக்கு நிம்மதி பிறக்கும் என்றார். பெரும் கோடீஸ் வரரின் மகனான முஸ்லீம் மதத் தைச் சேர்ந்த டொடி பியட்டைக் காதலித்துத் திருமணம் செய்ய இருந்தார். இவர் ஏழைகளுக்கு என்ன கொடுத்தார்?

1997ம் ஆண்டு தான் பாவித்த உடுப்புக்களை பொது நன்மைக்காக விற்று அதாவது ஏலம் விட்டு அதனால் வந்த பணத்தையே நன் கொடையாகக் கொடுத்தார். அது மட்டுமல்லாமல் தன் காதலனான டொடி மரணிப்பதற்கு இரு மணி நேரத்திற்கு முன் 205400 டொலர் அதாவது ஒரு கோடியே 21 லட்சத்து 18 ஆயிரத்து 600 ரூபா (இலங்கை) பெறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியான வைரமோதிரம் கொடுத்தார் காதலர் டொடி. அதற்குப் பதிலாக டயானா டொடிக்குக் கொடுத்தவை காலஞ் சென்ற தனது தந்தையார் பாவித்த ஒரு சோடி சேட் பொத்தான்களும் சிகரட் கிளிப்பரும். இத்தனைக் கும் டயானாவும் ஒரு கோடிஸ்வரியே. ஆனால் நித்திய நல் வாழ்வை டயானா இழந்தே வாழ்ந்தார். அதற்கு என்ன காரணம்? அதற்கு இயேசு பிரானே பதில் சொல்கிறார்.

ஒருவர் நித்திய மெய்வாழ்வைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் இறை வனின் கட்டளைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது கொலை செய்யக் கூடாது. பொய் சொல்லக்கூடாது. தாய் தந்தையைக் கனம் பண்ண வேண்டும். தன்னில் அன்பாய் இருப்பது போல் அயலாரிலும் அன்பாயிருக்க வேண்டும் அத்துடன் முற்றிலும் தேறியவனாக வேண்டு மானால் தன் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்றார். ஆனால் டயானாவோ உடமைகளை விற்கவில்லை. பாவித்த உடைகளையே விற்றார். எப்படி அவர் நித்திய மெய் வாழ்வை வாழ முடியும்?

இயேசுபிரான் இன்னுமொரு விடயத்தை மிக உறுதியாகச் சொல்கிறார். தன் மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு வேறு ஒரு பெண்ணை விவா கம் செய்கிறவன் கற்புநெறி தவறியவன் ஆவான். விவாகரத்துச் செய்த வளை விவாகம் செய்கிறவனும் கற்புநெறி தவறியவனாவான். எனவே டயானா விதிக்கப்பட்ட தர்மக் கோட்பாட்டைத் தாண்டினார் என்பது உண்மையாகின்றது. டொடி ஏற்கனவே திருமணமாகி விவாகரத்து எடுத்தவராயினும் மறு மணத்திற்கு அவருடைய சமயம் அனுமதித்தா லும் இயேசுவின் போதனையின்படி அவர் கற்பு நெறி தவறியவராகவே கணிக்கப்படுகின்றார். இதனால் தான் அவர்கள் இருவரும் மரணித்த பின்பும் உயிரற்றவர்களாக நீதிமன்றங்களிலும் பத்திரிகைகளிலும் நாட்டுத் தலைவர்களிடையேயும் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார் கள். எனவே தான் பிரபாகரன் அவர்கள் கிருஷ்ணரிடம் சொல்கிறார். தர் மம் கெட்டால் மாதர் கற்பும் மாதவர் நோன்பும் கெடும். அதனால் சமூகத்தில் குழப்பமே உருவாகும். எனவே தர்மத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறும் அவர்

## பதம் 21

அப்படிக் குழப்பம் ஏற்பட்டால் யார் அதைச் செய்தார்களோ (குலதர்மக் கோட்பாட்டை அழித்தார்களோ) அவர்களுக்கு நரகமே ஏற்படுகின்றது. அவர்களுடைய முன்னோர்கள் உணவும் நீரும் (பிதிர்க்கள் பிண்டம்) இன்றி வீழ்ச்சியடைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளுரை

பலன்தரு செயல்களின் நீதி நியமங்களுக் கேற்ப குடும்பத்தின் முன்னோரு க்கு உணவும் நீரும் அளிக்கும் கருமத்தைச் செய்யும் அவசியம் உள்ளது. இந்தச் சடங்கு சிவனை வந்தனை செய்வதன் மூலம் நடத்தப்படுகின்றது. ஏனெனில் சிவ னின் பிரசாதம் எல்லாப் பாவங்களி லிருந்தும் ஒருவனை விடுவிக்கக்கூடியது. சில வேளைகளில் நம் முன்னோர்கள் பல தீய செயல்களின் விளைவுகளால் துயரப்பட்டுக் கொண்டிருக்கலாம். சிலவேளைகளில் அவர்களில் சிலர் தூல உடலை யடைய முடியாமல் தங்களது நுண்ணுடல்களுடனேயே பேய்களாய் அலைந்து கொண்டிருக்கலாம் என்கிறார் பகவத்கீதைக்கு உரை எழுதிய தெய்வத்திரு பிரபு பாதா சுவாமிகள்.

சுகமுனிவர் பரீட்சித்து மகா ராஜாவுக்கு உபதேசிக்கையில் அதர்மம் செய்யும் அதாவது பாவம் செய்த மனிதர்களை தென் திசை வேந்தன் இயமதர்மராஜன் தன் பாதாள உலகில் வைத்துத் தண்டிக்கிறார். அத்தகைய தண்டனை பெற்றோர் பேய்களாகவும் பிசாசுகளாகவும் உணவும் நீரும் இன்றி அவதியுடன் அலைகின்றார்கள் என்கிறார்.

பரிசுத்த வேதாகமத்தில் மாற்கு அத்தியாயம் 9, பதம் 20ல் பேயினால் பாதிக்கப்பட்ட இளைஞனிடமிருந்து இயேசுநாதர் பேயை அகற்று வதற்காக குறிப்பிடப்பட்டிருகின்றது.

எனவே தான் அத்தகையவர்களின் அமைதிக்கு சிவனின் பிரசாதம் சடங்கு மூலமாய் அவர்களுக்கு அளிக்கப்பட்டால் அவர்கள் பல்வேறு துன்பமயமான வாழ்க்கை நிலையிலிருந்தும் பேய் பிசாசு முதலிய நிலை களிலிருந்தும் விடுபட்டு நற்கதியை அடைவார்கள் என்றும் இவ்வாறு முன்னோருக்கு உதவுதல் மனித குலப் பண்பாடாகும். குலப்பண் பாட்டை அழித்தவர்களுக்கு இந்தச் சிறப்புக்கள் கிடையாது என்கிறார் பிரபுபாதாசுவாமிகள்.

அப்படியாயின் மரணித்த போராளிகளுக்கும் போர்க்களத்தில் நிற்கும் போராளிகள் தங்கள் முன்னோர்களுக்கு இந்தக் கருமாதிகள் செய்ய வேண்டுமா? அப்படிச் செய்வது சாத்தியமா? இதற்குப் பதில் அளிக்கும் வகையில் பாரதப் போரில் பன்னிரெண்டாம் நாள் வீரமரணமடைந்த வீர அபிமன்யுவின் மரணத்தால் பாதிக்கப்பட்ட தர்மருக்கு வியாசபகவான் பின்வருமாறு பதிலளிக்கின்றார்.

உலகத்தை உருவாக்கி உயிரினங்களையும் உண்டாக்கிய பிரமன் வளர்ந்து கொண்டே போகும் உயிர்ச் சமூகத்தை எவ்வாறு தடுப்பது என்று யோசித்து ஒருவழியும் தோன்றாமல் பிரமனின் உள்ளத்தில் கவலைகள் ஏற்பட்டது. அந்தக் கவலை உலகத்தையே ஓரேயடியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கும் போல் எழுந்ததை அறிந்து கொண்ட உருத்திரரின் வேண்டுகோளுக்காக பிரம்மன் தன் கோபத்தை அடக்கிக் கொள்ளவே அடங்கிய கோபாக்கினி மரணம் என்ற சாந்த உருவங் கொண்டு உலகத்தின் பிறப்பும் இறப்பும் சமமாவதற்கு வியாதியும் விபத்துமாக மக்கள் வாழ்க்கையில் இன்றியமையாத பாகமாக வேலை செய்து வருகின்றது. மரணம் என்பது உலக நன்மைக்காகவே ஏற்பட்டிருக்கின் றது. மரணத்தைக் கண்டு யாரும் துக்கப்படலாகாது. இற ந்தவர்களைக் கண்டு பரிதாபப்படுவதற்குக் காரணமேயில்லை. உயிருடன் இருப்பவர் களைப் பற்றியே துக்கிக்க வேண்டும் என்கிறார்.

ஆனால் இராவணன் இராமன் எய்த அம்புகளால் தாக்குண்டு போர்க் களத்தில் வீழ்ந்து கிடந்த போது இலட்சுமணன் ஓடிச் சென்று பார்த்தான். அவன் கண்ட காட்சி அவனையே அதிர வைத்தது. இராவணனுடைய எலும்புகளில் துளைபடாத இடம் என்று ஒன்றுகூட இல்லை. அதைக் கண்ட இலட்சுமணன் இராமா! உன் பாணத்தின் மகிமை தான் என்ன? இராவணனுடைய உடலில் அப்பு துளைக்காத இடம் என்று ஒன்று கூட இல்லையே! என்று சொன்னான். இராமர் அதற்குப் பதிலாக தம்பி! இராவணனுடைய எலும்புகளில் நீ பார்க்கும் துளைகள் எல்லாம் பாணத்தால் ஏற்பட்டவைகளல்ல. மகனை இழந்த சோகத்தால் இரா வணனின் எலும்புகள் பிளந்து போயிருக்கின்றன. அவனது புத்திர சோகத் தின் சின்னங்களே அத் துளைகள். மகனை இழந்த துன்பம் அவனை எலும்பு வரைத் துளைத்திருக்கின்றது என்று விளக்கினார்.

அது அன்றைய வரலாறு என்று ஒதுக்கி விட முடியுமா? இன்று நம் தமிழ்ஈழ மண்ணில் அதன் மீட்புக்காகப் பிள்ளைகளை மரண தேவனி டம் கையளித்த பெற்றோர்கள் அந்தப் புத்திர சோகத்தின் சின்னங்களையே தாங்கி வாழ்கின்றார்கள். ஆனால் அவர்களின் பிள்ளைகளான போராளிகள் புண்ணிய உலகவாசிகள் என்கிறார் கிருஷ்ண பரமாத்மா.

தன் அன்பு மகன் அபிமன்யுவை இழந்த சோகத்தீயில் வெந்து வேத னைப்பட்ட அர்ச்சுனனுக்கு கிருஷ்ண பரமாத்மா சொல்கின்றார் அப்பனே! இவ்வாறு துக்கித்தல் ஆகாது. போராளிகளாகப் பிறந்தவர்களுக்கு ஆயுத ங்களே உயிர். ஆயுதங்களே மரணம். போரில் பின்வாங்காத வீரர்களு டன் சுவர்க்கமும் நண்பனாக இணைந்தேயிருப்பான். ஏனெனில் வீரர்களு க்கு அகால மரணம் ஏற்படுவது சகசமல்லவா. உன் மகன் புண்ணியம் செய்தவர்களுக்குரிய மேலுலகை அடைந்து விட்டான். போர்க் களத்தில் மரணம் அடைய வேண்டும் என்று வீரர்கள் ஆசைப்படு கின்றார்கள் அல்லவா? அபிமன்யு அடைந்த மரணம் போராளிகளுக்கு விதிக்கப்பட்ட சனாதன இலட்சியம் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நமது மாவீரர்களும் சுவர்க்கம் புகுந்தவர்கள். அவர்கள் ஞானிகள் அவர்களுக்கு தர்ப்பணங்கள் அதாவது கருமாதிகள் செய்ய வேண்டியதில்லை. அவர்கள் நிறைவேற்றிய கடமையே பல்லாயிரக் கணக்கான முன்னோரைக் கடந்தேற்றும் என்று ஸ்ரீமத் பாகவதம் உறுதி யளிக்கின்றது.

ஆனால் சாதாரண மக்களாகிய நாம் நம் முன்னோர்களுக்கு கரு மாதிகள் செய்வது அவசியம். அதற்கு நாம் நமக்கு விதிக்கப்பட்ட தர்மக் கோட் பாட்டை கடைப்பிடித்தல் வேண்டும். எதற்கெடுத்தாலும் சந்தேகமும் ஆராய்ச்சிகளும் செய்யப் புறப்பட்டால் நமக்கு விதிக்கப்பட்ட விதிமுறை களை அழிக்கும் நிலையே ஏற்படும். ஒருமுறை வட இந்தியப் பயணத்தை மேற் கொண்ட சத்தியசாயிபாபா அவர்கள் பத்ரிகா ஆச்சிர மத்தில் இருந்தபோது தமது பக்தர்களை அழைத்து பிரம்ம கபாலத்திற் குச் சென்று உங்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் திதி முதலியவற் றைச் செய்யுங்கள். இறந்த பிறகு ஆவிகள் எங்கே செல்கின்றன எப்படி வாழ்கின்றன அவை நம்மிடருந்து எதை எதிர்பார்க்கின்றன என்றெல் லாம் நிறையக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

அவைகளில் எல்லோருக்கும் நம்பிக்கை இருக்கின்றதோ இல்லையோ ஆனால் ஒன்று நமது முன்னோர்களே நமது பிறப்புக்குக் காரணம். எனவே நாம் நன்றியுணர்ச்சியுடன் அவர்களை நினைவு கூர வேண்டும். இதற்காகத் தான் இந்தத் திதி தர்ப்பணம் முதலியவை. இதன் மூலமா வது நாம் அவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய் வோம் என்கிறார்.

பத்ரிகா ஆசிரம பக்தர்களுக்கு சத்தியசாயி பாபா அவர்கள் வழிகாட்டினார். கனடா வாழ் மக்கள் தங்கள் தந்தையர்களை நினைத்துத் தர்ப்பணம் செய்யும் ஆடிஅமாவாசை தினத்தை நமது கீரிமலையில் செய்தது போல் இங்கு செய்து நாம் நம் முன்னோருக்கு நன்றிக்கடனைச் செய்வ தற்கு வழிகாட்டியவர் புலவர் ஈழத்துச்சிவானந்தன் அவர்கள். ஏனெனில் நமது தர்மம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவே உழைப்பவர் அவர்.

நமது முன்னோர்கள் வாழும் போது அவர்களுக்கு நம்மால் செய்ய முடியாமல் போன உதவிகளை அவர்களின் மரணத்தின் பின்பும் செய்து நன்றியுடையவர்களாக வாழலாம். ஆனால் தர்மம் அழிக்கப்பட்டு அதர் மம் நமது சந்ததியைப் பீடித்துக் கொண்டால் நமது சந்ததியும் பாவ முறுவதுடன் மரணித்த முன்னோரும் கருமாதிகளைப் பெற முடியாது அலைவார்கள். எனவே இப்படிப்பட்ட போரினால் அதர்மம் அழிவது தவிர்க்க முடியாது. எனவே தர்மத்தைக் காப்பாற்றுதலேதலையாய கடமை என்று கிருஷ்ண பரமாத்மாவிடம் எடுத்துரைக்கும் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மேலும் சொல்கிறார்.

## பதம் 22

குடும்பப் பண்பாட்டை அழிப்பவரின் தீய செயல்களால் மனிதப் பண்பாடு களும் குடும்ப நலச் செயல்களும் அழிவுறுகின்றன.

## பொருளுரை

மனிதப் பண்பாடுகளை உடைத்தெறியும் பொறுப்பற்ற சமூகத் தலைவர் கள் சமூகத்தில் குழப்பத்தை உண்டாக்க அதன் பயனால் மக்கள் வாழ்வில் இலட்சியமான இறைவனை மறந்து விடுகின்றனர். இது போன்ற தலைவர்கள் பார்வையற்றவர்களாகவே கருதப்படுகின்றனர். இவர் களைப் பின்பற்றும் மக்கள் நிச்சயமாய்க் குழப்பத்தையே அடைவார்கள். அப்படியான குழப்பத்திற்கு உதாரணமாகத் தமிழகம் மிளிர்வதை இன்று நாம் காணலாம். அங்கே ஆரிய திராவிடப் பிரச்சனைகள் அதனால் பண் பாட்டுக் கோலத்தின் அலங்கோலங்கள் மிகச் சாதாரணமாகவே தன் கை வரிசையைக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

எனவே மக்கள் அருளாளர்களாக வாழவேண்டுமே தவிர பொருளாளர் களாகத் தங்களை ஆக்கிக் கொள்வதன் மூலம் குழப்பத்தையே சந்திக்க நேரிடும். மக்கள் அருளாளர்களாக வேண்டுமாயின் குடும்பப் பண்பாட்டை மதிப்பவர்களாக அதை மீறாத குணமுடையோராக வாழப் பழக வேண் டும். இவர்கள் தான் தன்னை அறிந்திடும் தத்துவஞானிகள். முன்னை வினையின் முடி ச்சை அவிழ்ப்பார்கள் என்று திருமந்திரம் கூறுகின்றது. அந்த தத்துவஞானியாக இன்றும் பிரகாசித்துக் கொண்டிருப்பவர் நமது தேசியத் தலைவர் திரு வே.பிரபாகரன் அவர்கள் என்பதை எவரும் மறு க்க மாட்டார்கள் என்றே நம்புகின்றேன்.

ஏனெனில் அவர் திடீரென அரசியல் அபிலாசைகளால் உரம் பெற்றவர் அல்லர். தன் உள்ளத்தை ஆன்மீகக் கருத்துக்களால் தூய்மையாக்கிய வர். அதனால் தான் தமிழ்கடல் திருமுருக கிருபானந்த வாரியாரின் பக்தி சுவை சொட்டும் பைந்தமிழ் சொற்பொழிவுகளைக் கேட்டு சிறுவன் பிரபா கரன் பக்திப் பரவசமானான் என்று ஈழப்போர் முனையில் புலிகளுடன் என்ற நூல் எடுத்தியம்புகின்றது.

தலைவர் பிரபாகரனின் தந்தையார் திரு வேலுப்பிள்ளை அவர்கள் வல்வெட்டித்துறைச் சிவன் கோவில் தர்மகர்த்தாவாக இருந்த போது ஆண்டு தோறும் வாரியார் சுவாமிகளை அழைப்ப துண்டு. தலைவர் பிரபாகரன் அவர்கள் வாரியார் சுவாமிகள் மீது வைத்த பக்தியை நிரூபிக் கும் வகையில் வாரியாரைக் கண்ட கண்கள் என்ற திரு குமரி அனந்தனின் நூலில் சொல் வதாவது பிரபாகரன் அவர்கள் வாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகளிடம் விபூதி வாங்கும் போது மிகப் பக்தியுடன் வாங்கிப் பூசுவார். சில வேளைகளில் வாரியார் சுவாமிகளையே தனது நெற்றியிலே பூசச் செய்வார். சேட் அணிந்து கூட வாரியார் சுவாமிகள் முன் நிற்க மாட்டார். இவைகள் எல்லாம் தலைவர் பிரபாகரனின் குடும்பப் பண் பாட்டை வெளிக்காட்டி நிற்கும் உண்மைகள். வாரியார் சுவாமி களின் திருக்கரங்களால் தன் நெற்றியில் திருநீறு பூசிக் கொள்வதன் மூலம் தட்டுங்கள் திறக்கப்படும் என்ற இயேசுநாதரின் தத்துவத்திற்கு நல்ல விளக்கம் பெற்றுள்ளார் பிரபாகரன் அவர்கள் என்றே நான் நம்புகின்றேன். வாரியார் சுவாமிகள் சொல்கிறார்.

நெற்றியின் நடுவிடம் சுழிமுனை. ஒன்றை மறந்து நினைவுக்குக் கொண்டு வரமுயலும் போது நாம் நம்மையறியாமலோ அறிந்தோ நெற்றி யில் தட்டுகின்றோமே அந்த இடம் தான் சுழிமுனை. எனவே தட்டுங்கள் திறக்கப்படும் என்றால் சுழிமுனையில் தட்டுங்கள் அஞ்ஞானம் திறக்கப் படும் என்பது பொருள் என்கின்றார்.

முருக பக்தர் வாரியார் சுவாமிகளின் கரம் பட்ட நெற்றியல்லவா நமது தலைவரின் நெற்றி. அங்கே அஞ்ஞானம் இல்லை. அஞ்சாமை நிறைந் திருக்கின்றது. முருகனின் வீரம் முழுமையாக அமைந்திருக்கின்றது. அதனால் தான் தமிழ்ஈழ மக்களை பீடித்திருந்த அடக்கு முறையை அறுத்தெறிய தன் 16வது வயதில் சுடுகலனைக்கையில் ஏந்திய வீர வேங்கையாகப் புறப்பட்டு தனது 21வது வயதில் 1975ம் ஆண்டு பொன்னாலை வரதராசப் பெருமாள் சன்னிதான முன்றலில் தன் சத்திய வேள்விக்கு தன் சுடுகலனால் பிள்ளையார் சுழி போட்டு விட்டுப் புறப்பட்ட தலைவர் பிரபாகரன் தன் பெற்றோர்கள் தனக்கு ஊட்டிய நல்நடத்தை களை தான் சேர்த்த போராளிகளுக்கும் ஊட்டி வழி நடத்துவதனால் தான் இன்று தூய இயக்கமாக விடுதலைப்புலிகள் விளங்குகின்றார்கள். இது தமிழீழத்தின் வெற்றியை மட்டுமல்லாது மனித நேயத்தை மறைத்து நிற்கும் மாயையை கிழித்தெறியும் போராட்டம் என்பதும் மறுக்க முடியாத உண்மையே.

குடும்பப் பண்பாட்டை அழித்ததினால் பிரான்ஸ் நாடு தனது ஏழாவது மன்னர் பதவியைப் பெறுவதற்கு பட்ட கஷ்டங்களைச் சற்றுப் பார்ப்பது இந்த இடத்தில் மிகப் பொருத்தமானதாகும். பிரான்ஸ் நாட்டின் ஆறாம் சார்ள்ஸ் மன்னன் பைத்தியம் பிடித்து மரணிக்கவே அவனு டைய மனைவி இசாபு ஆட்சிக்கு வந்தாள். மன்னர் பதவியை ஏற்க வேண்டிய ஏழாம் சார்ள்ஸ் உற்சாகமற்ற பயந்தவனாக இருந்தமையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய இசாபு ஏழாம் சார்ள்ஸில் அரச இரத்தம் ஓடவில்லை என்று அறிவித்தாள். அதை மக்கள் நம்பினார்கள். குடும்பப் பண்பாடும் ஒழுக்கமும் இல்லாதவள் இசாபு எனினும் மக்கள் ஏற்றுக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் காலப்போக்கில் இசாபு மிக வறுமையில் விழுந்தாள். மாளிகையிலிருந்த மரச் சாமான்களை விற்று கடன் அடைக்க வேண்டிய நிலை இசாபுக்கு ஏற்பட்டது. இதைச் சாதகமாக்கிய இங்கிலாந்தின் ஐந்தாம் கென்றி மன்னன் பிரான்சின் பெரும் பகுதியை தன் ஆட்சிக்குள் கொண்டு வந்தான். ஆங்கிலேயருக்கு அடிமையாகும் முழுமையை நெருங்கிக் கொண்டிருந்த பிரான்ஸ் மக்கள் பாரமுகமாக இருந்தமைக்கு அவர்களின் பயமே காரணம். ஆனால் டாம்மிரி என்ற கிராமத்தில் சாதாரண குடும்பத்தில் ஆடு மேய்ப்பவளாக இருந்த ஜோன். ஆப்.ஆர்க் என்ற 16வது பெண் மணி சென்ட் கதரையின் தேவாலயத்திலிருந்து ஐந்து சிலுவைகள் பொறிக்கப்பட்ட கத்தியோடு இயற்கையாகவே பயந்த சுவாபம் கொண்ட ஏழாம் சார்ள் ஸையும் சில வீரர்களையும் அழைத்துக் கொண்டு ஷியான் கோட்டையை முற்றுகையிட்டு ஆங்கிலேயரை வெற்றி கொண்டு ஆர்லியன்ஸ் நகரை விடுவித்து இளவரசர் ஏழாம் சார்ள்ஸை மன்னராக்கினாள்.

ஆனால் முடிசூடிய இளவரசர் தன் தாயாரின் வழியில் மீண்டும் குழப்பவாதியாகவே செயற்பட்டார். பாரிஸ் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்ற ஜோனின் ஆலோசனையை தாமதப்படுத்தியதால் ஜோன் எடுத்த முயற்சி தோல்வியடைந்ததுடன் சில காட்டிக் கொடுக்கும் துரோகிகளால் பிடித்து விலைபேசி விற்கப்பட்டாள் ஜோன் ஆப் ஆர்க். மத விசாரணை நீதிமன்றத்தில் சூனியக்காரி என குற்றஞ் சாட்டப்பட்ட ஜோன் நீதிமன்றத் தீர்ப்பின்படி 1431ம் ஆண்டு மே மாதம் 30ம் நாள் உயிருடன் எரிக்கப்பட்டாள் இந்தப் புரட்சித் தேவதை பொசுங்கியதற்குக் காரணம் ஆறாம் சார்ள்ஸ் மன்னர் குடும்பத்தின் பண்பாட்டுச் சீரழிவுகளும் தீய செயல்களும் என்பதை மறுப்பதற்கில்லை. இறக்கும் தறுவாயில் ஜோன். ஆப் ஆர்க் சிலுவை ஒன்று கேட்டாள். காரணம் அவள் கர்த்தரின் பிள்ளை. ஆனால் நமது தமிழ் ஈழப் போராளிகள் கழுத்தில் நஞ்சுடன் மரணிக்கின்றார்கள். காரணம் அவர்கள் திருநீலகண்ட னான சிவபெருமானின் பிள்ளைகள். ஜோன் இறந்து 25 ஆண்டுகளுக்குப் பிறகு அவளுக்கெதிராக அளிக்கப்பட்ட தீர்ப்பினை ஏழாம் சார்ள்ஸ் மன்னர் ரத்து செய்தார். ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 1919ம் ஆண்டு 15வது பெனிடிட் எனப் பெயர் கொண்ட போப் பாண்டவர் ஜோன் ஆப் ஆர்க்கை கர்த்தரின் ஆசீர்வாதம் பெற்ற புனிதர்களின் பட்டியலில் சேர்த்தார். அதிலிருந்து வீராங்கனை ஜோன் செயின்ட் ஜோன் என்கிற மத அங்கீகாரத்தினைப் பெற்றாள். அதேபோல் நமது போராளிகளும் நமது சமய அங்கீகாரம் பெற்ற புனிதர்களாக அங்கீகரிக்கப்படல் வேண்டும். அந்த நாளை நாம் எதிர்பார்ப்போம். அதை உருவாக்குவோம்.

ஒவ்வொரு குடும்பப் பண்பாடுகளும் பழக்க வழக்கங்களும் நல்ல சேர்க்கைகளும் ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு எவ்வளவு இன்றியமையாதது என் பதை பிரான்ஸ் நாட்டு வரலாற்றில் பார்த்தோம். எனவே தான் குடும்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டை அழிப்பவர்களின் தீய செயல்களால் மனிதப் பண்பாடுகளும் குடும்ப நலன்களும் அழிவுறுகின்றன என்று கிருஷ்ண பரமாத்மாவிடம் எடுத்துரைக்கும் பிரபாகரன் அவர்கள்.

## பதம் 23

*மக்களைக் காக்கும் கிருஷ்ணரே! மனிதப் பண்பாட்டைக் கெடுப்பவர். நரகத்தில் சதா வாழ்வதாக பெரியோர்கள் வாயிலாகக் கேட்டுள்ளேன்.*

## பொருளுரை

நரகம் என்று சொன்னவுடன் நமது பூமிக்குக் கீழ் இயம தர்மராஜனின் ஆட்சியில் இருக்கும் நரகலோகம் அங்கே பூவுலகவாசிகள் செய்த பாவங்களுக்குக் கொடுக்கும் பயங்கரமான தண்டனைகளும் நமது மனங்களில் தோன்றுவது இயற்கையே. ஏனெனில் இந்து சமய மூல நூலான ஸ்ரீமத் பாகவதம் நரகலோக வர்ணனைகளை அவ்வாறே எடுத்தியம்புகின்றது. அதேபோல் கிறிஸ்தவர்களின் சமய நூலான பரிசுத்த வேதாகமமும்

கர்த்தர் ஒரு புதிய காரியத்தை நேரிடச் செய்ததால் பூமி தன் வாயைத் திறந்து இவர்கள் உயிரோடு பாதாளத்தில் இறங்கத்தக்கதாகவும் இவர்களையும் இவர்களுக்குண்டான யாவையும் விழுங்கிப் போட்டதேயானால் இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்பதை அறிந்து கொள்வீர்கள் என்றார் (எண்ணாகமம் 16. 30)

எனவே பாதாள உலகமே நரகலோகம் என பரிசுத்த வேதாகமும் ஏற்புரை தருகின்றது. அதனால் தான் நம் முன்னோர்கள் வானத்தை நோக்கி அந்த மேல் உலகம் தான் கடவுள் வாழும் உலகம் என்றார்கள். அந்த புண்ணிய உலகிலிருந்து நமது பூவுலகைப் பார்க்கும் போது இதுவே நமது சமயங்கள் குறிப்பிடும் பாதாள உலகமான நரகலோகமாகக் காட்சி தரும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இங்கே பிரபாகரன் அவர்கள் தனது வாதத்தைப் பெரியோர் களிடமிருந்து கேட்டறிந்தவற்றின் மூலம் ஆதாரப்படுத்துகின்றார். இதுவே உண்மையாக அறிவைப் பெறும் வழி. உண்மையான அறிவில் ஏற்கனவே நிலை பெற்ற நம் முன்னோர்களால் உதவப் பெறுவதன் மூலமே உண்மையான நிலையினை ஒருவன் அடைய முடியும். இப்படியான வழிகாட்டலே தலைவர் பிரபாகரன் அவர்களை விடுதலை வேள்விக்கு விரைந்து செல்ல வழிவகுத்தது என்பதை 1984ம் ஆண்டு இந்தியா டுடே என்ற ஆங்கில சஞ்சிகைக்கு அவர் அளித்த செவ்வி வெளிக்காட்டுகின்றது. அவர் சொல்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பள்ளிச் சிறுவனாக இருந்த போது 1958ம் ஆண்டின் இனக்கலவரங் களில் நிகழ்ந்த பயங்கரமான சம்பவங்கள் என் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தின. சிங்கள இனவெறியர்களால் எம் மக்கள் ஈவிரக்கமில்லாது குரூரமாகக் கொல்லப்பட்ட நெஞ்சையுருக்கும் சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். எங்கள் குடும்பத்திற்குத் தெரிந்த ஒரு விதவைத் தாயை நான் ஒருமுறை சந்தித்த போது இந்த இனவெறியாட்டத்தால் தனக்கு நேர்ந்த துயரமான அனுபவத்தை என்னிடம் சொன்னார். இனக் கலவரத்தின் போது சிங்களக் காடையர்கள் கொழும்பிலிருந்த அவர் வீட்டைத் தாக்கினார்கள். அவரது வீட்டிற்குத் தீவைத்து அவருடைய கணவரையும் குரூரமாகக் கொலை செய்தனர். அவரும் அவரது பிள்ளைகளும் பலத்த எரிகாயங்களுடன் தப்பினார்கள். அவரது உடலில் காணப்பட்ட எரிகாயத் தழும்புகளைப் பார்த்த போது நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். சிறு குழந்தைகளைக் கொதிக்கும் தாருக்குள் உயிருடன் வீசிக் கொன்ற கோரச் சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். அனாதரவான அப்பாவித் தமிழர்கள் எவ்வாறெல்லாம் கொடூரமான தாக்கு தலுக்கு இலக்காகினர் என்பதையெல்லாம் கேட்கும் போது என் மக்கள் மீது ஆழ்ந்த அனுதாபமும் அன்பும் ஏற்பட்டன. இந்த இனவெறி அமை ப்பின் பிடிக்குள் இருந்து எம் மக்களை மீட்டெடுக்க வேண்டும் என்ற பெரும் உந்துதல் என்னிடம் தோன்றியது. நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கெதிராக ஆயுத வலிமையைப் பிரயோகிக்கும் இந்த அமைப் பினை ஆயுதப் போராட்டத்தின் மூலமே எதிர் கொள்ள முடியும் என்று நான் ஆழமாக உணர்ந்தேன் என்கிறார்.

எப்படி ஒரு விதவைத் தாய் மூலம் சிங்களவர்களின் கொடுமைகளைக் கேட்டு போர்க்களம் புகுந்தாரோ அந்த வகையிலேயே சமுதாயத்தில் பண் பாடுகளைக் கெடுக்கும் மனிதர்கள் சதா நரகத்தில் வாழ்வதாகத் தான் பெரியோர்கள் மூலம் அறிந்ததையும் இங்கே பரமாத்மாவிடம் ஒப்பு விக்கின்றார்.

நமது உலகம் புண்ணிய பாவங்களால் கட்டுண்டு கிடக்கின்றது. நரக லோகம் இங்கேயே இருக்கின்றது என்பதை நாம் முதலில் அறிந்திருந்தல் அவசியம். அதன் மூலமே நாம் ஒவ்வொருவரும் இங்கே அநியாயங் களையும் அக் கிரமங்களையும் விலக்கி அன்பு மயமான உலகை உருவாக்க முடியும். நமது பூமியே நரக லோகம் என்பதை நிலை நிறுத்த எவ்வளவோ சான்றுகள் இங்கே உண்டு. அதில் சிலவற்றைப் பார்ப்பது அதற்குப் பயனுடைய தாக இருக்கும் என்றே நம்பு கின்றேன்.

தான் ஒரு சிறந்த போராளியாக வேண்டும் என்று எண்ணிய கர்ணன் போர்க்கலைத் தலைவனான பரசுராமர் பிராமணன் அல்லாத தனக்கு பயிற்சியளிக்க மாட்டார் என்று அறிந்து தான் பிராமணர் என்று பொய் சொல்லி மகேந்திரமலையில் பயிற்சி பெற்றான். ஒருநாள் தனியாகப் பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த போது கர்ணனின் அம்பு பட்டு ஒரு பசு துடியாய்த் துடித்து மரணித்தது. பொய் சொல் லக்கூடாது, கொலை செய்யக் கூடாது என்ற தனது குடும்பப் பண்பாட்டை கர்ணன் மீறினான் அதற்கான தண்டனை கர்ணனின் தேர் மண்ணில் புதைந்தது. அம்புகள் அவன் உடலைத் துளைத்தது. அவன் உயிர் பிரிந்தது. அந்த இடமே கர்ணனுக்கு நரகம்.

நாட்டையும் நகரத்தையும் நல்ல மக்களையும் பொன்னையும் மணியையும் விலையுயர்ந்த உடைகளையும் தூசாக எண்ணித் துறந்து உடுத்த உடையுடன் கானகம் சென்ற குணவதி சீதா பிராட்டியார் ஒரு மானை விரும்பினாள். கணவனுக்குக் கட்டளையிடாத அந்தக் கற்பிற்கரசி இந்த மானைப் பிடித்துக் கொடு என்று ஏவினாள். கண்ணை இமை காத்தது போல் நின்ற பரம பக்தனான இலட்சுமணனை கொடு மொழியால் பேசினாள். இந்தப் பாவத்தின் தீர்ப்பினை இலங்கையில் அசோகவனத்தில் சிறையில் இருந்ததின் மூலமும் இராமனால் நெருப்பில் இறக்கப்பட்டதன் மூலமும் பெற்றாள். எனவே சீதா பிராட்டிக்கு இலங்கை அசோகவனமும் நெருப்புமே நரகம்.

வரலாற்று ஏடுகளில் இன்றும் எழில் அரசியாக, அழகின் சிகரமாக விளங்கிக் கொண்டிருக்கும் கிளியோப்பட்ரா எகிப்த்து நாட்டின் அரசியாகத் தன்னை ஆக்கிக் கொள்வதற்காக யூலியசீசரை மயக்கினாள். தனது மூத்த சகோதரனை நீரில் மூழ்கடித்து மரணிக்கச் செய்தாள். இளைய சகோதரனான டயனீசிடலாமியை நஞ்சு வைத்துக் கொலை செய்தாள். தனது சகோதரியான அரிங்கினோவையும் கொலை செய்தாள். தான் மட்டுமே அரசாள வேண்டும் என்று தன் அழகையே ஆயுதமாக்கிய கிளியோப்பட்ரோ கி.மு.44ல் யூலியசீசர் விரோதிகளால் கொலை செய்யப்பட்டதும் ரோமாபுரி இராசாவாக வந்த மார்க் அண்டோனியை மயக்கினாள். மார்க் கண்டோனியும் விரோதிகளால் பழி வாங்கப்படவே கிளியோப்பட்ரா தன்னை தன் உடலை நஞ்சு நிறைந்த பூநாகத்தை முத்தமிட வைத்து மரணித்தாள். அழகின் வலிமையால் சொந்த சகோதரங்களையே கொலை செய்த கிளியோப்பட்ராவுக்கு நச்சுப் பாம்பே நரகமாகியது.

இதே போன்று இலங்கையைச் சிங்கள மக்கள் தான் ஆளவேண்டும் என்ற எண்ணங் கொண்ட அன்றைய இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா 1956ல் சிங்களம் மட்டும் என்ற சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார். அதை எதிர்த்து 1956ம் ஆண்டு யூலை மாதம் 5ம்திகதி காலிமுகத்திடலில் அகிம்சைவழியில் சத்தியாக்கிரகம் செய்த தமிழர்கள் மேல் விழுந்த அடி முதலாவது இனக்கலவரமாக வெடித்தது. அடுத்து 1958ல் ஏற்பட்டது. இது பற்றி இந்தப் பொருளுரையின் தொடக்கத்தில் தலைவர் பிரபாகரன் அவர்கள் வாய்மொழிச் செய்தியாக அறிந்து விட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு பெரும் கொடுமைகளின் பொறுப்பாளி பிரதமர் பண்டாரநாயக்கா தான் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். தமிழ்மக்களின் வேதனை கள் 1959ம் ஆண்டில் பண்டாரநாயக்காவுக்கு தீர்ப்பாக வழங்கப்பட்டது. பிரதமர் பண்டாரநாயக்கா தான் வணங்கிய புத்தபிக்குவாலேயே அவரது வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டார். தேரோவை காவலாளி சுட்டுக் கொன் றான். தமிழனே புத்தபிக்கு வேடத்தில் சுட்டதாக கதைகள் திரிக்கப்பட்டது. எது எப்படியிருப்பினும் பண்டாரநாயக்காவுக்கு புத்தபிக்குவே நரகம். தமிழர்க்கு அவர் செய்த பாவங்களே காரணம்.

எனவே சமுதாய நிறுவனத்தில் மனிதர்கள் தங்கள் பண்பாட்டை மீறாத வகையில் வாழப் பழக வேண்டும். தெரியாமல் பாவங்கள் செய்தால் கூட அதற் கான பிராயச்சித்தம் செய்யும் சடங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கு நாம் பாவம் செய்து விட்டோம் என்பதை உயிர் வாழிகள் உணர வேண்டும். பிராயச்சித்தம் செய்கின்றவர்கள் தெளிந்த ஞானத்துடன் செய்ய வேண்டும். ஒழுக்க நியமங்களின்படி நடந்து கொள் ளும் மனிதர்களே மெல்ல மெல்ல ஞானத்தை அடைய முடியும். அதை விடுத்து தமிழ்மக்களின் விலை மதிக்க முடியாத யாழ். நூலகத்தையும் நவீனசந்தைக் கட்டிடம், வீடுகளையும் நெருப் பிட்டுச் சாம்பலாக்கி விட்டு அதன் மூலம் சிங்கள மக்களுக்கு ஏதோ புண்ணியத்தையும் புகழையும் தேடிக் கொடுத்து விட்டதாகப் பவனிவந்த சிங்களத் தலைவர் களான காமினி திஸநாயக்கா, லலித்அத்துலக்முதலி போன்றோரும் அவர்களைப் போன்று இன்னும் நடைபயிலும் தலைவர்களும் நரகலோகவாசிகளே. எனவே மனிதன் பண்பாடுகளைக் கெடுக்காமல் வாழ வேண்டும். அதன் மூலமே உலகம் புண்ணிய பூமியாக முடியும் என்ற தனது நம்பிக்கையை பரமாத்மாவிடம் தெரிவிக்கும் பிரபாகரன் அவர்கள்.

## பதம் 24

*அந்தோ! அரச போகத்திற்கு ஆசைப்பட்டு அணைக்க வேண்டிய சுற்றத்தை சிங்களவர்களுடன் சேர்ந்து அழிக்கப் புறப்பட்டார்களே நம் எதிரிகள் அவர்கள் பெரும் பாவத்திற்கல்லவா தயாராகி விட்டார்கள்.*

## பொருளுரை

சுயநல நோக்கத்தால் தூண்டப்பட்டவர்கள். ஒருநாட்டின் அரச போகத்தின் அனுபவிப்பாளர்களாக தாங்களே அமர வேண்டும் என்ற பேராசையால் சொந்த உறவுகளையும் தாங்கள் சார்ந்து வாழும் சமூகத்தையும் கொலை செய்வதும், அழிப்பதும் வரலாற்று நிகழ்வுகளில் நிரம்பிக் கிடக்கின்றது. அத்தகைய சுய நலப் போக்கிற்கு தமிழ்ஈழ மக்களாகிய நாம் துணை போகக் கூடாது என்ற தெளிவான சிந்தனையை பிரபாகரன் அவர்களின் இந்த எடுத்தியம்பலில் நாம் காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது சுற்றத்தாரை அழித்துத் தான் நாம் அரச போகத்தைப் பெற வேண்டுமாயின் அப்படியொரு பாவம் நமக்குத் தேவையில்லை என்று சொல்வதன் மூலம் சிங்கள மக்களை மனிதநேயத்தால் மதிக்கின்ற மாண் பினையும் நாம் பார்க்க முடிகிறது. இங்கே தான் கௌதம புத்தருக்கும் பிரபாகரன் அவர்களுக்குமிடையில் அபிப்பிராயபேதம் தெரிகிறது. எப்படி யெனில்

புத்தபிரான் தமது ஐந்து சீடர்களுக்குச் செய்த உபதேசம் அநாத்ம லக்கணசூத்திரம் எனப் பெயர் பெற்று விளங்குகிறது. அதில் தமது சீடர் களிடம் புத்தபிரான்

சீடர்களே! இந்த உருவமாகிய உடல் ஆன்மாவற்றது. உடலே ஆன்மா வாயிருக்குமாயின் அது நோய் முதலில் உபாதைகளுக்கு உட்பட வேண்டிய அவசியமில்லை. என் உடலில் இப்படியிருக்கக் கூடாது அல்லது இப்படியிருக்கலாகாது என்று நாம் கட்டுப்பாடு செய்யக் கூடிய தாயிருக்கும். அத்தகைய கட்டுப்பாடுகள் செய்ய முடியாமல் நாமே வழிப் படுத்த முடியாமல் இருப்பதால் சரீரம் ஆன்மாவற்றது என்கிறார்.

எனவே தான் மனித உடல்களை அழிப்பதால் பாவங்கள் தங்களை அணு காது என்று புத்தசமயவாதிகளான சிங்கள அரசினர் நினைத்துச் செயற் படுகின்றார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது. ஆனால் மனித உடல்கள் ஆன்மா வல்ல அவை ஆன்மாக்கள் வாழும் ஆலயம் என்ப தில் பிரபாகரன் அவர்கள் மிகத் தெளிவாகவேயிருக்கின்றார். மனிதர்கள் வாழும் இல்லங்கள் எவ்வளவு பாதுகாப்பாக பேணப்படுகின்றதோ அதே போல் ஆன்மாக்கள் வாழும் உடல்களையும் பாதுகாக்க வேண்டும். அந்த இலட்சிய நோக்கம் கொண்டவர்களே அரச போகத்தில் அமர வேண்டும். அதை விடுத்து உயிர்களை அழித்து விட்டு உயர்வாக வாழலாம் என்பது பெரும் பாவமும். அதுவே அரசியல் வனாந்தரமும் ஆகும். வனாந்தரத்தையே வரலாறாக்கியவர் முஹம்மது நபி அவர்கள்.

உலகத்தின் பெரும் சமயங்களில் இஸ்லாமிய சமயத்திற்கென்று தனிப் பட்ட சிறப்புக்கள் உண்டு. அக் காலத்தில் உலகத்தின் பின்தங்கிய பகுதி யாக இருந்த தென்அராபிய நாட்டிலுள்ள மக்கா என்னும் பேரூரில் கி.பி.570 ஆண்டில் முகம்மதுநபி அவர்கள் பிறந்தார். எளிமையான வாழ்க்கைப் பிடியில் துவங்கிய அவரது வாழ்க்கை உலகப்பெரும் சமயத்தை நிறுவித் தந்தமைக்குக் காரணம் அவர் வெறும் சமய போத கராக மட்டுமல்லாது நல்ல அரசியல் தலைவருமாக விளங்கியமையே.

தனது 25வயதில் கதீஜா என்ற விதவைச் சீமாட்டியை மணந்த முகம் மது நபி அவர்கள் தனது 40வது வயதில் உண்மையான ஏக இறை வன் அல்லாஹ் தன்னுடன் பேசியதாக அறிவித்தார். சத்தியத்தைத் தேர்ந்தெடுக்க தன்னைத் தேர்ந்தெடுத்தார் என்றும் நம்பினார். 613ம் ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலிருந்து பகிரங்கப் போதனைகள் புரிந்தார். அவரின் கொள்கை வழியில் மக்கள் பெருகவே மக்காவின் அதிகார வர்க்கத்தினர் அபாயகரத் தொல்லைகள் கொடுத்தனர். ஆனால் முகம்மதுநபி அவர்களோ அவர்களை அழிக்கவோ துன்புறுத்தவோ விரும்பவில்லை. மக்காவை விட்டு வெளியேறி மக்காவின் வடக்கே சுமார் நானூறு கல் தொலைவிலுள்ள மதீனா நகர் சேர்ந்தார். அங்கு தான் அவர் கணிசமான அரசியல் பதவிகளைப் பெற்றார்.

அங்கே படவீகள் என்னும் நாடோடி கோத்திரத்தார் வெறிகொண்டு வீரத்தோடு போராடுபவர்கள் என்று பெயர் பெற்றிருந்தனர். ஆனால் ஒற்றுமையின்றி ஒருவரையொருவர் ஒழிக்கும் போர்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிறு தொகையினர் நாடோடி வாழ்க்கையின்றி நிலையாக வேளாண்மையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வடபகுதி அரசுகளின் பெரிய படைகளுக்கு இணையாக இந்தப் படவீகள் இருக்கவில்லை. ஆனால் வரலாற்றில் முதல் முறையாக முஹம்மது நபியவர்களால் ஐக்கியப்படுத்தப்பட்டு உண்மையான ஒரே இறைவன் மீது கொண்ட அரிய நம்பிக்கையால் உந்தப்பட்ட இந்த சிறு அரபுப்படைகள் மனித வரலாற்றில் பேராச்சரியம் தரத்தக்க வெற்றித் தொடர்களில் தங்களை ஈடுபடுத்தினர். மக்காவுக்கும் மதீனாவுக்கும் ஏற்பட்ட போரில் 630ம் ஆண்டில் முஹம்மது நபியவர்கள் மாபெரும் வெற்றி பெற்றார். மனிதர்களை அழித்து வாழ்வதை விட அணைத்து வாழவைக்க வேண்டும் என்பதற்கு முஹம்மது நபியின் வரலாறு மிகவும் எடுத்துக்காட்டு. ஆனால் அரசபோக அனுபவிப்புக்களின் ஆசையால் அழிந்தவர்களையும் நாம் இங்கே நினைத்துப் பார்ப்பது நல்லது.

ஜேர்மனிய அரச போக அனுபவிப்புக்கள் தன்னிடமே இருக்க வேண்டும் என்று ஆவல் கொண்டு 1923ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஜேர்மனிய அரசைக் கவிழ்க்க முயன்று தோல்வி கண்டதோடு ஒரு வருடச் சிறைவாசத்தையும் அனுபவித்த ஹிட்லர் 1928ம் ஆண்டில் ஜேர்மனியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, ஆட்சியிலிருந்த கட்சியின் மேல் மக்களுக்கு வெறுப்பு ஏற்படுத்த ஹிட்லர் தனது 44ம் வயதில் ஜேர்மனியின் தலைவரானார். யூதமக்களையும் வெளிநாட்டவர்களையும் கொலை செய்வதே கொள்கையாகக் கொண்ட ஹிட்லர் படுகொலை முகாம் களையும் நச்சுவாயுக்கூடங்களையும் திறந்தான். முடிவு 1945ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம்திகதி பேர்லின் நகரில் தற்கொலை செய்யும் நிலையையே ஹிட்லருக்கு ஏற்படுத்தியது. அடுத்தது

புகழ்மிகு பிரான்ஸ் தளபதியும் பேரரசருமான முதலாம் நெப்போலியன் பொனபாட் பல நாடுகளை வெற்றி கொண்டவர். நெப்போலியன் சட்டத் தொகுப்பு எனப்படும் புகழ்மிகு பிரான்ஸ் சட்ட நூலில் பிறப்பின் அடிப்படையில் எவர்க்கும் சிறப்புரிமைகள் இல்லை. சட்டத்தின் முன் அனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் சமம் என்று கூறியதன் மூலம் பிரான்ஸ் வழக்கறிஞர்களாலும் மக்களாலும் ஒதுக்கப்பட்டவர். மனிதர்கள் மேல் இவ்வளவு அபரீதமான பற்று தல் கொண்ட நெப்போலியன் ஸ்பெயின் நாட்டிற்குச் சொந்தமான லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கைப்பற்றினான். ஆனால் வடஅமெ ரிக்காவிலுள்ள பிரென்சுப்பகுதிகளை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொண் டிருந்தமையால் அதை தான் விடுவிக்க முடியாமையை உணர்ந்து தனக்கு ஏற்பட்ட பண நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் 1803ம் ஆண்டு லத்தீன் அமெரிக்காவில் இருந்த ஸ்பெயினுக்குச் சொந்த மான லூயிசியானாவை அமெரிக்காவுக்கு விற்று விட்டான். அதனால் தான் அமெரிக்கா ஒரு கண்டமாகியது என்பதும் உண்மையே.

அதேபோல் இலங்கையில் நடக்கும் உள் நாட்டுப் போரில் தாங்களே அரச போக சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்ட சிங்கள அரசியல் வாதிகளின் தவறான போக்கினால் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகள் காலப் போக்கில் இலங்கையும் விலை போய் விடுமோ என்று எண்ணுவதில் தவறில்லையே. ஆகவே தான் அரசபோக அனு பவிப்புக்காக மனிதர்களை அழிப்பது பெரும் தவறும் பாவமும் என்று கூறுகின்றார் தலைவர் பிரபாகரன் அவர்கள். இதற்குப் புத்தபிரானின் பூர்வீக வரலாறு உதாரணமாகின்றது.

கௌதம புத்தர் சித்தார்த்தர் என்று இயற்பெயர் கொண்டதோடு சாக்கிய முனி யென்றும் அழைக்கப்பட்டவர். இமய மலைச்சாரலில் சாக விருட் சங்கள் (தேக்குமரங்கள்) அடர்ந்த பிரதேசத்தில் வாழ்ந்ததால் சாக்கியர்கள் என்று அழை க்கப்பட்டார்கள். இவர்கள் தங்களைச் சூரிய குலத் தோன்றல்கள் என்றே கூறிக் கொண்டார்கள். இவர்கள் கபிலவஸ்த்து வில் குடியேறிய வரலாற்றை புலவர் புத்தகோஷாச்சாரியர் தீர்க்க நியாயம் என்ற பௌத்த நூலில் பின்வருமாறு கூறுகின்றார்.

கோசலத்தையாண்ட இசவாகு மன்னனுக்கு நான்கு ஆண்களும் ஐந்து பெண்களும் பிறந்தனர். மனைவி இறந்து போகவே இரண்டாந்தாரமாக அழகியொருத்தியை மணந்தார். ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. அந்தச் சந்தோச மிகுதி என்ன வேண்டுமானாலும் கேள் நான் தருகிறேன் என்று இளம் மனைவியிடம் உறுதியளிக்க வைத்தது. மனைவி கேட்டாள் எனது மகனுக்கே ஆட்சியுரிமையைக் கொடுக்க வேண்டும் என்று. தயங்கினான் மன்னன். தான் அளித்த வாக்குறுதியை மீற முடியாதவனாய் தனது முதற் தாரத்து பிள்ளைகளிடம் சொன்னான். இந்த ஆட்சியை தம்பியிடம் கொடுக்கப் போகிறேன். நீங்கள் உங்களு க்குத் தேவையான பணியாட்களையும் படைகளையும் கொண்டு வெளி யேறுங்கள் என்றான். தந்தை சொல் தட்டாத பிள்ளைகள் காடேகி கபில முனிவரின் ஆச்சிரமத்தை அடைந்து அவருடைய ஆசீர்வாதத்தோடு புதிய நகரம் அமைத்தார்கள். அதுவே கபிலவஸ்த்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இறந்த பின் தங்கள் தம்பியை போரில் வென்று மீண்டும் கோச லத்தைக் கைப்பற்றுங்கள் என்ற தந்தையின் வேண்டுகோளை அந்த இராஜபுத்திரர்கள் ஏற்கவில்லை. காரணம் அரச போகத்திற்காக தன் சகோத ரனையும் தங்கள் சுற்றத்தையும் அழிக்க அவர்கள் விரும்பவில்லை. ஆனால் தங்கள் இரத்த உறவுக்குள் திருமணம் செய்ய விரும்பிய அவர்கள் செய்வதறியாது ஒரு புதிய பண்பாட்டை உருவாக்கினார்கள். அதாவது தங்களது ஐந்து சகோதரிகளில் மூத்தவளைத் தாயாகவும் மிகுதி நால்வரையும் நான்கு பேரும் மணந்தார்கள். இந்த மரபுவழியில் வந்தவரே கபிலவஸ்த்துவுக்கு அரச னாகவிருந்த சுத்தோதனன். அவரு டைய புதல்வரே புத்தபிரான்.

அரச போகத்திற்காக ஆசைப்பட்டு மனிதர்களை அழிப்பதிலும் பார்க்க தங்கள் சகோதரிகளை மணம் புரிவது பாதகமில்லை என்ற இலட்சிய இராஜாவின் மரபு வழியில் வந்த புத்தபிரானை அரச சமயத் தலைவராகப் போற்றி வணங்கும் சிங்கள அரசினர் தமிழர்களை அழிப்பது மிகக் கொடுமையே. இதை விடப் பாவம் சிங்கள அரசினர்க்கும் அவர்களின் அடிவருடிகளான தமிழ்க் குழுக்களுக்கும் வேறு ஒன்றும் இல்லை. எனவே தான் பிரபாகரன் அவர்கள் சிங்கள அரசினரைப் பார்த்து அரச போகத்திற்கு ஆசைப்பட்டு அணைக்க வேண்டிய சுற்றத்தாரான தமிழர் களை சிங்களப் படைகள் அழிக்கின்றனர். அப்படிப்பட்ட பாவத்தை செய் கின்றார்களே என்று ஆதங்கப்படுவதால்

## பதம் 25

சிங்கள அரசபடைகளுடன் போர் புரிவதை விட ஆயுதமின்றியும் எதிர்ப்பு இல்லாமலும் அவர்களை நான் அழிப்பதையே சிறந்ததாகக் கருது கிறேன்.

## பொருளுரை

அரச போர் நெறிகளின்படி ஆயுதமற்ற போரை விரும்பாத எதிரியைக் கூடத் தாக்கக்கூடாது என்பதே வழக்கம். ஒருநாட்டு அரசபடைகள் அந்த நாட்டு மக்களை அரச விசுவாசிகள், விசுவாசமற்றவர்கள் என்ற பாகுபாடு காட்டாது பாதுகாக்க வேண்டும். அதனால் தான் அப்படைகளைப் பாது காப்புப்படைகள் என்று மக்கள் அழைக்கின்றார்கள். ஆனால் சிங்கள அரச படைகள் பாதுகாப்பு என்ற போர்வைக்குள் பயங்கரவாதிகளாகவே செயற் படுக்கின்றார்கள் என்பதற்கு தமிழீழத்தின் அழிவுகளும் தமிழ்மாதர்கள் மேல் அவர்கள் பிரயோகிக்கும் பாலியல் வன்முறைகளும் சாட்சியாகக் காட்சி தருகின்றது.

அந்த அசுரர்களை அழிக்க வேண்டியது பிரபாகரன் அவர்களின் ஆன் மீகக் கடமை. ஆனால் அவரோ போர் புரியாமலும் ஆயுதமின்றியும் அந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் படைகளை அழிக்க விரும்புகின்றார். இது சாத்தியமா? இது சாத்தியம் என்கிறது அவருடைய சமயம். சிவபக்தரான பிரபாகரன் அவர்களின் கழுத்தில் இருக்கும் நஞ்சு அந்தத் திருநீலகண்ட னையே நித்தமும் நினைவில் நிறுத்திக் காட்டுகின்றது. மூன்று அசுரர்கள் தங்கள் தவத்தின் பலத் தினால் மூன்று நகரங்களை அமைத்து அங்கிருந்து கொண்டு தேவர்களைத் துன்புறுத்தினார்கள். அந்த மூன்று நகரங்களையும் அழித்துத் தேவர்களைக் காப்பாற்றினார் சிவபெருமான். அந்த வரலாற்றின் அடிப் படையில் சிங்கள அரசபடைகளை அழித்து தமிழர்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை பிரபாகரன் அவர்களுக்கு உண்டு. ஆனால் அவர் அதைச் செய்ய விரும்பவில்லை. அவர் ஒரு போராளியாக இருந்து கொண்டு எதிரிகளோடு போர் செய்ய மாட்டேன் என்று மறுப்பது அவருடைய புரட்சிகர சிந்தனையையே காட்டுகின்றது. எதிர்த்தரப்பினர் எவ்வளவு போர் ஆயுதங்களுடன் இருக்கின்றார்கள் என்பதைக் கூட அவர் பொருட்படுத்தவில்லை. காரணம் எல்லாம் வல்ல பரம் பொருளோடு கூடவே இருப்பதால் அவருடைய மனம் மென்மையானதாகவும் ஞானத்தை நாடிச் செல்வதாகவும் காணப்படுகின்றது. ஏனெனில் சிவபெருமான் அழித்த திரிபுரங்கள் மக்கள் மனங்களிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை திருமூலர் மூலம் அறிந்தவர் அவர் எப்படியெனில்

அப்பணி செஞ்சடை
ஆதி புராதனன்
முப்புரம் சென்றனன்
என்பார்கள் மூடர்கள்
முப்புரமாவது
மும்மலகாரியம்
அப்புரம் எய்தமை
யாரறிவாரே!

அதாவது சிவந்த சடை மீது கங்கையாற்றைச் சூடிக் கொண்டு எல்லாவற்றிற்கும் பழைமையான முதற் காரணமாகிய சிவபெருமானின் திருவருளை நாடினால் அந்தத் திருவருளினால் கொடுமையாளர்களின் மனங்களில் அழுக்காக அமைந்திருக்கும் ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று கோட்டைகளும் தகர்த்தெறியப்படும். அதன்மூலம் மனித மனங்கள் பேரின்பத்தில் சதா நிலைத்து நிற்கும். இதை ஆயுதத்தால் நிறைவு செய்து விட முடியாது. என்பதில் அவர் ஆழமான நம்பிக்கை கொண்டுள்ளார். எனவே தான் ஆயுதமில்லாமலும் எதிர்ப்பு இல்லாமலும் எதிரிகளை அழிக்க வேண்டும் என்று விரும்புகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள அரசபடைகள் என்று கூறுவதன் மூலம் சிங்கள மக்கள் மீது கொண்ட பரிவு அங்கு தெரிவதையும் காண முடிகிறது. தமிழ் ஈழத்தைத் தமிழர்கள் ஆள வேண்டும் தரணியை மனிதர்கள் ஆள வேண்டும் என்ற மகோன்னதமான சிந்தனை தலைவர் பிரபாகரன் அவர்களிடம் இருப்பதை அவர் தமது இயக்கப் போராளிகளுக்கு சூட்டியிருக்கும் பெயர்கள் எடுத்துக் காட்டுவதை நாம் கண்டு கொண்டிருக்கின்றோம். 21ம் நூற் றாண்டில் உலக மக்கள் சமரச சமயம் என்ற கோட்பாட்டினுள் அன்பு அரவணைப்பு புரிந்துணர்வு போட்டி, பொறாமைகளற்ற சமுதாய அமைப்பாக மாறுவதற்கு அவருடைய சிந்தனைகள் நிச்சயம் வழிவகுக்கும். எனவே தான் தங்களின் சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வருமானத்தையே எதிர்பார்த்து சிங்கள அரசபடையில் சேர்ந்துள்ளோருடன் போரிடுவதால் அழிவையே தேடிக் கொள்ள வேண்டி வரும். அப்படிப்பட்ட போர் தமக்குத் தேவையில்லை என்கிறார். அழிவின் கொடுமையால் ஆன்மீகத்தின் பக்கம் திரும்பிய அரசர் அசோகரின் வரலாறு இதற்கு மிகப் பொருத்தமானதும் கூட அதாவது

இந்திய வரலாற்றில் மிகப்புகழ் பெற்ற அரசராக விளங்கிய மௌரிய மரபில் மூன்றாவது அரசர் சந்திர குப்த மௌரியரின் பேரன் அசோகர் கி.மு. 273ல் வட இந்தியாவின் பெரும் பகுதிகளை வென்று ஆட்சிபீடம் ஏறியவர். அவரது ஆட்சியின் எட்டாம் ஆண்டில் இந்தியாவின் கிழக்குக் கரையில் அமைந்திருந்த கலிங்க நாட்டின் மீது (இன்றைய ஒரிசா மாநிலம்) போர் தொடுத்து வெற்றி கண்டார். அந்தப் போரில் ஒரு லட்சம் பேர் மடிந்தனர். அதற்கும் அதிகமானோர் காயமுற்றனர். இதனால் அதிர்ச்சியும் இரக்கமும் கொண்ட அசோகர் இந்தியா முழுவதும் வெற்றி கொள்ள வேண்டும் என்ற எண் ணத்தைக் கைவிட்டதோடு வாய்மை கருணை அகிம்சை அறநெறிகளை மனித வாழ்வின் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் தத்துவமாக பிரசாரப்படுத்திய புத்த சமயத்தில் தன்னை இணைத்துக் கொண்டதோடு அந்தச் சமயம் உலகப் பெரும் சமயமாக வளர்வதற்குக் காரணமானார். அன்றைய காலகட்டத்தில் ஒரு பெண்ணை புத்தசமயத்தைச் சேர்ந்த ஒருவன் மானபங்கப்படுத்தினான் என்ற குற்றத்திற்காக காஷ்மீரில் ஆட்சி செய்த கின்னர என்ற அரசர் அந்த புத்த சமயிக்கு மரண தண்டனை விதித்ததுடன் ஆயிரக்கணக்கான விகா ரங்களை அழித்ததுடன் அவர்கள் வாழ்ந்த கிராமங்களைக் கைப்பற்றி பிராமணர்களிடம் ஒப்படைத்ததாகவும் ஒரு வரலாறு உண்டு. இந்த நிலைப்பாடு வட இந்தியாவை விட்டு புத்தசமயம் விடைபெற்றது என்று நாம் கருதின் தவறில்லை. அதனால் தான் புஷ்யமித்திரா அசோகரை போரில் வெற்றி கொள்ள முடிந்ததுடன் அவர் கட்டிய 84000 ஆயிரம் புத்த தூண்களும் நிர்மூலமாகக் காரணமாகியது. அப்படியொரு நிலைமை இலங்கையில் புத்த சமயத் திற்கு வரக்கூடாது. சிங்கள மக்கள் தங்கள் சமய வழியில் தங்கள் நாட்டில் வாழ வேண்டும். சிங்கள அரசபடைகளுடன் தான் போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுத்தால் அவர்கள் துன்பியல் வாழ்விற்குள் தூக்கி வீசப்படுவார்கள் எனவே அப்படிப்பட்ட போர் வேண்டாம் என்று மறுக்கிறார் பிரபாகரன் அவர்கள். தமிழர்களும் சிங்களவர்களும் தங்கள் தங்கள் நாடுகளில் சுதந்திர மாக நட்புணர்வுகளுடன் வாழ வேண்டும் என்ற தலைவர் பிரபா கரன் அவர்களின் மனநிலை சமாதானக்கதவுகள் என்றும் திறந்திரு க்கின்றன என்ற கூற்றாக வெளி வருவதைக் காண்கின்றோம்.

ஆனால் தற்போதைய சிங்கள அரசின் அரைகுறைத் தீர்வுத் திட்டத்தைக் கூட ஆதரிக்க விரும்பாத நிலையில் புத்த தேரோக்கள் செயற்படுவதை யும் நாம் கவனித்தல் வேண்டும். அரசின் தீர்வுத்திட்டம் நாட்டை துண்டாடி விடும் என்பதாலேயே நாம் அதை எதிர்க்கின்றோம் என்று ஐக்கிய பௌத்த சிங்கள அமைப்பின் தலைவர்களின் ஒருவரான வண சோபிததேரோ தெரிவிப்பது மிகவும் கடுமையான வகுப்பு வாதத்தையே காட்டுகின்றது. அரசின் தீர்வுத் திட்டம் எங்கள் சகோதரர்களான தமிழ் மக்களை எங்களிடமிருந்து அப்புறப்படுத்தி விடும் என்றே நாம் கவலைப்படுகின்றோம் என்று தேரோ கூறியிருப்பின் புத்தர் போதித்த மனித நேயத்தை நாம் அங்கே காணலாம்.

கௌதம புத்தர் இலங்கைக்கு மூன்று தடவைகள் விஜயம் செய்தார் என்றும் அந்த மூன்று தடவையும் ஆகாய மார்க்கமாகப் பறந்து சென்று திரும்பினார் என்றும் மகாவம்சம் என்ற சிங்கள காவியம் கூறுகின்றது. ஆயினும் இந்தச் செய்திக்கு பௌத்தபீடக நூல்களிலா வது அவற்றின் உரைகளிலாவது எதுவித ஆதாரமும் கிடைக்க வில்லையென கௌதம புத்தர் அடிச்சுவட்டில் என்ற ஆய்வு நூலை எழுதிய சோ.சிவபாதசுந்தரம் அவர்கள் தெரிவிக்கின்றார். எனவே புத்த தத்துவமாக விளங்கும் மகாவம்சம் புத்தரின் பெயரால் வரையப்பட்ட பொய் விளக்கம் எனக் கருதின் தவறில்லை. அத்தகைய நூல்வழி வாழும் சிங்கள அரசபடைகளை வென்று தமிழர் ஆட்சியை தமிழர் கள் நிறுவி விடலாம். ஆனால் சிங்கள மக்கள் அஞ்ஞானிகளாகவே வாழ வேண்டும் அந்த வாழ்வு போரின் மூலம் நிர்ணயிக்க முடியாது. அத்த கைய சிங்கள அரசுகளின் பொய்களை உடைக்க வேண்டும் அதை ஆயுத பலத்தால் உடைப்பதைவிட அறிவுப்பலத்தால் உடைத்தல் வேண்டும். எனவே தான் பிரபாகரன் அவர்கள் சிங்கள அரசபடைகளுடன் போர் புரிவதை விட ஆயுதமின்றியும் எதிர்பு இல்லாமலும் நான் அவர்களை அழிக்க விரும்புகின்றேன் என்கிறார். அவருக்கு நிச்சயம் தெரியும் தமிழர்களை சிங்கள அரசபடைகள் அழித்தொழிக்கவோ வெற்றி கொள்ளவோ முடியாது என்று. காரணம் புலிப்படை மும் மலங் களையும் வென்று இலட்சிய வேள்விக்காய் நிற்கும் படை. கூலிப்படை கள் அவற்றை அழிக்க முடியாது. பிரபாகரன் அவர்கள் தன் உணர் வினை கிருஷ்ண பரமாத்மாவிடம் வெளிக் காட்டிவிட்டு அக்கினித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரில் அமர்ந்து விட்டார். அவரின் நிலைப்பாடு பற்றி தமிழ்ஞானி பின்வருமாறு விளக்கு கிறார்.

## பதம் 26

தமிழ்ஞானி கூறினார் (புலி வீரர்களைப் பார்த்து) பிரபாகரன் அவர்கள் போர்க்களத்தில் இவ்வாறு மொழிந்த பின் தன் சுடுகலனை விடுத்து நெருப்புத்தேரின் பீடத்தின் மீது அமர்ந்தார்.

## பொருளுரை

தமிழ்ஈழ மக்கள் அறப்போர் வழியில் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகள் தோல்விகளை அடைந்து விடவே அவர்களை ஆயுதப் போருக்கு அழைத்துச் செல்ல அவர்களை வழி நடத்த பிரபாகரன் அவர்களை பரம்பொருள் தேர்ந்தெடுத்தார். அவர்கள் இருவருக்கும் பரமாத்ம உலகில் நடந்த விவாதங்களையே வன்னி வனத்தில் முக்காலமும் உணர்ந்த தமிழ்ஞானி உரைக்கப் புலி வீரர்கள் மிகவும் பக்தி சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பரம் பொருளின் நெருப்புத் தேரில் இருந்தவாறு எதிரிகளைப் பார்த்த பிரபாகரன் அவர்கள் அவர்களை ஆயுதமின்றிக் கொலை செய்யும் நோக்குடன் சுடுகலனைத் தேரின் பீடத்தில் வைத்து விட்டு நிறைந்த நெஞ்சத்தோடு அமர்ந்து விட்டார் என்று தமிழ்ஞானி கூறவே இதைக் கேட்டுக் கொண்டிருந்த புலி வீரர்கள் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்ற ஆவல் மேலிட பரமாத்மாவை பிரார்த்தனை செய்ய தமிழ்ஞானியும் தன் ஐம் புலன்களையும் அடக்கி ஞான சொரூபியாக அமர்ந்திருக்கின்றார்.

**இத்துடன் களத்தில் கவனிப்பு என்ற தமிழர் குருசேஷ்திரக்கீதை முதல் அத்தியாயம் முற்றுப் பெறுகின்றது.**

**ஆசிரியர் பிற்குறிப்பு- இரண்டாம் அத்தியாயம் போர்ப்பணிப்பு என்ற தலைப்பில் ஈழநாடு (கனடா பதிப்பு) பத்திரிகையில் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த முயற்சிக்கு என் இதய தீபங்களான வாசகர்கள் கொடுத்த அன்பும் ஆதரவும் இனி வரும் தொடர்களுக்கும் கொடுத்து இதை ஒரு ஆன்மீக ஒளியாக உலகில் ஒளிபரப்ப முன்வர வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல பரம்பொருள் அருள்பாலிப்பார் என்ற பூரண நம்பிக்கையுடன் தமிழ்த்தாயினதும் தமிழ்த் தாயின் தவப்புதல்வன் மேதகு பிரபாகரன் அவர்களினதும் பாதங்களில் சமர்ப்பணம் செய்து மீண்டும் சந்திக்கும் நோக்கோடு விழைகின்றேன்.**

நன்றி

வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தேசத்தின் தலைவனை அவதாரபுருஷனாகக் காட்டும் கீதை

தமிழ் ஆக்க இலக்கிய உலகில் ஓர் உரத்த சிந்தனையாய் வித்தியாசமான வெளிப்பாடாய் தமிழர் குருஷேத்திரக்கீதை கிடைத்திருக்கிறது. இதனை ஓர் அரசியல் ஆன்மீகப் பார்வையின் **Master pease** உன்னதமான உச்சம் என்று குறிப்பிடுவது பொருத்தமானதே.

பாரதப் போரில் கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனன் என்னும் ஜீவாத்மாவுக்கு கூறியமை பகவத்கீதை ஆகியுள்ளது. அது பாரதப் போரின் போது நிகழ்ந்தவை. கி.மு. 1000க்கும் கி.பி.400க்கும் இடைப்பட்ட காலத்தில் பகவத்கீதை தோன்றியதாகவும் பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின்பே அது பிரபலமானது என்றும் வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தமிழர் குருஷேத்திரக்கீதை இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் உலகத்தில் உள்ள எல்லா நாடுகளும் அனைத்து அரசியல் தலைவர்களும் சிந்தனையாளர்களும் பொதுமக்களும் அவதானித்தும், அறிந்து கொண்டுமிருக்கும் நேரத்தில், எல்லோர் கண்களையும் காதுகளையும் கருத்தையும் போர் இருப்பில் இருத்தி வைத்திருக்கும் வேளையில் ஓர் உண்மையில் — நிஜத் தில் — யதார்த்தத்தில் இருந்து எழுந்துள்ளது. அது பொறிகளைக் கடந்து புலனுணர்வில் மட்டும் கலந்தது. இது பொறி புலன்கள் இரண்டிலும் கலந்து உறைவது. இந்த நூலில் அரசியல் என்பது அகப்பார்வையும் புறப்பார்வையும் இணைந்த நோக்கிலுள் பேசப்படுகிறது. இதனால் இந்நூல் அரசியல் ஆன்மீகப் பார்வையில் எழுதப்பட்டிருக்கின்றது.

அரசியலுக்குள் ஆன்மீகம் எப்படிக் கலக்கும்? ஆன்மீகத்துக்குள் ஆண்டவனே நீக்கமற நிறைந்திருப்பார். அரசியலுக்குள் ஆண்டவன் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அரசியல் அரசாக உருவாகும் போது சட்டமன்றம், நீதிமன்றம் போன்றவையே பிரதான இடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கொள்ளும். ஆலய மன்றங்களுக்கு அங்கே இடமில்லையே என்ற சந்தேகம் பலருக்கு எழுவது இயற்கையே. ஆன்மீகம் என்பது ஆன்மாவின் முதிர்ந்த நிலை, தியாகம், அஞ்சாமை, நேர்மை தயை இரக்கம் ஆகிய அருங்குணங்களின் ஆளுமையே ஆன்மீகம். ஆன்மீகத் திற்குள் ஆண்டவன் கடவுள் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் ஆன்மீகத்திற்குள் கடவுள் இல்லாமலும் இல்லை. பழுத்த ஆன்மீகத்துக்குள் பரசிவ விதை பார்வைக்குத் தெரியாமலே இருக்கும். ஒன்றும் நீ அல்லை அன்றி மற்று ஒன்று இல்லை யார் உன்னை அறியகிற்பாரே என்ற திருவாசகம் இங்கு நோக்கத்தக்கது.

ஆன்மீக உணர்வுகளில் ஊறியவர்கள் அன்பு செய்வார்கள். அரவணை ப்பார்கள். ஆறுதல் அளிப்பார்கள். குற்றங்களை மறந்து விடுவார்கள். உரிமையை வழங்குவார்கள். உண்மையை நிலை நிறுத்துவார்கள். நெஞ்சம் நெகிழ்வார்கள் நீதிக்காய் போராடுவார்கள். உண்மைக்கான போராட்டத்தில் அழிவை விலக்கி ஆக்கத்தையே நோக்கமாய் கொள்வார் கள்.

தமிழர் குருஷேத்திரக்கீதை தலைவர் பிரபாகரனை ஓர் ஆன்மீகப் போராளியாய் காண்பது மெச்சத்தக்கதோர் அம்சமாகும். அவர் ஈழத்தமிழர் இறைமைக்கும் உறைமைக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் சுயாதிபத் தியத்திற்கும் போராடும் போது அழிவை விலக்கிய ஆக்கத்திற்காய் அவாவி நிற்பதை நூலாசிரியர் பல இடங்களில் ஆதாரங்களோடு சுட்டு கிறார். சிங்கள அரசபடையுடன் சமர்புரியும் போது சிங்கள மக்கள் மீது தலைவர் பிரபாகரன் காட்டும் பரிவு ஆங்காங்கே கூறப்படும் போது அவருடைய ஆன்மீகத் தன்மை புலப்படுகிறது.

தலைவர் எல்லாம் வல்ல பரம் பொருளோடு இருப்பதால் மென்மை உள்ளம் உடையவராகப் பேசுகிறார் என்ற பகுதி பாராட்டுக்குரியது. ஆன்மீகத்தில் புத்தி நெகிழ்ந்து புந்தியாகும். புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே என்ற ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை துதியை எண்ணுக. பிற உயிர்களை அழித்தலுக்காக மனம் இளகி விருப்பமின்மை தோன்றுவதே வீரத்தின் விறல். ஒரு போர்வீரனின் பொறிபுலன்கள் ஆன்மீ கச் செழுமைகளாய் கசிந்து உருகுவது அவனுடைய ஆளுமை விரித் தியே. இது இல்லாத இடத்தில் ஆணவ முனைப்பு மேலோங்கி விடும். தலைவர் பிரபாகரனின் ஆன்மீக ஆளுமையை நூலாசிரியர் நேர்த்தியா கவே படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

இந்த நூலின் உரை நடைகுறித்தும் கூறுதல் சாலும். சித்ரா மணாளன் அவர்களின் உரைநடை பொருளொடு புணர்ந்த சித்திரமே. இந்த நடை யில் இனிப்பும் இருக்கும் கரிப்பும் இருக்கும். இதற்கு படைப்பாளனின் அக்கறையும் கரிசனையுமே காரணமாகும். தேவை என்பதே இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்ட குறிக்கோள். உரை நடை வரலாற்றில் இந்த நடையை யாருடைய நடையோடு ஒப்பிடலாம் என்ற யோசனை எழும் போது பாரதியார் கட்டுரைகள், புதுமைப்பித்தன் கட்டுரைகள், பெரியார் ஈ.வே.ரா கட்டுரைகள் நினைவுக்கு வருகின்றன. அவர்கள் ஒரு தேவையின் உந்துதலால் — தூண்டுகோலால் எழுதுகோலால் எடுத்த சூழ் நிலை கவனத்தில் தட்டுப்படுகின்றது. இந்த நூலாசிரியரும் தேவையின் தூண்டுகோலால் பகவத்கீதையின் உள்ளோட்டத்தை வேதாந்த சித்தாந்த நோக்கில் வெள்ளோட்டம் ஆக்கியுள்ளார். சித்ராமணாளன் அவர்களை ஒரு சிந்தனைச் சிற்பி என்று ஏற்குமளவுக்கு இதன் கொள்கலம் நிரம்பி யுள்ளது

இவ்வாசிரியரின் இயல்பு போர்ப்பறை தட்டுவது அன்று. சமாதான அறைகூவலை அவாவுவதே. ஆயுதம் இல்லாது எதிரிகளை அழிப்பேன் என்று தலைவர் பிரபாகரன் அவர்கள் கண்ணபிரானுக்குச் சொல்லும் இடமிருக்கிறதே இது இந்த நூலின் மகுட வாசகம். அரசியல் ஆன்மீக சிந்தனையின் முந்துவிதானம். ஆன்மீக சக்தியின் சரியான வீச்சு.

திருஞானசம்பந்தர் வரலாற்றிலே அவர் தந்தையாரான சிவபாதஇருதயர் தன் மகன் சம்பந்தன் சமணர்களை வெல்ல வேண்டும் என்றே இறை வனைப் பிரார்த்தனை செய்தார். அதே போல் இந்தக் கீதையில் தமிழர் யுத்தம் தலைவர் பிரபாகரனா லேயே வெல்லப்பட வேண்டும் என்றே பிரார்த்தனை செய்கிறார் இந்நூல் ஆசிரியர். இக்கீதையை இதன் மகத்தான அர்த்தத்தில் புரிந்து கொள்வோம்.

**- திருநீலகண்டன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவனே!

பார்த்திபனும் அவனே
பரந்தாமனும் அவனே
சேர்த்துப் பார்த்தாலே
செம்மலைத் தெரியும்
தேரோடும் அர்ச்சுனனைத் தெரிகிறதா?
போரின் கீதையைக் கூறும்
பெருமானைத் தெரிகிறதா?
தெரிகிறதா?
ஆம். சேர்த்துப் பாருங்கள்
செம்மலைத் தெரியும்
பிரபாகரனே அவன்.
போரின் தத்துவவாதியும் அவனே
போரின் வித்துவவாதியும் அவனே
பொய்யுருவே கொண்டவரை
கைகளிலே அணைக்க முடியுமா?
அதனாலே தான்
இனவாதப் பெரும்பகைக்கு அவன்
ஏவுகணையாக இருந்து கொள்கிறான்
தன்னைக் கொல்லவரும் பசுவுக்கு அல்ல
தன் இனத்தின் மீது பாயும்
இனவாதிகளுக்காகவே அவன்
புலிப்பாய்ச்சல் நடக்கிறது
அல்லல் பட்டு ஆற்றாது எழுந்த
சமுதாயத்தின் பார்த்திபனும் அவனே
போர்த்திறனின் அர்ச்சுனனும் அவனே
குருஷேத்திரக் கீதையல்ல — நம்முடை
இருப்பின் வேரிலே ஏந்தலைக் கண்ட
சித்ராமணாளனே நீரே இந்தக்
கீதையின் விதுரன்

புதியபாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குறிப்புக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org